# TAMIL GRAMMAR

WITH

*NANNÛL SUTRAMS AND EXPLANATIONS*

**Specially adapted**

FOR

HIGH AND MIDDLE SCHOOLS

BY

**V. SOUNDARARAJA AIYENGAR**

*Tamil Pundit*

TOWN HIGH SCHOOL, KUMBHAKONAM,

SON OF

**S. Venkatarama Aiyengar**

*Head Tamil Pundit.*

**Second Edition**

PRINTED AT THE "LORD RIPON PRESS" KUMBHAKONAM.

1897.

[*All Rights Reserved.*]

Price 8 Annas.

# OPINIONS.

KUMBAKONAM
*26th February 1896.*

MY DEAR SIR,

I have gone over some portions of the Tamil Grammar published by your son, which you had sent me. The arrangement of the subject is good and I find it will serve as a good introduction to the study of the Nannul. It may be used as a text-book in the Third Form, and I hope it will so be introduced and you will have a large and rapid sale.

Yours very sincerely
(Signed) N. KRISHNASAMI AIYANGAR B.A.B.L.,
*High Court Vakil.*

---

I have read carefully the "Tamil Grammar" prepared by Mr. Soundararaja Aiyangar, Tamil Pundit of the Town High School, Kumbakonam and consider it a useful Text-Book on Grammar for beginners in Tamil for whom it is intended. Under the rules prepared are printed the corresponding Nannool Sutrams also. It may with advantage be iutroduced in all public schools.

(Signed) V. SRINIVASA CHARLU,
*Sub Judge of*
KUMBAKONAM.

KUMBAKONAM
*1st March* 1896.

NATIVE COLLEGE
MADURA
*16th December* 1896.

MY DEAR SOUNDARARAJA AIYANGAR,

I went through a few of the sample pages of your Tamil Grammar, kindly sent to me and I think it may be used as a Text-Book from the First Form upwards. Even to those students who have to study the Nannool, your book will be a great help.

I am, yours truly
(Signed) S. VENKOBACHARIYAR B. A.,
*Principal.*

---

This small treatise of Tamil Grammar for beginners by Mr. V. Soundararaja Aiyangar of the Town High School, Kumbakonam will, I believe, form a pretty good introduction to the study of Nannool. It may be safely put into the hands of Middle School students, and even High School students may read it with advantage.

(Signed) S. NARAYANASAMI AIYAR B. A.,

KUMBAKONAM COLLEGE
*19th December* 1896.

*Asst. Lecturer, Govt. College*
KUMBAKONAM.

*20th December* 1896.
Town High School
KUMBAKONAM.

Mr. V. Soundararaja Aiyangar deserves the best thanks of the teachers and pupils of the Tamil Districts for his compilation of Tamil Grammar. It is a work of thorough accuracy, and very clear in the mode and language of treatment. It is well adapted for all the Forms of a high school and is now used as the Text-Book in the 2nd, 3rd, and 4th Forms of the Town High School.

(Signed) S. KRISHNASAMI AIYAR B.A.,
*Headmaster.*

---

I thank you for the specimen copy of your Grammar, so far as a cursory reading enables me to judge, I consider the book a useful one. It is written in an easy and readable style, and seems to be free from unnecessary details. I am of opinion that it may be used with advantage by boys in the Lower and Upper Departments of schools. The author seems to have bestowed great labor on the compilation of this small volume. The book promises to well serve the object

for which it is intended. I shall recommend it to my students.

(Sd.) Rao Bahadur, S. APPU SASTRI B. A.
*Manager & Headmaster,*
*26th Dec. 96.* Native High School, Kumbakonam.

---

Kumbakonam.
27-12-96.

Dear Sir,

I have read your Balabotha Ilakkanam, and consider that it will be very useful to those who want to study the "Nannool".

Yours sincerely
(Signed) V. K. RAMANUJACHARI,
*First Assistant*
Revenue Secretariat, Madras.

---

Tanjore
30-12-1896.

I have looked over Soundararaja Aiyangar's Tamil Grammar and consider it a useful introduction to the study of Tamil Grammar.

(Signed) L. C. WILLIAMS,
*Asst. Inspector of Schools,*
Tanjore, Trichy Division.

K. H. SCHOOL TANJORE
*30th December* 96.

DEAR SIR,

I am glad that you have brought out a second edition of your useful work on Tamil Grammar. I have not had time enough to go through the whole book. I just went through some of the important portions of it and I am glad to note that it will be highly valuable to pupils of Secondary Schools. I intend introducing it in the school under my management early next year.

Yours sincerely

(Signed) K. GOPALASAMI AIYANGAR B. A.

---

திருவல்லிக்கேணி,
5–1–97.

கனம்பொருந்திய கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும், எனது இஷ்ட நண்பருமாகிய ஸ்ரீ. உ. வே. சௌந்தரராஜ ஐயங்கார்ஸ்வாமி அன்புடன் அனுப்பிய இலக்கணபுத்தகம் வந்தது. அதனைப்பார்த்தவரையில் அது மிகநன்றாகவிருக்கிறதாகவே எனக்குத் தோன்றுகிறது. மகாலிங்கையரிலக்கணம்போல மிகச்சுருக்கமாகவும் நன்னூல் போலச் செய்யுள் நடையாகவும் இல்லாமல் வசனநடையில் விரிவாக எழுதப்பட்டுள்ள இந்நூல், அவற்றில் இல்லாத சில விஷயங்க

ளுடனும் நன்னூற்குத்திரங்களுடனும் பதிப்பிக்கப்பட்டுள்ள தனுல், அவ்விரண்டு நூல்களையும் படித்தற்குரிய இருவகை வகுப்பு மாணுக்கர்களுக்கும் நன்கு பயன்படத்தக்கதென்ப தற்கு, சிறிதும் ஐயமில்லை. அன்றியும், பரம்பரையாகத் தமிழ்ப்பயிற்சியும் போதனுசக்தியும் உடைய நூலாசிரியரவர் கள் அருமையாக எழுதி வெளியிட்டது, பாடசாலைகளிற்படிக் கும் பிள்ளைகளெல்லோர்க்கும் உபயோகமாகவிருக்குமென் பது பிரசித்தமான விஷயமே. இத்தகையநூலைப் பலரும் வாங்கிப்படித்தும் படிப்பித்தும் பயன்படுத்துவாராயின், அது எனக்கு மிகத்திருப்திகரமாம்.

இங்ஙனம்
அன்புள்ள,
(Sd.) ஸ்ரீ. உ. வே. வை. மு. சடகோபராமாநுஜாசாரியர்,
தமிழ்ப்பண்டிதர், வெஸ்லியன் மிஷன்காலேஜ்,
சென்னபட்டினம்.



# Portions Recommended.

WHILE it is desirable that the articles marked M, the sutrams generally, and the foot-notes in small type are best omitted in the lower classes and reserved for the High School Department, the author humbly thinks that the following portions may be recommended for the I, II, & III Forms.

| | | |
|---|---|---|
| I | Form. | எழுத்தியல், பதவியல். |
| II | ,, | பெயரியல், வினையியல். |
| III | ,, | புணரியல், பொதுவியல், &c. |

## " அன்பர்களே "

ஈண்டு இலக்கணம் இன்றென நவீனமாய் இச்சிறு புத்தகத்தை இயற்றினனென எண்ணற்க. அற்றேல் இஃது எற்றுக்கோவெனின், முன்னோர் மொழிந்திரா நின்ற அரியவசன நடையை ஆங்கிலேய பாடசாலைக் கீழ்வகுப்புக்களில் இளைஞர்கள் வருடக்கணக்காய்க் கற்றும், நன்னூலைக்கண்டதும் பெரும்பான்மையாய் முந்திக்கற்றது இச்சூத்திரப்பொருளேயெனக் கனவுந் தோன்றாது, வேறு ஏதோ புதியவிடயமெனக்கருதிப், பொல்லா நூலெனக்கூறி, மலைவுகொள்ளல் என்னுடைய அனுபவமன்றி, என்போன்ற பலருங் கூறக் கேட்டு, அம்மலைவு நீங்குமென எண்ணியே, சிறுவர்க்கின்றியமையாதுள்ள சூத்திரங்களின் கருத்து, பொழிப்பு, காட்டு முதலியவற்றை முன்னோர் மொழிந்தவாறே முறையே ஒருவாறாய் எனதுசிற்றறிவிற்கேற்ற வண்ணம் எளிய நடையில் முதலிலும், அவ்வவ்வசனத்திற்குரிய சூத்திரங்களை ஒவ்வொன்றன் இறுதியிலும் வரைந்திருக்கின்றனன். இன்னணம் முதலில் எழுதப்பட்டுள்ள வசனத்தைக் கீழ்வகுப்புக்களிலேயே ஓதியுணர்ந்து, சூத்திரத்தையும் சிறிது சிறிதாய் மனனப்படுத்தி வருவாரேல், அவ்வசனத்திற்கும் சூத்திரத்திற்கும் உள்ள ஒற்றுமை வரவர எளிதில் விளங்கி, மேல்வகுப்பிற்கு வரும்பொழுது அரியவையும் எளியவையாகி, இலக்கணப் பயிற்சி அதிகமாமென நம்புகின்றனன்.

இங்ஙனம், பிள்ளைகட்குப் பயன்படுமெனத் தோன்றுந் திருத்தங்களை எவரேனும் அன்புகூர்ந்து அறிவிப்பரேல் நன்கு பாராட்டி மறுபதிப்பில் பதிப்பிப்பன். **V. S.**

# பாயிரம்.

1. மாடத்திற்குச் சித்திரமும், மாநகர்க்குக் கோபுரமும், நல்லாட்கு அணியும்போல் பாயிரம் என்பது நூலுக்குமுன் கூறப்படுவதாம்.

பாயிரத்தின் பரியாய நாமங்கள்—முகவுரை, *பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை.

* பிரதிகம் என்பது பதிகம் என நின்றது.

சூத்திரம். முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம். 1.

2. அப்பாயிரம்—பொது, சிறப்பு என இருவகையாம்.

சூ-ம். பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே. 2.

3. பொதுப் பாயிரமாவது—எல்லா நூன்முகத்தும் உரைக்கத்தக்கதான நூலினது வரலாறும், ஆசிரியனது வரலாறும், அவ்வாசிரியன் மாணாக்கனுக்கு நூலைச்சொல்லும் வரலாறும், மாணாக்கனது வரலாறும், அவன் கேட்கும் வரலாறுமாகிய ஐந்தையும் விளங்கச் சொல்வதாம்.

சூ-ம். நூலே நுவல்வோ னுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்று மைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்.

4. சிறப்புப் பாயிரமாவது—நூலைச் செய்தவன் பெயரும், நூல் வந்த வழியும், நூல் வழங்கும் நிலத்தின் எல்லையும், நூலின் பெயரும், தொகுத்தல் முதலிய * நூற்கட்டும், நூலிற் சொல்லப்பட்ட பொருளும், இந்நூல் கேட்டற்குரியார் இவரென்பதும், நூல் கற்றதனாற் பெறப்படும் பயனுமாகிய எட்டு வகைப் பொருள்களையும் விளங்க உணர்த்துவதாம்.

* நூற்கட்டு-தொகுத்து முடித்தல், விரித்து முடித்தல், தொகுத்து விரித்து முடித்தல், மொழிபெயர்த்து முடித்தல் முதலியவாம்.

நூ-ம். ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே. 4.

[ நூல் இன்னது என்பது. ]

5. பொதுவும் சிறப்புமாகிய இருவகைப் பாயிரத்தையும் முன்னுடைத்தாகி, முதனூல் முதலிய மூன்றனுள் ஒன்றாகி, * நான்கு பொருட்பயனுடனே, § எழுவகை மதத்தையும் தழுவிப், × பத்துக்குற்றத்தையும் நீக்கிப், † பத்து அழகையும் உடைத்தாகி, ○ முப்பத்திரண்டு உத்தியையுங் கொண்டு, இயல், அதிகாரம் முதலிய அவயவங்களுடனே சூத்திரமும், காண்டிகை, விருத்தி என்ற உரையுமாகிய (13) விகற்ப நடையை உடையது நூலாகும்.

சூ-ம். நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ
டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்பநடை பெறுமே.

* நான்கு பொருள்,—

சூ-ம். அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே.

§ எழுமதம்,—

சூ-ம், எழுவகை மதமே யுடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅ னாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோ ளொருதலை துணிவே
பிறர்நூற் குற்றங் காட்ட லேனைப்
பிறிதொடு படாஅன் றன்மதங் கொளலே.

× பத்துக்குற்றம்,—

சூ-ம். குன்றக் கூறன் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை
யென்றிவை யீரைங் குற்ற நூற்கே.

† பத்து அழகு,—

சூ-ம், சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்

ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே.

○ முப்பத்திரண்டு உத்தி,—

சூ-ம். நுதலிப் புகுத லோத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டல் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்தல் தொடர்சொல் புணர்த்தல்
இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந் தொழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்
உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்
ஒருதலை துணிதல் எடுத்துக் காட்டல்
எடுத்த மொழியின் எய்த வைத்தல்
இன்ன தல்லது இதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
பிறநூன் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்கம் மிகவெடுத் துரைத்தல்
சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்
ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்
உய்த்துணர வைப்பென உத்தியெண் ணான்கே. 5.

6. நூலானது முதனூல், வழிநூல், சார்பு நூல் என மூவகையாம்.

சூ-ம். முதல்வழி சார்பென நூன்மூன் றாகும். 6.

7. முதனூலானது:— கடவுளாலும் அவர் அருளை அடைந்த பெரியோராலும் உயிர்களின் பொருட்டுச் செய்யப்பட்ட நூலாம்.

உதாரணம். அகத்தியம்; பாணினீயம்.

சூ-ம். அவற்றுள்,—

வினையி னீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும். 7.

8. வழி நூலாவது:—முதல் நூலை ஒத்துச் சிறிது வேறுபாட்டோடு செய்யப்பட்ட நூலாம்.

உ-ம். தொல்காப்பியம்.

சூ-ம். முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும். 8.

9. சார்பு நூலாவது:— முதல்நூலையும், வழி நூலையும் சிறுபான்மை ஒத்துப் பெரும்பான்மை ஒவ்வாதிருப்பதாம்.

உ-ம். நன்னூல்.

சூ-ம். இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ லாகும். 9.

10. சூத்திரமாவது:— சில எழுத்துக்களால் பல பொருளை அடக்கிக் கூறப்படுவதாம்.

சூ-ம். சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம். 10.

11. உரையானது:— காண்டிகை, விருத்தி என இருவகையாம்.

காண்டிகையானது:— கருத்துரை, பதவுரை, உதாரணம், வினா, விடை ஆகிய ஐந்தும் அடங்கியதாம்.

சூ-ம். கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை யாக்க லானும்
சூத்திரத் துட்பொரு டோற்றுவ காண்டிகை. 11.

12. விருத்தியானது:— காண்டிகை உரையோடு விசேட உரையைத் தன்னுரையானும், ஆசிரிய வசனமாகிய மேற்கோளானும் உரைக்கும் விரிவுரையாம்.

சூ-ம். சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்
கின்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐய மகலவைங் காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை யெஞ்சா திசைப்பது விருத்தி. 12.

[பாடங் கேட்டலின் வரலாறு.]

13. கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்

குணத்தொடு பழகி யவன்குறிப்பிற் சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்னவார் வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர். 13.

14. நூல்பயி லியல்பே நூவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும். 14.

15. ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே. 15.

16. முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும். 16.

17. ஆசா னுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும். 17.

18. அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
செல்வி துரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும். 18.

19. அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே. 19.

# இலக்கணம்.

லக்ஷணம் என்கிற *வடமொழியானது இலக்கணம் எனத் † தென்மொழியில் வழங்குகின்றது.

1. இலக்கணம் என்பது உலகவழக்கத்தையும் செய்யுள்வழக்கத்தையும் தழுவிப் பாஷையைத் திருத்தமாய்ப் பேசவும் எழுதவும் கற்பிக்கிற நூலாம்; அது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென ஐவகைப்படும். 20.

2. இங்ஙனம் எழுத்திலக்கணத்தை எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபுபுணரியல் என்ற ஐந்து இயல்களாலும்; சொல்லிலக்கணத்தைப் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என்ற ஐந்து இயல்களாலும் சொல்லப்படும்.

* வடமொழி=ஸம்ஸ்கிருதம்.

† தென்மொழி=தமிழ்: திராவிடம் என்றது-திரவிடம்-திரமிடம் திரமிளம்-தமிளம்-தமிள்-தமிழ் என வந்தது. டகரத்திற்கு ளகரமும், ளகரத்திற்கு ழகரமும் பேதமின்றிவரும். 21.

## எழுத்திலக்கணம்.

### எழுத்தியல்.

[எழுத்து இன்னது என்பதும் அதன் வகையும்.]

1. மொழிக்கு முதற்காரணமாயும் * அணுத்

திரளின் காரியமாயும் வருகிற ஒலியே எழுத்தாகும்; அவ்வெழுத்து முதல் சார்பு என இருவகையாம்.

* அணுத்திரள் = ஒலிநுட்பம்.

சூ-ம். மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

[முதலெழுத்து-30.]

2. அகரம் முதல் ஔகாரம் இறுதியாகிய A உயிர் 12-ம், ககரம் முதல் னகரம் இறுதியாகிய B மெய் 18-ம், ஆகிய 30-ம். C முதலெழுத்தாம்.

A உயிர் = தானே ஒலிக்கும் வல்லமை உடைமையின் உயிரெழுத்து எனப் பெயர்பெறும்; வேறு பெயர்கள்-ஆவி, சுரம், அச்சு.

B மெய் = உடல்போல உயிரை யேற்றுக் கொள்ளுதலாலும், தானே ஒலிக்கும் வன்மை இன்மையாலும் மெய்யெழுத்தெனப் பெயர் பெறும்: வேறு பெயர்கள்-ஒற்று, உடல், உடம்பு, புள்ளி, வியஞ்சனம், அல்.

C முதலெழுத்து = பாஷைக்கு முதற்காரணமாயிருத்தலின் முதலெழுத்தெனப் பெயர்பெறும்.

சூ-ம். உயிரு முடம்புமா முப்பது முதலே.

சூ-ம். * அம்முத லீரா றாவி கம்முதன்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்.

* அ + முதல் = அம்முதல் என (உயிர்-பு-11 C விதிப்படி) இரட்டியது.

[சார்பெழுத்து 10–வகை.]

3. உயிர்மெய், முற்றாய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் ஆகிய 10-ம் A சார்பெழுத்தாம்.

A சார்பெழுத்து = உயிரையும் மெய்யையும் சார்ந்து வருதலின் சார்பெழுத்தெனப் பெயர்பெறும்.

சூ-ம். உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
றனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும். 24.

4. உயிர் மெய் என்றவற்றுள்—அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்தும் A குற்றெழுத்தாம். 1-மாத்திரை B.

A குறுமை + எழுத்து = குற்றெழுத்து—குறைவாகிய ஒலியை உடைய எழுத்து.

B மாத்திரை என்பது எழுத்துக்களை உச்சரிக்கும் நொடிப்பொழுதும் இமைப்பொழுதுமாகிய கால அளவாம்.

சூ-ம். அவற்றுள்,—
அ இ உ எ ஒக் குறி லைந்தே. 25.

5. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழும் A நெட்டெழுத்தாம். 2—மா.

A நெடுமை + எழுத்து = நெட்டெழுத்து—நீட்சியாகிய ஒலியை உடைய எழுத்து.

சூ-ம். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில். 26.

6. அ, இ, உ என்ற மூன்றும் மொழிக்குப் புறத்தும், அகத்தும் முதலில் வந்து சுட்டுப் பொருளைத் தரின் சுட்டெழுத்தாம்.

உ-ம் A புறச்சுட்டு—அக்-கொற்றன். இக்-கொற்றன், உக்-கொற்றன்;

B அகச்சுட்டு—அவன், இவன், உவன்.

A புறச்சுட்டைப் பிரித்தால் பொருள் தரும்.

B அகச்சுட்டைப் பிரித்தால் பொருள் தராது.

அக்கொற்றன் என்ற விடத்து சுட்டெழுத்தாகிய அகரத்தைப் பிரித்து மிஞ்சிய கொற்றன் என்றதற்குப் பொருள் உண்மையையும் அவன் என்றதில் அகரத்தைப்பிரித்து மிஞ்சிய வன் என்றதற்குப் பொருள் இன்மையையும் அறிக. இவ்வாறே வினாவுக்கும் கொள்க.

சூ-ம். அ இ உம்முதற் றனிவரிற் சுட்டே. 27.

7. மொழிக்கு அகத்தும் புறத்தும் முதலில் எகரமும் யாவும், ஈற்றில் ஆகாரமும் ஓகாரமும், இவ்விரண்டிடத்திலும் ஏகாரமும் வினாப்பொருளை உணர்த்திவரின் வினாவெழுத்தாம்.

உ-ம். அகவினா—எவன், ஏவன், யாவன்.

புறவினா—எக்-கொற்றன், யாங்—ஙனம், கொற்றனா, கொற்றனோ, கொற்றனே.

எகரம் முதலில் அகவினாவாக மாத்திரம் வரும்.

ஈற்றில் வருவனவெல்லாம் புறவினாவாக வரும்.

சூ-ம். எயா முதலும் ஆ ஓ வீற்றும்
ஏயிரு வழியும் வினவா கும்மே. 28.

8. மார்பிலிருந்து உண்டாகும் கடுமையாகிய ஒலியை உடைய க, ச, ட, த, ப, ற என்ற ஆறும் A வல்லினமாம். ½-மா.

A வன்மை + இனம் = வல்லினம்: இனம் = கூட்டம்.

சூ-ம். வல்லினம் கசடத பறவென வாறே. 29.

9. மூக்கிலிருந்து உண்டாகும் மென்மையாகிய ஒலியை உடைய ங, ஞ, ண, ந, ம, ன என்ற ஆறும் B மெல்லினமாம். ½-மா.

B மென்மை + இனம் = மெல்லினம்.

சூ-ம். மெல்லினம் ஙஞணந மனவென வாறே. 30.

10. உயிரைப்போல் கண்டத்திலிருந்து உண்டாகும், மேலிரண்டையுஞ் சாராத நடுத்தர ஒலியை உடைய ய, ர, ல, வ, ழ, ள என்ற ஆறும் இடையினமாம். ½-மா.

சூ-ம். இடையினம் யரலவ. ழளவென வாறே. 31.

[இன எழுத்து.]

11. குறிலுக்கு நெடிலும், வல்லினத்திற்கு மெல்லினமும், இனமில்லாத ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனமாம்; இடையினம் ஆறும் ஓரினமாம்.

சூ-ம். ஐஔ இ உச் செறிய முதலெழுத்
திவ்விரண் டோரின மாய்வரன் முறையே. 32.

[உயிர் மெய் 216.]

12. பதினெட்டு மெய்மேலும் பன்னிரண்டு உயிரும் தனித்தனி கூடி ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாக உயிர்மாத்திரையே மாத்திரையாய் வரும் 216-ம். உயிர்மெய்யெழுத்தாம். (குறில் $18\times5=90$.) (நெடில் $18\times7=126$.)

உ-ம். ($\frac{1}{2}$-மா க்+அ 1-மா=க 1-மா)
($\frac{1}{2}$-மா க்+ஆ 2-மா=கா 2. மா.)
உயிருடன்கூடிய மெய்க்கு மாத்திரை இல்லை.

சூ-ம். புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை யுயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்.

[முற்றாய்தம்-8.]

M. 13. குற்றெழுத்திற்கும் உயிரொடு புணர்ந்த வல்லெழுத்து 6-க்கும் இடையேவரும் ஆய்தத்துடன், புணர்ச்சி விகாரத்தாலும் செய்யுள் விகாரத்தாலும் வரும் A ஆய்தமுங்கூடி முற்றாய்தம் எட்டாம். $\frac{1}{2}$-மா.

உ-ம். எஃகு, B கஃசு, இருபஃது, C பஃறி—வல்லெழுத்துடன் வந்தன.

அவ்+கடிய=அஃகடிய—புணர்ச்சி விகாரத்தால் வந்தது.

அ+கான்=அஃகான்—செய்யுள் விகாரத்தால் வந்தது.

A படைதாங்கியாகிய கேடகம் என்ற கருவியை வடிவால் ஒத்திருத்தலின் ஆய்த எழுத்தெனப் பெயர்பெறும்.

B கஃசு=ஒரு பலம், C பஃறி=பன்றி.

சார்பெழுத்தின் விரியின் தொகையை பின்வருவனவற்றோடு கூட்டிக்காண்க. 216+8=224.

சூ-ம். குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

[உயிர் அளபெடை. 21.]

M. 14. செய்யுளில் ஓசை குறையின் மொழி முதல், இடை, கடை என்றமூவிடத்தும் நெடில் ஏழும் தமக்குச் சொன்ன இரண்டு மாத்திரையைக் கடந்து ஒலிக்கும்; ஔகாரம் இடையிலும் கடையிலும் வராது; ( 3×7=21—2=19. ) செய்யுள் ஓசை குறையாத பொழுதும் காதுக்கு இனிய ஓசையைத் தரக் குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசையாம்; (19+1=20.) பெயர்ச்சொல், வினையெச்சம் முதனிலையனவாக மாறி அளபெடுப்பது சொல்லிசையாம்; (20+1=21.) அள்பெழுந்த நெடிலுக்குப் பின்னே அதற்கு இனமாகிய குறில் அடையாளமாக வரிவடிவில் வரும்.

உ-ம். "ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்." ஓஒதல், யாஅதும்

"உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு." உறாஅர்

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.". படாஅ என முறையே
மொழி மூவிடத்தும் அளபெழுந்தன.

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை." கெடுப்பதும் என்பது—கெடுப்பதூம்—கெடுப்பதூஉம் எனக் குறில் நெடிலாகிப் பின்னர் அளபெழுந்தது—இன்னிசை அளபெடை.

"உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்." நசை—நசைஇ எனச் சொல்மாறி அளபெழுந்தது—சொல்லிசை அளபெடை—3-மா.

செறாஅஅய்—ஈரளபெடை 4-மா. 224+21=245.

காரியம் உள்வழிவரும் அளபெடையைச் செயற்கை அளபெடையென்றும், காரியம் இல்வழிவரும் அளபெடையை இயற்கை அளபெடையென்றும் கூறுவதும் உண்டு.

கூ-ம். இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடி
லளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே 35.

[ஒற்றள பெடை 42.]

ம. 15. ஒரு குறிலுக்கும், இருகுறிலுக்கும் இடையிலும் கடையிலும், வரும் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் என்ற பத்தொற்றும், ஆய்தமும் செய்யுளில் ஓசை குறையின், தமக்குச் சொன்ன அளவைக் கடந்து ஒலிக்கும்; (11×4=44.) ஆனால், ஆய்தம் கடையிரண்டிடத்திலும் வராது; (44—2=42.) அளபெடுத்த ஒற்றே வரிவடிவில் அதன்பின் அடையாளமாக வரும்.

உ-ம். 1. " எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா
னெங்ங் கெனத்திரிவா ரின்." எங்ங்கு;

2. " எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு." எஃஃகு, வெஃஃகு
என, ஒரு குறிலுக்கு இடையிலும்;

1. " இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்." இலங்ங்கு, கலங்ங்கு;

2. " விலஃஃகி வீங்கிரு ளோட்டுமே மாத
ரிலஃஃகு முத்தினினம்." விலஃஃகு, இலஃஃகு
என, இருகுறிலுக்கு இடையிலும்;

1. " அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்புசெய்து
நங்ங்களங் கறுப்பா நாம்." அம், நம் என்றவை
அங்ங், நங்ங் எனத்திரிந்து, ஒருகுறிற்குக்கடையிலும்;

1. "மடங்ங் கலந்த மனனே களத்து
விடங்ங் கலந்தானை வேண்டு." மடம், விடம் என்றவை மடங்ங், விடங்ங் எனத்திரிந்து, இருகுறிற்குக் கடையிலும் அளபெடுத்தன. 1-மா. 245+42=287.

சூ-ம். ஙஞண நமன வயலள வாய்த
மளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே. 36.

M. 16. மேற் கூறிய ஒற்றும், நெடிலும் A இசை, விளி, பண்டமாற்று முதலியவற்றில் முறையே 11-மாத்திரை 12-மாத்திரை ஈறாக அளபெழும்.

A இசை=இராகம்; இயல், இசை, நாடகம் எனத் தமிழ் மூன்று வகையாம்.

உ-ம். "உப்போஒஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போரீர் வேலி யுலகு." 5-மா.

"ஆரேஒஒஒஒ றென்பா னுடங்கிடைக்கு மென்முலைக்கு
மாரேமா லன்றளந்த மண்." 6-மா.

"கஃஃஃஃ றென்னுங் கல்லதரத்தம்."

"சுஃஃஃஃ றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை." 1½-மா.

சூ-ம். ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின். 37.

[ குற்றிய லிகரம் 37. ]

17. யகரம் வருமொழிக்கு முதலாகிவர, நிலை

மொழி ஈறாகி நின்ற குற்றியலுகரம் திரிந்த இகரமும், மியா என்னும் அசைச் சொல்லிலுள்ள இகரமும் குற்றியலிகரங்களாம். குறுமை+இயல்+இகரம்.

உ-ம். 1. நாகு+யாது=நாகியாது.
2. எஃகு+யாது=எஃகியாது.
3. வரகு+யாது=வரகியாது.
4. கொக்கு+யாது=கொக்கியாது.
5. குரங்கு+யாது=குரங்கியாது.
6. அல்கு+யாது=அல்கியாது.

கேண்மியா—½-மா. 287+37=324.

சூ-ம். யகரம் வரக்குற ளுத்திரி யிகரமு
மசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய.

[ குற்றியலுகரம் 36. ]

18. ஒரு குறிலிணையும் இரு குறிலிணையும் ஆக்கப் படாத மொழியிறுதி வல்லின மெய்யிலுள்ள உகரம் குறுகிக் குற்றுகரம் எனப் பெயர்பெறும்; அது ஈற் றெழுத்திற்கு அயலெழுத்தை நோக்கி நெடில், ஆய் தம், உயிர், வலி, மெலி, இடை என அறுவகையாம்; நெடிற்றொடர் ஒன்றும் ஈரெழுத்தால் வரும். ½-மா.

உதாரணம்.

1. நெடிற்றொடர். ஆடு (7) 4. வன்றொடர். கொக்கு (6)
2. ஆய்தத்தொடர். கஃசு (1) 5. மென்றொடர். குரங்கு (6)
3. உயிர்த்தொடர். வரகு (11) 6. இடைத்தொடர். சால்பு (5)

ஔகாரம் இடையிலும், வகரம் வல்லெழுத்தோடும் வாராவாதலின், உயிர்த்தொடரும் இடைத்தொடரும் எண்ணிக்கை குறைந்தன. நந்தை என்னும் மொழிமுதலினுள்ள உகரமும் குற்றுகரமாம். 324+36=360.

இக்குற்றுகரம் சிலவிடங்களில் புணர்மொழியிடைப்படின் கால் மாத்திரையாய்க் குறுகும்.

உ-ம், சுக்குக்கொடு; செக்குக்கணை. $\frac{1}{4}$-மா.

மற்றைய உகரம் முற்றுகரமாம்.

உ-ம். கு—ஒரு குறில் வல்லினம்.
கொடு—இருகுறில் வல்லினம்.
உருமு—மெல்லினம்.
சதவு—இடையினம்.
} ஒருமாத்திரை.

சூ-ம். நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே. 39.

[ ஐகாரக் குறுக்கம் 3. ஔகாரக் குறுக்கம் 1. ]

ஐ. 19. ஐகாரம் தன் பெயரைக் கூறும் பொழுதும் அளபெடுக்கும் பொழுதும் குறுகாமல், மொழிமுதல், இடை, கடைஎன்ற மூவிடத்தும் முன்னும் பின்னும் வரும் எழுத்துக்களின் தொடர்பால் மாத்திரையில் குறுகும்; ஔகாரமும் அவ்வாறே மொழி முதலில் குறுகும். மா-1.

உ-ம், ஐ, ஔ குறுகவில்லை. மா-2.
நசைஇ அளபெடை. மா-3.

ஐப்பசி, வலையன், குவளை—ஐ மூவிடத்தும் குறுகிற்று மா-1.

மௌவல்—ஔ முதலில் குறுகிற்று. 1-மா. 360+4=364.

யாப்பிலக்கணப்படி ஐகார ஔகாரங்கட்கு மொழி முதலில் ஒன்றரை மாத்திரையாம்.

உ-ம். "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்." ஐ—$1\frac{1}{2}$-மா.
"ஔவிய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்." ஔ—$1\frac{1}{2}$-மா.

சூ-ம். தற்சுட் டளபொழி யைம்மூ வழியு
நையு மௌவு முதலற் றாகும். 40.

[ மகாரக்குறுக்கம் 3. ]

சூ 20. ணகர னகரங்கட்குப் பின்னும் வகரத்திற்கு முன்னும் மகரம் மாத்திரையில் குறுகும். $\frac{1}{4}$-மா.

உ-ம். மருளும்—மருண்ம்; போலும்—போன்ம்; தரும்வளவன்; மகரம் மூவிடத்தும் குறுகிற்று. 364+3=367.

சூ-ம். ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்.

[ ஆய்தக் குறுக்கம்-2. ]

சூ. 21. தனிக்குறிலைச் சார்ந்த லகரமும் ளகரமும் ஆய்தமாய்த்திரியின் மாத்திரையிற் குறுகும். $\frac{1}{4}$-மா.

உ-ம். கல்+தீது=கஃறீது; முள்+தீது=முஃடீது.
லகரமும் ளகரமும் திரிந்து குறைந்தன.

367+2=369-சார்பெழுத்துக்கள்.

ஆக முதலும் சார்பும் 369+30=399.

சூ-ம். லளவீற் றியைபினு மாய்த மஃகும். 42.

[ மாத்திரை. ]

22. மாந்தருடைய இயல்பாக எழும் இமைப் பொழுதும் நொடிப் பொழுதும் ஒரு மாத்திரையாம்.

சூ-ம். இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை. 43.

23. நொடிக்க நினைத்தல் கால், விரலை ஊன்றல் அரை, முறுக்கல் முக்கால், நொடித்தல் ஒரு மாத்திரையாம்.

சூ-ம். உன்னல் காலே யூன்ற லரையே
முறுக்கன் முக்கால் விடுத்த லொன்றே. 44.

[ எழுத்துக்களின் மாத்திரை. ]

24. சூ-ம். மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையௌக் குறுக்க மொற்றள
பரையொற் றிஉக் குறுக்க மாய்தங்
கால்குறண் மஃகா னாய்த மாத்திரை. 45.

[ மொழிமுத லெழுத்துக்கள். ]

25. உயிர் 12-ம்; க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங், என்ற 10-மெய்யும் தம்மை ஏற்கும் உயிரோடு கூடி மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊர்தி, எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓசை, ஔவியம்; களி, சக்கை, தளிர், நலம், படை, மலை, வளம், A யவனர், B ஞமலி, அங்ஙனம்.

A யவனர் = சோனகர் — சித்திரகாரர். B ஞமலி = நாய்.

முன்னுள்ள (க, ச, த, ந, ப, ம என்ற) மெய் ஆறும் பன்னிரண்டு உயிரோடும் கூடி மொழி முதலில் வரும்.

சூ-ம். பன்னீ ருயிருங் கசதந பமவய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யு மொழிமுதல். 46.

26. உ, ஊ, ஒ, ஓ, என்ற நான்குமல்லாத எட்டு உயிரோடும் வகரம் மொழிக்கு முதலாம்.

உ-ம். வழி, A வாளி, B விளி, C வீழி, வெளி, வேளை, D வையம், வௌவால்.

A வாளி = பாணம், B விளி = அழை.
C வீழி = ஓர் செடி, D வையம் = பூமி.

சூ-ம். உ ஊ ஒஓ வலவொடு வம்முதல். 47.

27. அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்ற ஆறு உயிரோடும் யகரம் மொழிக்கு முதலாம்.

உ-ம். யவனர், யானை, யுகம், யூகி, யோகம், யௌவனம்.

சூ-ம். அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல். 48.

28. அ, ஆ, எ, ஒ என்ற நான்கு உயிரோடும் ஞகரம் மொழிக்கு முதலாம்.

உ-ம். ஞமலி, ஞாலம், A ஞெகிழி, B ஞொள்கல்.

A ஞெகிழி = கொள்ளிக்கட்டை, B ஞொள்கல் = சுருங்கல்.

சூ-ம். அஆஎ ஒவ்வோ டாகு ஞம்முதல். 49.

29. மூன்று சுட்டும் யாவினாவும் எகர வினாவு மாகிய இடைச்சொற்களின்பின் அகரத்தைக்கூடி ஙகரம் மொழிக்கு முதலாம்.

உ-ம். அங்ஙனம், இங்ஙனம்; உங்ஙனம்; யாங்ஙனம், எங்ஙனம்.

வகரம் எட்டு உயிரோடும், யகரம் ஆறு உயிரோடும், ஞகரம் நான்கு உயிரோடும், ஙகரம் சுட்டு வினாவோடும் மொழிக்கு முதலாகின்ற பெருமை சிறுமையையும், சந்ததத்தையும நோக்கியே எழுத்துக்களின் முறை, பிறழாமைவைத்திருப்பதாம்.

சூ-ம். சுட்டியா வெகர வினாவழி யவ்வை
யொட்டி ஙவ்வு முதலா கும்மே. 50.

[ மொழியிறுதி எழுத்துக்கள் 24. ]

30. 12-உயிரும் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற 11-மெய்யும், குற்றுகரமும் மொழிக்கு ஈறும்.

உ-ம். விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, கோ, கௌ; உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், ○ தெவ், வீழ், வாள், அஃகு.

○ தெவ் = பகை.

சூ-ம். ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
சாயு முகரநா லாறு மீறே. 51.

M. 31. குற்றுயிர் அளபெடையில் வரிவடிவில் அடையாளமாய்த் தனித்து ஈறும்; எகரம் மெய்யோடு ஈறாகாது; ஒகரம் நகரம் ஒன்றுடன் ஈறும்; ஔகாரம் ககர வகரங்களுடன் ஈறும்.

உ-ம். பலாஅ, தீஇ, பூஉ, சேஎ, கோஒ; நொ, கௌ, வௌ.

சூ-ம். குற்றுயி ரளபி னீறு மெகர
மெய்யோடே லாதொந் நவ்வோ டாமௌ
ககர வகரமோ டாகு மென்ப. 52.

32. (a) போலியானது எழுத்துப்போலி A இலக்கணப்போலி என இருவகையாம். அவற்றுள் எழுத்துப்போலி மொழிமுதல், இடை, கடை என்ற மூவிடத்தும் வரும்.

[முதற்போலியும் இடைப்போலியும்.]

(b) மொழி முதலினும் இடையிலும் சகர, ஞகர, யகரங்கட்கு முன்னர் அகாரமும், ஐகாரமும் வேற்றுமையின்றி ஒக்க வரும்.

உ-ம். பசல்—பைசல்; மஞ்சு—மைஞ்சு; மயல்—மையல்: முதற்போலி;
அமச்சு—அமைச்சு; இலஞ்சி—இலைஞ்சி; அரயர்—அரையர்: இடைப்போலி.

ஃ இலக்கணப்போலி பெயரியலிற் கூறப்படும்.

சூ-ம். அஐ முதலிடை யொக்குஞ் சஞயமுன். 53.

33. மொழியிடையில் சில இடத்தில் ஐகாரத்தின் பின்னும் யகர ஒற்றின் பின்னும் வரும் நகரத்திற்கு ஞகாரம் ஒத்துவரும்.

உதாரணம்.

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்ப
தென்னே. செய்ந்நின்ற—செய்ஞ்ஞின்ற; அரை நாண்—அரைஞாண்.

மொழி முதலிலும் நகரத்திற்கு ஞகாரம் ஒத்துவரும்.

உ-ம். நண்டு—ஞண்டு; நாயிறு—ஞாயிறு.

சூ-ம். ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகா னுறழு மென்மரு முளரே. 54.

[ மொழியிறுதிப்போலி. ]

34. இரண்டு குறிலை அடுத்த அஃறிணைப் பெயர்களின் இறுதி மகரத்திற்கு னகரமும், குற்றியலுகரத்திற்கு அர் என்பதும், லகரத்திற்கு ரகர மெய்யும் போலியாக வரும்.

உ-ம். முகம்—முகன், கலம்—கலன்; சுரும்பு—சுரும்பர், இடக்கு—இடக்கர்; பந்தல்-பந்தர், சாம்பல்-சாம்பர்.

சூ-ம். மகர விறுதி யஃறிணைப் பெயரி
னகரமோ டுறழா நடப்பன வுளவே. 55.

[ எழுத்துக்களின் சாரியைகள். ]

35 மெய்கள் அகரச்சாரியை பெற்றுவரும்.

உ-ம். க, ங, அகரச்சாரியை,

நெட்டுயிர்கள் காரச்சாரியையும், அவற்றுள் ஐ கார ஔகாரங்கள் காரம், கான் என்ற இரண்டுசாரியையும் பெறும்.

உ-ம். ஆகாரம், ஐகாரம், ஔகாரம்—காரம்;
ஐகான், ஔகான்—கான்;

உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் காரம், கான், கரம் என்ற மூன்றையும் பெறும்.

உ-ம். அகாரம், அஃகான், அகரம்;
மகாரம், மஃகான், மகரம் என இருவகைக் குறிலும் மூன்று சாரியையும் முறையே பெற்றன. மெய்கள் சாரியை பெறுதும், உயிர்மெய்நெடில்கள் சாரியை பெற்றும் வருதல் இல்லை.

சூ-ம். மெய்க ளகரமு நெட்டுயிர் காரமு
மையௌக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற.

எழுத்தியல் முற்றிற்று.

# 2. பதவியல்.

[ பதம். ]

1. எழுத்துக்கள் தனித்தும், இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பிற பொருள் தருமாயின் பதமாம்; அப்பதம் பகாப்பதம் பகுபதம் என இருவகையாம்.

சூ-ம். எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்
பதமா மதுபகாப் பதம்பகு பதமென
விருபா லாகி யியலு மென்ப. 57.

[ பகாப்பதம். ]

2. பகுத்துப் பார்க்கின் A பகுதி B விகுதி முதலிய உறுப்பு உண்டாகாமல் ஆதிமுதல் ஒன்றாய் முடிந்து நடக்கின்ற பெயர், வினை, இடை, உரி, என்ற நான்கும் பகாப்பதங்களாம்.

உ-ம். 1. பெயர்-கா, நீர், நிலம். 3. இடை-ஏ, மன், மற்று.
2. வினை-தா, நட, உரிஞ், 4. உரி-மா, உறு, நனி.

A பிரகிருதி, விகிருதி என்ற வடமொழிகள் பகுதி விகுதி எனத் திரிந்து வந்தன. தன்னியல்பில் நிற்பதால், பகுதி என்றும்; B பகுதியை விகாரப்படுத்துந் தன்மையை உடைமையால் விகுதி என்றும் பெயரிடப்பட்டன. பகுதியின் வேறுபெயர்—முதனிலை. விகுதியின் வேறு பெயர்—இறுதிநிலை, அந்தம்.

சூ-ம். பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி
முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்.

[பகுபதம்.]

3. பொருள், A இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறையும் பகுதியாகக்கொண்டுவரும் பெயர்ச்சொற்களும், தெரிநிலையாயும் குறிப்பாயும் காலத்தைக்கொள்ளும் வினைச்சொற்களுமாகிய இரண்டும் பகுபதங்களாம்.

உதாரணம்.

1. பொன்னன்—பொருள்; 4. C கண்ணன்—சினை.
2. B பட்டினத்தான்—இடம்; 5. D கரியன்—குணம்.
3. ஆதிரையான்—காலம்; 6. E ஊணன்—தொழில்.

நடந்தான், நடக்கின்றான், நடப்பான்-தெரிநிலைவினைமுற்று.

நடந்த, நடக்கின்ற, நடக்கும்-தெரிநிலைப்பெயரெச்சம்.

நடந்து, நடக்க, நடக்கின்-தெரிநிலைவினையெச்சம்.

பொன்னன், அகத்தன், ஆதிரையான், கண்ணன், கரியன், ஊணன்—குறிப்புவினைமுற்று.

கரிய, பெரிய, சிறிய—குறிப்புப்பெயரெச்சம்.

அன்றி, இன்றி, பைய—குறிப்புவினையெச்சம்.

இப்பெயர்ப் பகுப்தம் குறிப்பாகக்காலத்தை ஏற்கின் குறிப்புவினை முற்றாம்; வேற்றுமையையும் ஏற்கின் குறிப்புவினையாலணையும் பெயராம்.

A இடம்-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைய.
B பட்டினம்-கடற்கரையைச்சார்ந்த நகரத்தின் பெயர்.
C கண்ணன்-ஏனையோர் கண்ணினும் அழகிய கண்ணையுடையவன் -எவ்விடத்தையும் பார்க்கும் கண்ணையுடையவன்=மால்;

D கரியன்-ஏனையோரினும் கரிய நிறத்தையுடையவன்; E ஊணன்-ஏனையோரினும் அதிக ஊண் உண்பவன் என்பன பொருளாம்.

கூ-ம். பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்
வருபெயர் பொழுது கொள்வினை பகுபதமே.

பெயர், வினைகளைச்சார்ந்தே வரும் இடைச்சொல், உரிச்சொற்களின் அடியாகத்தோன்றும் பகுபதங்கள், பெயர்வினைகளில் அடங்குவதால் பகாப்பதம் நான்காயிருக்கப் பகுபதம் இரண்டாயிற்று.

[ பகுபத உறுப்புக்கள். ]

4. பகுதி விகுதி A இடைநிலை B சாரியை C சந்தி D விகாரம் என்ற இவ்வாறு உறுப்பினுள்ளும் பொருளமைதிக்குப் பொருந்தியவற்றைக்கொண்டு முடிவன பகுபதங்களாம்.

உதாரணம்.

கூனி—கூன்+இ எனப்பகுதி விகுதியால் முடிந்தது. 2.

வலைஞன்—வலை+ஞ்+அன் எனப்பகுதி விகுதி இடைநிலையால் முடிந்தது. 3.

உண்டனன்—உண்+ட்+அன்+அன் எனப்பகுதி, விகுதி, இடைநிலை, சாரியையால் முடிந்தது. 4.

படித்தனன்—படி+த்+த்+அன்+அன் எனப்பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தியால் முடிந்தது. 5.

நடந்தனன்—நட+த்+(ந்மெலித்தல்)த்+அன்+அன் எனப்பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரத்தால் முடிந்தது. 6.

A பகுதிக்கும் விகுதிக்கும் இடையே வருதலால் இடை நிலையாம்.

B விகுதி முதலியவற்றைச் சார்ந்து வருதலால் சாரியையாம்.

C உறுப்புக்கள் சந்திக்கும் பொழுது உண்டாகும் தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரம், சந்தியாம்.

D வலித்தல் முதலிய செய்யுள்விகாரமாய் வருவன, விகாரமாம்.

சூ-ம்: பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகார மாறினு மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

[பகுதி.]

5. பெயர்ப்பகுபதங்களிலும் வினைப்பகுபதங்களிலும் முதலிலுள்ள பகாப்பதங்களே அவற்றின் பகுதிகளாம்.

சூ-ம். தத்தம்,—
பகாப் பதங்களே பகுதி யாகும். 61.

[பண்புப் பகுதிகளுக்குச் சிறப்புவிதி.]

6. செம்மை, சிறுமை, சேய்மை முதலிய (* பகுதிப்பொருள் விகுதியாகிய) மை விகுதியை உடைய பண்புப்பகுதிகள், உயிரின்றி இயங்காத உடம்புபோல விகுதியின்றி ஒலியாவாம்.

* தமக்கென வேறு பொருள் இன்றிப் பகுதியின் பொருளையே பொருளாகக் கொண்டுவரும் இரு,இடு என்பனபோன்ற விகுதிகள், பகுதிப்பொருள் விகுதிகளாம்.

சூ-ம். செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதி
ரின்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே. 62.

7. மேற்கூறிய பண்புச்சொற்கள் பின்வரும் விகாரங்களை அடையும்.

உதாரணம்.

1. நன்மை+அன்=நல்லன் என, ஈற்று மை கெட்டது.
2. கருமை+அன்=கரியன் என மைகெடுதலோடு இடை உகரம் இகரமாயிற்று.
3. பசுமை+இ=பாசி என மைகெடுதலோடு முதல் நீண்டது.
4. பசுமை+கிளி=பைங்கிளி என மைகெடுதலோடு முதல் அகரம் ஐகாரமாயிற்று.
5. வெறுமை+இலை=வெற்றிலை என மைகெடுதலோடு இடை நின்ற ஒற்று இரட்டியது.
6. செம்மை+ஆம்பல்=சேதாம்பல் என மைகெடுதல் முதலியவற்றோடு முன்னின்ற மகரமெய் தகரமெய்யாய்த் திரிந்தது.
7. பசுமை+தார்=பைந்தார் என மைகெடுதல் முதலியவற்றோடு இன எழுத்துத் தோன்றிற்று.
8. பசுமை+கிளி=பைங்கிளி என (இனையவும் என்றபடி) சகெடுதல் முதலிய விகாரங்களைப் பெற்றன.

சூ-ம். ஈறுபோத லிடையு கரமிய் யாத
லாதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே. 63.

[தெரிநிலை வினைப்பகுதி.]

8. நட, வா, மடி, சீ, A விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், B அஃகு என்ற இவ்விருபத்துமூன்று வாய்பாடுகளும் முன்னிலை ஒன்றற்கே உரிய ஏவல் வினையினுடையவும், ஒழிந்த மூவிடத் தெரிநிலை வினையினுடையவும் பகாப்பதங்களாகிய பகுதிகளாம்.

இறுதி எழுத்துக்கள் இருபத்து நான்காயிருக்க, எகரம் மெய்யோடு இருகாமையின் வாய்பாடு இருபத்து மூன்றாயிற்று. எழுத்தியல்-30.

A விடு—முற்றுகரவாய்பாடு; B அஃகு—குற்றுகரவாய்பாடு.

உ-ம். நடந்தான், வந்தான், மடிந்தான், சீத்தான், விட்டான், கூவினான், வெந்தான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞினான், உண்டான், பொருநினான், திருமினான், தின்றான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான்.

சூ-ம். நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி ஞுண்பொருந் திருந்தின்

தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்
றெய்திய விருபான் மூன்று மீற்றவுஞ்
செய்யே னேவல் வினைப்பகாப் பதமே. 64.

[ ஏவற்பகுதிக்குச் சிறப்புவிதி. ]

9. (a) மேற்கூறிய முதனிலைத் தன்வினையின் பின் வி, பி என்னும் விகுதிகளில் ஒன்று வருமாயின் பிறவினை யேவற்பகுதியாம்.

உ-ம். செய்வி, நடப்பி.

(b) இவ்விகுதிகள் இணைந்துவரின் ஈரேவலாம்; வி விகுதி இணைந்து வராது.

உ-ம். நடப்பிப்பி, வருவிப்பி.

(c) சில பகுதிகள் விகாரப்பட்டும்; கு, சு, டு, து, பு, று விகுதிகளைப் பெற்றும் பிறவினையாகும்.

உ-ம். உருகு—உருக்கு; எழும்பு—எழுப்பு; விகாரப்பட்டன.

போ—போக்கு; பாய்—பாய்ச்சு; உருள்—உருட்டு;
நட—நடத்து; எழு—எழுப்பு; துயில்—துயிற்று: கு,
சு, டு, து, பு, றுக்களை முறையே பெற்றன.

விகாரப்படுதலாவது—இடையில் வல்லொற்றுத்தோன்றுதல், மெல்லொற்று வல்லொற்றாதல்,

சூ-ம். செய்யென் வினைவழி விப்பி தனிவரிற்
செய்வியென் னேவ லிணையினீ ரேவல். 65.

[ பெயர்வினை விகுதிகள். ]

10. சூ-ம். அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்மார்
அஆ குடுதுறு என்ஏன் அல்அன்
அம்ஆம் எம்ஏம் ஓமொ டும்றூர்
கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்
ஈயர் கயவு மென்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே.

குறிப்பு: [ ஆண்பால் விகுதி. ]

11. A அன், ஆன் என்னும் விகுதிகளை இறுதியிலு
டைய மொழிகள் உயர்திணை ஆண்பாற் படர்க்கை
வினைமுற்றும் குறிப்புமுற்றுமாம்.

உ-ம். இறந்தகாலம். நிகழ்காலம். எதிர்காலம். குறிப்பு.

நடந்தனன்—நடக்கின்றனன்—நடப்பன்—குழையன்.
நடந்தான்—நடக்கின்றான்—நடப்பான்—குழையான்.

A அன் விகுதி தன்மை ஒருமைக்கும் வரும். எதிர்காலம் சாரியை யின்றி வரும்.

விகுதியில்லாத ஆண்பாற்பெயரும் உள: அவை வருமாறு:-
நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில் முதலியன.

சொன்முறையில் பெயர் முந்தியிருக்க, வினைவிகுதிகளை முந்திக் கூறக், காரணம் என்னையெனில், வினை விகுதிகளில் பல, பெயர்க்கும் வரும் என்பதையும், பெயர் விகுதிகள் வினைக்கு வரா என்பதையும் நோக்கியே யாம்.

சூ-ம். அன்ஆ னிறுமொழி யாண்பாற் படர்க்கை. 67.

[பெண்பால் விகுதிகள்.]

12. அள், ஆள், என்னும் இரு விகுதிகளை உடைய மொழிகள் உயர்திணைப் பலர்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம்.

உ-ம். இறந்தகாலம். நிகழ்காலம். எதிர்காலம். குறிப்பு.
நடந்தனள்—நடக்கின்றனள்—நடப்பள்-குழையள்.
நடந்தாள்—நடக்கின்றாள்—நடப்பாள்-குழையாள்,

விகுதி இல்லாத பெண்பாற் பெயர்—செவிலி, மகடூஉ, நங்கை, தையல், மாது, இகுளை * பேதை முதலியன.

* பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்-பருவத்தால் வந்தபெயர்கள்.

சூ-ம். அள்ஆ ளிறுமொழி பெண்பாற் படர்க்கை. 68.

[பலர்பால் விகுதிகள்.]

13. அர், ஆர், ப, மார் என்ற விகுதிகளை இறுதியாக உடைய மொழிகள் உயிர்திணைப் பலர்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம். இவற்றுள் மார் ஈற்று வினைமுற்றுப் பெரும்பான்மையாய் (பொது விதியையேலாது—4-வினையியல்.) வினையொடு முடியும்.

உ-ம். இறந்தகாலம். நிகழ்காலம். எதிர்காலம். குறிப்பு.
நடந்தனர்—நடக்கின்றனர்—நடப்பர்—குழையர்.

நடந்தார்—நடக்கின்றார்—நடப்பார்—குழையார்.
நடப்ப (நடந்தார்)———நடப்ப (நடப்பார்)——.
——— ———கொண்மார் (கொள்வார்)——.

கொண்மார் வந்தார்—வினையுடன் முடிந்தது.

இவற்றுள் பகர விகுதி இறப்பு, எதிர்வு என்ற இருகாலத்தையும், மார் எதிர்காலத்தையும் தாமே காட்டுகின்றமையால் குறிப்பிற்கு வாராவாம்.

எப்பொழுதும் பலர்பாலில் வரும் பெயர்கள்—மாந்தர், மக்கள்.

உயர்திணை ஆண், பெண் இரண்டிற்கும் பொதுப்பெயர்—ஒருவர், பேதை, ஊமை, குழந்தை.

சூ-ம். அர்ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற
பல்லோர் படர்க்கை மார்வினை யொடுமுடிமே.

[ஒன்றன்பால் விகுதி.]

14. து, று, டு என்ற விகுதிகளை இறுதியாக உடைய மொழிகள் அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம்.

உ-ம். இறந்தகாலம். நிகழ்காலம். எதிர்காலம். குறிப்பு.
நடந்தது—நடக்கின்றது—நடப்பது—குழையது
கூயிற்று——— ——— ———A அற்று.
(கூ+ய்+இன்+று) (அ+று)
——— ——— ——— ——— B பொருட்டு.
(பொருள்+டு)

இவற்றுள், து விகுதியே று விகுதியும் டு விகுதியுமாகத் திரிந்து வரும் என்பதையும், து விகுதி தெரிநிலை, குறிப்பு என்ற இரண்டிற்கும் வரும் என்பதையும், று விகுதி தெரிநிலையில் இறந்தகாலம் ஒன்றற்கே வரும் என்பதையும், டு விகுதி குறிப்பிற்குமாத்திரம் வரும் என்பதையும், சந்தத்தையும்நோக்கி, எழுத்துக்களின்முறை பிறழ வைக்கப்பட்டிருக்கின்றது.

௧ அற்று=அத்தன்மைத்து. ௨ பொருட்டு=பொருளை உடையது.

சூ-ம். துறுடுக் குற்றிய லுகர வீற்ற
ஒன்றன் படர்க்கை டுக்குறிப் பிறைகும். 70.

[ பலவின்பால் விகுதி. ]

15. (a) அ, ஆ என்ற விகுதிகளையுடைய மொழிகள் அஃறிணைப் பலவின்பால் படர்க்கை வினைமுற்றும் குறிப்புமுற்றுமாம்; இவற்றுள் ஆ எதிர்மறைக்கு மாத்திரம் வரும்; எதிர்மறை முக்காலத்திற்கும் உரியதாம்.

உ-ம். இறந்தகாலம். நிகழ்காலம். எதிர்காலம். குறிப்பு.
நடந்தன—நடக்கின்றன—நடப்பன—கரிய
நடவா—எதிர்மறை;

எதிர்மறையை உணர்த்தும் ஆ-இடை நிலையாக வரும் பொழுது உயிர்முன் புணர்ந்துகெடும்.

உ-ம். படி+ஆ+என்=படியேன்—ஆ புணர்ந்துகெட்டது.

இல், அல் என்ற இரண்டும் முதனிலையாக வந்து எதிர்மறையை உணர்த்தும்.

உ-ம். இல்லை; அல்ல; இவற்றுள் இல் என்பது முற்றிலும் இல்லை என்பதையும், அல் என்பது வேறொன்று உண்டென்பதையும் உணர்த்தும்.

சூ-ம். அஆ வீற்ற பலவின் படர்க்கை
ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்.

[ பால் பகா அஃறிணைப்பெயர். ]

(b) ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் உரிய து, வை, கள் என்ற விகுதிகளைப்பெறாத அஃறிணைப் பெயர்கள், அத்திணை இருபாலுக்கும் பொதுவாம்.

உ-ம். குதிரை, யானை } வந்தது; வந்தன.

சூ. பால்பகா வஃறிணைப் பெயர்கள்பாற்பொதுமைய.

| c. அஃறிணை ஆண்பாற்பெயர். | அஃறிணைப் பெண்பாற்பெயர். |
|---|---|
| களிறு | பிடி. |
| இடபம் | பசு. |
| கலை | பிணை. |
| கடுவன் | மந்தி. |
| சேவல் | பெட்டை. |

விகுதிபெற்ற இருதிணை ஆண்பாற் * பொதுப்பெயர்:— சாத்தன், கொற்றன், முதலிய உயர்திணைக்கு இட்டுவழங்கும் பெயர்களை அஃறிணைக்கிட்டு வழங்குவனவாம்.

விகுதிபெற்ற பெண்பாற் பொதுப்பெயர்-சாத்தி, கொற்றி.
விகுதிபெறாத ஆண்பாற் பொதுப்பெயர்-தந்தை, ஆண்.
விகுதிபெறாத பெண்பாற் பொதுப்பெயர்-தாய், பெண்.

ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாகிய பொதுப் பெயர்-குழவி, பிள்ளை, மகவு.

இவை உயிர்திணையில் வரும் பொழுதும் உயர்தி ணைக்குரிய விகுதி இன்மையாலும், சொல்லால் அஃ றிணையாய் இருக்கின்றமையாலும் அஃறிணை முடிபை யே பெறும்.

உ-ம். அரசனுக்கு ஒரு குழவி / பிள்ளை / மகவு } பிறந்தது.

அஃறிணையில் குழவி என்பது யானைக்குட்டிக் கும், பிள்ளை என்பது பறப்பன, தவழ்வன, மரம் முத லிய ஓரறிவுயிர்கட்கும், மகவு என்பது குரங்குக்குட் டிக்கும் வரும்.

உ-ம். 1. "ஒய்யென வெழுந்த செவ்வாய்க் குழவி."

2. "கிளிப்பிள்ளை, கீரிப்பிள்ளை, தென்னம்பிள்ளை."

3. "உயர்கோட்டு மகவுடை மந்தி போல."

சொல்லுவோன் குறிப்பால் ஒவ்வோரிடத்து பிள்ளை என் றது உயர்திணையில் ஆண்பாலை உணர்த்தும்.

எல்லாம்-இருதிணை மூவிடப் பொதுப் பெயர்; இது வேற் றுமைப்படும்போது உயர்திணையில் நம் என்கிற சாரியையும்

அஃறிணையில் அற்றுச்சாரியையும் உருபின்மேல் உம் என்பதையும் பெற்று வரும்.

உ-ம். எல்லாம்+ஐ=எல்லா நம்மையும்-உயர்திணை.
எல்லாம்+ஐ=எல்லாவற்றையும்-அஃறிணை.

* பொதுப்பெயர்=விரவுப்பெயர்; விரவுதல்=கலத்தல்; விரவுப் பெயரெனப் பெயர்வருவான் என்னையெனின், ஆண்பாலையும் பெண்பாலையும் காட்டும் விகுதிகள் அஃறிணைக்கில்லை; உயர்திணைக்கு உரிய மேற்கூறிய பால்களின் விகுதிகளும், விகுதியில்லாப் பெயர்களும் அஃறிணையில் விரவிப் பாலைக் காட்டுகின்றமையால் விரவுப் பெயரெனப்பெயர் பெற்றது. 71.

[தன்மை ஒருமை விகுதி.]

16. கு, டு, து, று, அல், அன், என், ஏன் என்னும் விகுதிகளை இறுதியாக உடைய மொழிகள் இருதிணைக்கண்ணவாகிய ஆண், பெண், ஒன்று என்னும் முப்பால்கட்கும் உரிய தன்மை ஒருமை வினைமுற்றும், குறிப்பு முற்றுமாம்.

உ-ம்.

| இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். | குறிப்பு. |
|---|---|---|---|
| — | — | உண்கு (உண்பேன்) | — |
| உண்டு (உண்டேன்) | — | — | — |
| வந்து (வந்தேன்) வா+து | — | வருவது (வருவேன்( | — |
| சென்று (சென்றேன்) | — | சேறு (செல்வேன்) செல்+று | — |
| — | — | உண்பல் (உண்பேன்) | — |

உண்டனன்—உண்கின்றனன்—உண்பன்—குழையன்.
உண்டனென்—உண்கின்றனென்-உண்பென்-குழையென்.
உண்டேன்—உண்கின்றேன்—உண்பேன்—குழையேன்.

இங்ஙனம் கூறிய கு எதிர்வையும், டு இறப்பையும், து-று இறப்பையும் எதிர்வையும் தாமே காட்டுகின்றமையால் குறிப்பிற்கு வாரா. அல்-தெரிநிலை எதிர்காலம் ஒன்றற்கே வரும்.

சூ-ம். குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ
டல்லன் னென்னே னாகு மீற்ற
இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை. .72

[தன்மைப் பன்மை விகுதி.]

17. (a) அம், ஆம்; எம், ஏம், ஓம்; கும், டும், தும், றும் என்றவை தன்மைப்பன்மை வினைமுற்றினுடையவும், உளப்பாட்டு வினைமுற்றினுடையவும் விகுதிகளாம். இவற்றுள்-தன்மைச்சொல்லையும், முன்னிலைச் சொல்லையும் கூட்டி முடிக்கும்பொழுது அம், ஆம் என்ற விகுதியையுடைய வினையால் முடிக்கவேண்டும்.

| உ-ம். | இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். | குறிப்பு. |
|---|---|---|---|---|
| யாம் or யானும் நீயும் | உண்டனம். | உண்கின்றனம். | உண்பம். | தாரினம். |
| | உண்டாம். | உண்கின்றாம். | உண்பாம். | தாரினம். |

(b) தன்மைச் சொல்லையும் படர்க்கைச்சொல்லையும் கூட்டிமுடிக்கும் பொழுது எம், ஏம், ஓம் என்ற விகுதியையுடைய வினையால் முடிக்கவேண்டும்.

| உ-ம். | இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். | குறிப்பு. |
|---|---|---|---|---|
| யாம் or யானும் அவனும் | உண்டனெம் | உண்கின்றனெம் | உண்பெம் | தாரினெம். |
| | உண்டேம் | உண்கின்றேம் | உண்பேம் | தாரினேம். |
| | உண்டோம் | உண்கின்றேம் | உண்போம் | தாரினோம். |

(c) தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடச்சொல்லையும் கூட்டிமுடிக்கும்பொழுது கும், டும், தும், றும் என்ற காலங்காட்டும் விகுதியை உடைய வினையால்முடிக்கவேண்டும். இவ்வாறு, பலஇடத்துச் சொற்களைக் கூட்டிமுடிக்கும் வினைமுற்றானது உளப்பாட்டு வினைமுற்றெனப் பெயர்பெறும்.

| உ-ம். | இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். |
|---|---|---|---|
| யாம் or யானும் நீயும் அவனும் | ——— | ——— | உண்தும் (உண்போம்) |
| | உண்டும் (உண்டோம்) | — | — |
| | வந்தும் (வந்தோம்) | ——— | வருதும் (வருவோம்) |
| | சென்றும் (சென்றேம்) | — | சேறும் (செல்வோம்.) |

ஓம் விகுதியும் இவ்வாறே ஈரிடத்தாரையும் கூட்டுவது இக்கால வழக்கம்; ஓம்விகுதி ஒழிந்தவை செய்யுளில் வரும்.

உ-ம். யானும் நீயும் போனோம்; யானும் அவனும் போனோம்;
யானும் நீயும் அவனும் போனோம்.

தி, தம், று, றும் என்ற ஒருமை, பன்மை விகுதிகள் ந, ண க்களாகிய மெய்களை முறையே சார்ந்து வரும்பொழுது இறப்பை

யும், சாராதபொழுது எதிர்வையும் காட்டும்.

சூ-ம். அம்மா மென்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓமிவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை. 73.

[ முன்னிலை ஒருமை விகுதி. ]

18. (a) ஐ, ஆய், இ என்னும் மூன்று விகுதிகளையும் உடைய மொழிகள் ஆண், பெண், ஒன்று என்னும் முப்பால் கட்கும் உரிய முன்னிலை ஒருமை வினைமுற்றும், குறிப்பு முற்றுமாம்.

| உ-ம். இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். | குறிப்பு. |
|---|---|---|---|
| உண்டனை | உண்கின்றனை | உண்பை | குழையை |
| உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் | குழையாய் |
| உண்டி | உண்ணாநின்றி (உண்+ஆநின்று+இ) | சேறி (செல்+த+இ) | வில்லி. |

இகர விகுதி எதிர்காலம் காட்டுவதன்றி அருகி நிகழ்காலத்தையுங்காட்டும்.

உ-ம். வந்தீ—வருகிறாய்: இடைநிலை வருமிடத்து விகுதி காலங்காட்டாது.

(b) ஆய், இ என்ற விகுதிகளை இறுதியிலுடைய வினைச்சொற்களும், வடமொழி வழக்குப்போல விகுதி குறைந்துவரும் தெரிநிலை வினைப்பகுதிகளும் ஒருமை யேவலாகவும் வரும்; ஏவல் எதிர்காலத்திற்குரியது.

உ-ம். நீ—உண்ணாய், உண்ணுதி, உண்: உடன்பாட்டேவல்.

விகுதி குறைந்து பகுதியளவாய் நிற்கும் ஏவலை எடுத்தலோசையானும், இயற்கையாகிய பகுதியைப் படுத்தலோசையானுங் கூற வேண்டும்.

(c) அல், ஆல், ஏல் என்கிற விகுதிகளை உடைய மொழிகள் எதிர்மறை ஒருமை ஏவலாம்.

உ-ம். நீ—உண்ணல், மறல், உண்ணேல்: எதிர்மறை.

சூ-ம். ஐயா யிகர விற்ற மூன்றும்
ஏவலின் வரூஉ மெல்லா விற்றவும்
முப்பா லொருமை முன்னிலை மொழியே.

[முன்னிலைப் பன்மை விகுதி.]

19. (a) இர், ஈர் என்னும் இருவிகுதிகளையும் உடைய மொழிகள் பலர்பால் பலவின்பாலகட்கு உரிய முன்னிலைப் பன்மை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம்.

| இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். | குறிப்பு. |
|---|---|---|---|
| உண்டனிர். | உண்கின்றனிர். | உண்பிர். | குழையினிர். |
| உண்டீர். | உண்கின்றீர். | உண்பீர். | குழையினீர். |

உ-ம்.

(b) மின், ஈர், உம் என்ற விகுதிகளை உடைய மொழிகள் இருதிணைப்பன்மை யேவல்வினைமுற்றும்.

உதாரணம்.

நீர்-உண்மின், உண்ணீர்(உண் + ஈர்)உண்ணும்: உடன்பாடு.
நீர்-உண்ணன்மின் (உண் + அல் + மின்)
உண்ணீர்(உண் + ஆ + ஈர்),உண்ணுதேயும்: எதிர்மறை.

சூ-ம். இர்ஈ ரீற்ற விரண்டு மிருதிணைப்
பன்மை முன்னிலை மின்னவற் றேவல். 75.

[ வியங்கோள் வினைமுற்று. ]

20. க, ய என்னும் இரண்டு உயிர் மெய்யினை யும், ரகர ஒற்றினையும் இறுதியாக உடையன A வியங் கோள் முற்றாம்; இது இருதிணை ஐம்பால் மூவிடங்க ளிலும் செல்லும் ஏவல் வினைமுற்றெனவும் பெயர் பெறும்,

உ-ம். வாழ்க, வாழிய, வாழியர்.

அல் விகுதி எதிர்மறை உடன்பாடு இரண்டிலும் வரும்.

உ-ம். விடல்=விடற்க—விடுக.

அல் என்றது ககர விகுதிக்கு முன்னே இடைநிலை யாக வந்து எதிர்மறையை உணர்த்துவதும் உண்டு.

உ-ம். களி+அல்+க=களியற்க.

அருகி-அ, தல், உம் என்றவையும் வியங்கோட் பொருளில் வரும்.

உதாரணம்.

“ நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க ” அ.
“ மனத்துக்கண் மாசிலனாதல் ” தல்-ஆகுக.
“ இசைபடக் காத்தல் வேண்டும் ” உம்-வேண்டுக.

வேண்டும் என்றதை ஒரு மொழியாகக்கொண்டு தகுதிப்பொரு ளில் வந்ததெனக் கூறுவதும் உண்டு; காத்தல் தகுதி என்பது பொருள்.

இது வாழ்த்துதல், விதித்தல், வேண்டுதல், வைதல் முதலிய பொருளில் வரும்.

உ-ம். 1. வாழ்த்துதல்—சிறக்க; 2. விதித்தல்—வருக;
3. வேண்டல்—அருளுக; 4. வைதல்—அழிக.

A வியம்=ஏவுதல், கோள்=கொள்ளுதல்—ஏவுதலைக்கொள்ளுதல்.

சூ-ம். கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பால லெங்கு மென்ப. 76.

[உம். விகுதி.]

21. உம் விகுதியை உடைய மொழி ஆண், பெண், ஒன்று, பல என்ற பால்கட்கும், நிகழ்காலத் திற்கும் எதிர்காலத்திற்கும் உரிய படர்க்கைத் தெரி நிலை வினைமுற்றும்.

உ-ம். அவன், அவள், அது, அவை-உண்ணும்.

சூ-ம். பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே. 77.

[காலங்காட்டும் விகுதிகள்.]

22. சூ-ம். றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு

கழிவுங் கவ்வோ டெதிர்வுமின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்
செலவொடுவரவுஞ் செய்யுநிகழ்பெதிர்வும்
எதிர்மறை யும்மையு மேற்கு மீங்கே.

[ பெயர் விகுதிகள். ]

23. அன், ஆன், அள், ஆள், அர், ஆர், மார், அ, து, இ, மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ், என்பவும் பிறவுமாம்.

உ-ம். குழையன்' வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், தேவிமார், குழையன, யாது, பொன்னி, வடமன், கோமான், கோக்கள், அவை, எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல், பிறன், பிறள்-பிறர், அவ்.

இங்ஙனம் கூறிய விகுதிகளில் பெண்பாலுக்குரிய ஆள் என்பதும் இ என்பதும் ஒரோவிடத்து ஆண்பாலிலும் வரும். மார்விகுதி காலங்காட்டாது. 79.

உ-ம். பெருமாள், வில்லி.

[ பெயரெச்ச விகுதிகள். ]

24. (a) அ, உம் என்ற இரண்டும் தெரிநிலை வினைப் பெயரெச்ச விகுதிகளாம்.

உ-ம். இறந்தகாலம். நிகழ்காலம். எதிர்காலம்.
செய்த — செய்கின்ற — செய்யும்;
உம்-விகுதி தானே காலங்காட்டும்.

(b) குறிப்புப் பெயரெச்சவிகுதி—அ ஒன்றேயாம்.

உ-ம். கரிய, பெரிய. 80.

[வினையெச்ச விகுதிகள்.]

25. (a) இறந்தகாலத் தெரிநிலை வினையெச்ச விகுதிகள்—உ, இ, ய், பு, ஆ, ஊ, என.

உ-ம். நடந்து, ஓடி, போய், உண்குபு, உண்ணு, உண்ணூ, உண்ணென.

(b) நிகழ்கால வினையெச்ச விகுதிகள்—அ, கு.

உ-ம். உண்ண, உணற்கு.

(c) எதிர்கால வினையெச்ச விகுதிகள்-இன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், ஏனும், இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வழி, இடத்து, உம் முதலியனவாம்.

உ-ம். உண்ணின், உண்டால், உண்டக்கால், உண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உண்டானேனும், உண்ணிய, உண்ணியர், வருவான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து, காண்டலும்.

உகரம் ஒழிந்த முக்காலவிகுதிகளும்தாமே காலங்காட்டும்.

(d) மல், மை, மே, து என்ற விகுதிகள் தெரிநிலையில் எதிர்மறைக்கு மாத்திரம் வரும்.

உ-ம். உண்ணாமல் உண்ணாமே
உண்ணாமை, உண்ணாது } வந்தான். 81.

26. எதிர்மறைக்குறிப்பு வினையெச்ச விகுதிகள்—றி, து, ஆல், மல், கால், கடை, வழி, இடத்து, முதலியனவாம்.

உ-ம். அன்றி, அல்லாது, அல்லால், அல்லாமல்,
அல்லாக்கால், அல்லாக்கடை, அல்லாவழி,
அல்லாவிடத்து.

காலங்காட்டும் விகுதிகள் குறிப்பில் வரும்போழுது காலங்காட்டாவாம்.

றி-வினையெச்சத்தில் எதிர்மறைக் குறிப்பிற்கு மாத்திரம் வரும். 82.

27. (a) தொழிற்பெயர் விகுதிகள்—தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, து, மை முதலியனவாம்.

உ-ம். நடத்தல் பார்வை புணர்ச்சி தோற்றரவு.
ஆடல் போக்கு புலவி வாரானை.
வாட்டம் நடப்பு விக்குள் பாய்த்து.
கொலை வரவு சாக்காடு நடவாமை.
நடக்கை மறதி கோட்பாடு.

மை விகுதி இறந்தகால நிகழ்கால இடைநிலைகளோடும், து விகுதி முக்கால இடைநிலைகளோடுங் கூடிவரும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். |
| | நடந்தமை | நடக்கின்றமை | — . |
| | நடந்தது | நடக்கின்றது | நடப்பது. |

அன்றியும் மை விகுதி எதிர்மறை உடன்பாடு இரண்டி லும் வரும்.

(b) எதிர்கால வினையெச்ச விகுதிகளாகிய வான், பான், பாக்கு என்ற மூன்றும் தொழிற்பெயர்க்கு வருவதும் உண்டு.

உ-ம். நீ வருவான் என்—வருதல்.
யான் உரைப்பான் என்—உரைத்தல்.
படுபாக்கு அறிந்து—படுதல்.

(c) இவ்வாறு விகுதிபெற்று வருவதன்றி முதனி லையும், முதனிலை திரிந்ததும், வேறு முதனிலை இல் லாததும் தொழிற் பெயராய் வருவதும் உண்டு.

உ-ம். "அங்கா முயற்சி", "கேடுவாக வையாதுலகம்—"
முதனிலைத்தொழிற் பெயர்;

அங்கா=அங்காத்தல், கெடு=கெடுதல்.

கொள்—கோள்; பொரு—போர்; உண்-ஊண்; முதனிலை திரிந்த தொழிற்பெயர்;

பட்டினி, சண்டை: முதனிலையில்லாத் தொழிற்பெயர். 83.

28. பண்புப்பெயர் விகுதிகள்—மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், பம், நர் முதலியனவாம்.

உ-ம். நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நந்து, நன்றி, நன்று, நலம், நட்பம், நன்னர். 84.

29. இ, ஐ, அம் என்ற மூன்று விகுதிகளும் வினைமுதற் பொருளையும், செயப்படு பொருளையும், கருவிப்பொருளையும் உணர்த்தும்.

உ-ம். அலரி, பறவை, எச்சம்—வினைமுதற்பொருள்.
உளருணி, தொடை, தொல்காப்பியம்—செ-பொருள்.
மண்வெட்டி, பார்வை, நோக்கம்—கருவிப்பொருள்.

தொல்காப்பியக் குடியிற்பிறந்தோன் தொல்காப்பியன்; அவனால் இயற்றப்பட்டது தொல்காப்பியம்; பால்காட்டும் அன் விகுதி கெட்டு, செயப்படுபொருளைக் காட்டும் அம் விகுதியைப்பெற்றுத் தொல்காப்பியம் என முடிந்தது. 85.

30. கொள்விகுதி தற்பொருட்டுப் பொருளை உணர்த்தும்.

உ-ம். அடித்துக் கொண்டான். 86.

31. படு, உண் விகுதிகள் செயப்பாட்டு வினைப் பொருளை உணர்த்தும்.

உ-ம். கட்டுப்பட்டான்; கட்டுண்டான். 87.

32. மை விகுதி தன்மைப் பொருளை உணர்த்தும்.
உ-ம். ஆண்மை=ஆண்தன்மை. 88.

33. இரு, இடு என்பன தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் வரும்.

உ-ம். எழுந்திருந்தான்—எழுந்தான்;
உரைத்திடுகின்றான்—உரைக்கின்றான், 89.

M. 34. (a) பெயரெச்ச விகுதியும், வினைமுதற்பொருளை உணர்த்தும் இகர விகுதியும் செயப்படுபொருளை உணர்த்தும் ஐ விகுதியும் பகுதியோடு புணர்ந்து பின் கெடுதலும் உண்டு.

உ-ம். ஓடாத—குதிரை—ஓடாக்குதிரை என எச்சவிகுதி தொக்கது.

காய், தளிர், பூ, திரை—என்பனவற்றில் வினைமுதற் பொருளை உணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்டது.

உண், உரி, துணி, மடி என்பனவற்றில் செயப்படு பொருளை உணர்த்தும் ஐ விகுதி புணர்ந்து கெட்டது.

(b) சில இடங்களில் வினைமுற்று விகுதி, வினையெச்சவிகுதி முதலியன தொக்கியும், மாறியும் வரும்.

உ-ம். 1. "கொள்வாருங் கள்வரும் நேர்."-நேர்வர் என்றது நேர் என விகுதி முதலிய தொக்கன.

2. "வரிப்புனைப் பந்தொடு பாவை தூங்க,"—என்றதில் வரிந்து என்ற வினையெச்சத்தின் விகுதி முதலிய தொக்கு நின்றன.

3. "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

எழுந்து தொழுவாள் என்ற தொடரிலுள்ள வினையெச்ச விகுதியும் முற்று விகுதியும் தொழுது எழுவாள் என மாறி நின்றன. ( எழுந்து—தூங்கியெழுந்து. )

“ அருங்கேடன் ”—கேடரியன் என விகுதிபிரிந்து பண்போடு இயைந்தது;

“ புணரிய நிலையிடைக் குறுகலு முரித்தே—நிலையி டையுங்குறுகலுரித்து என—உம் பிரிந்தியைந்தது;

“ செல்வத்து ளெல்லாந்தலை”—எல்லாவற்றுள்ளுந் தலை என-உருபு பிரிந்தியைந்தது. 90.

[ பெயர்ப் பகுபத இடைநிலை. ]

35. வினையாலணையும் பெயர் அல்லாத பெயர் களைப் பகுதி விகுதியாகப்பிரித்து நடுநின்றதைப் பெயரிடைநிலையென்று சொல்லல் வேண்டும்.

உ-ம். அறிஞன்—ஞ், இடைச்சி—ச், வண்ணாத்தி—த் என்ற இடைநிலைகளைப் பெற்றன.

சூ-ம். இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்
பகுதி விகுதி பகுத்திடை நின்றதை
வினைப்பெய ரல்பெயர்க் கிடைநிலை யெனலே.

[ இறந்தகால இடைநிலை. ]

36. (a) தகர, டகர, றகர மெய்களும் இன் என்பதும் இறந்தகாலத்தைக்காட்டும் இடைநிலைகளாம்.

உதாரணம்.

நட + த் + ஆன் = நடந்தான்; உண் + ட் + ஆன் = உண்டான்;
த்
செல் + ற் + ஆன் = சென்றான்; உறங்கு + இன் + ஆன் = உறங்
த் [கினான்.

இன் இடைநிலையானது சில இடங்களில் னகரம் குறைந்தும், இகரம் குறைந்தும் வரும்.

மிஞ்சு + இ + அ + து = மிஞ்சியது—னகரம் குறைந்தது.
போ + ன் + அ + து = போனது—இகரம் குறைந்தது.

ட், ற் என்ற இரண்டு இடைநிலைகட்கும் பதிலாகத் த் ஒன்றேவரக் கூடும் என்ற பெருமையையும், சந்தத்தையும் நோக்கியே எழுத்து முறை பிறழவைக்கப்பட்டது.

(b) சிறுபான்மை கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்யீற்றுக் குறிலிணைப்பகுதிகள் தம் ஒற்றுக்கள் இரட்டியும், ய்—இசின் என்ற இடைநிலைகளும் இறந்த காலத்தைக் காட்டும்.

உ-ம். புகு—புக்கான், நடு—நட்டான், உறு—உற்றான்; ஒற்றுக்கள் இரட்டின; போயது—ய், என்றிசினோர்—இசின் என ஈரிடைநிலைகளும் வந்தன.

சூ-ம். தடறவொற் றின்னே யைம்பான் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை. 92.

[ நிகழ்கால இடைநிலை. ]

37. (a) ஆநின்று, கின்று, கிறு என்றவை நிகழ் கால இடைநிலைகளாம்.

உ-ம். நட + ஆநின்று + ஆன் = நடவாநின்றான்;
நட + கின்று + ஆன் = நடக்கின்றான்;
நட + கிறு + ஆன் = நடக்கிறான்.

(b) சிறுபான்மை ஆகிடந்து, ஆவிருந்து என்றவையும் நிகழ்கால இடைநிலைகளாக வரும்.

உதாரணம்.

உண் + ஆகிடந்து + ஆன் = உண்ணாகிடந்தான் } உண்கிறான்.
உண் + ஆவிருந்து + ஆன் = உண்ணாவிருந்தான் }

எதிர்காலத்தை உணர்த்தும் மகரமெய், ஆர் விகுதியுடன் கூடி *மார் என ஒன்றாய் நிற்றல்போல, நிகழ்காலத்தை உணர்த்தும் நில், கிட, இரு என்ற இடைநிலைகள் ஆ, து என்ற சாரியைகளை முன்னும் பின்னும் இயைந்து—ஆநின்று, ஆகிடந்து, ஆவிருந்து என ஒன்றாய் நின்றன.

சூ-ம். ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

[ எதிர்கால இடைநிலை. ]

38. (a) பகர வகர மெய்கள் எதிர்கால இடைநிலைகளாம்.

உ-ம். நட + ப் + ஆன் = நடப்பான்; வா + வ் + ஆன்-வருவான்

(b) சிறுபான்மை மகர மெய்யும் மன் இடைநிலையும் ககரமெய்யும் எதிர்காலத்திற்கு வரும்.

---

* மார்-13. வினையொடு முடிமே என்றதற்கு—அது முடிக்குஞ் சொல்லைக் கூறவந்த இடம் அன்மையால்—பெயர், இடை, உரிகளின் அடியாகத்தோன்றும் வினைகட்கும் வரும் ஏனைய விகுதிபோல் வாராதென்றும்; நட, வா போன்ற இயற்கையாகிய வினைக்குமாத்திரம் மார் பெரும்பான்மையாய் வரும் என்பதும் பொருளாம்.

உ-ம். என் + ம் + அர் = என்மர் } என்பார்.
என் + மன் + ஆர் = என்மனார் }
பாடு + க் + அம் = பாடுகம் = பாடுவோம்.

மன் இடைநிலை அருகி, இறந்தகாலம் காட்டுவதும் உண்டு.

உ-ம். "என்மனார் புலவர்" = என்றார் புலவர்.

இதுகாறும் கூறிவந்ததைக்கொண்டு காலத்தைப்பகுதி, விகுதி, இடைநிலை என்ற மூன்றும் காட்டுமென்றதாயிற்று.

சூ-ம். பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில. 93.

ப + வ = பவ்வ: உயிர்—பு-11c.

[ வடவெழுத்தின் திரிபு. ]

39. (a) ஜகரம் சகரமாகவும் யகரமாகவும், ஷகரம் சகரமாகவும் டகரமாகவும், ஸகரம் சகரமாகவும் தகரமாகவும், க்ஷகரம் ஒருககரமாகவும் இருககரமாகவும் ஒருசகரமாகவும் இருசகரமாகவும், ஆகார ஈறு ஐகாரமாகவுந் திரியும்.

உ-ம். ஜலம்—சலம், பங்கஜம்—பங்கயம்;
ஷண்முகன்—சண்முகன், விஷம்—விடம்;
ஸூத்திரம்—சூத்திரம், மாஸம்—மாதம்;
க்ஷீரம்—கீரம், பக்ஷம்—பக்கம்;
க்ஷேமம்—சேமம், பிக்ஷை—பிச்சை;
கலா—கலை, சிலா—சிலை எனவரும்.

(b) ரகர, லகர, யகரங்களை முதலிலுடைய வட மொழி, தமிழில் வரும்பொழுது ரகரத்திற்கு அ, இ, உ என்ற மூன்றில் ஒன்றும், லகரத்திற்கும், யகரத்திற்கும் இ, உ என்ற இரண்டில் ஒன்றும் மொழி முதலாகி வரும்.

உ-ம். அரங்கம், இராமன், உரோகணி;
இலாபம், உலோகம்;
இயக்கன், உயுத்தம். 94.

[ தமிழிற்கு உரிய சிறப்பெழுத்தும் பொது எழுத்தும். ]

ம. 40. முதலும் சார்புமாகிய தமிழ் எழுத்து நாற்பதில் ற, ன, ழ, எ, ஒ என்ற ஐந்தும், உயிர்மெய்யும் உயிரளபும் அல்லாத சார்பெழுத்து எட்டும் தமிழிற்கே உரியன; ஒழிந்த இருபத்தேழும் பொது வெழுத்தாம்.

சூ-ம். றனழஎ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள
பல்லாச சார்புந் தமிழ்பிற பொதுவே. 95.

பதவியல் முற்றிற்று.

## 3. உயிரீற்றுப்புணரியல்.

[ புணர்ச்சி. ]

1. மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் நிலைமொழியீற்றிலும் வருமொழிமுதலிலும் உடைய பகுபதம், பகாப்பதம் என்ற இரண்டும், வேற்றுமை வழி

யினுலாவது, அல்வழியினுலாவது இயல்பாயும், விகாரமாயும் பொருந்துவது புணர்ச்சியாம்.

சூ-ம். மெய்யுயிர் முதலீ ருமிரு பதங்களுந்
தன்னெடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப்
பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே. ()

[வேற்றுமைவழி.]

2. (a) வேற்றுமைப் புணர்ச்சியானது ஐ, ஆல், கு, இன், அது, கண் என்ற ஆறு உருபும் தொக்கேனும் விரிந்தேனும் நிற்கப் பதங்கள் புணருவதால் அறுவகையாம்.

| உம். வேற்றுமைத் தொகை. | | வேற்றுமை விரி. |
|---|---|---|
| 2. நிலங்கடந்தான். | ஐ. | நிலத்தைக் கடந்தான். |
| 3. கல்லெறிந்தான். | ஆல். | கல்லால் எறிந்தான். |
| 4. கொற்றன் மகன். | கு. | கொற்றனுக்கு மகன். |
| 5. மலைவீழருவி. | இன். | மலையின் வீழருவி. |
| 6. சாத்தன் கை. | அது. | சாத்தனது கை. |
| 7. மலைநெல். | கண். | மலையின்கண் நெல். |

[அல்வழி.]

(b) வேற்றுமை அல்லாதவழி அல்வழியாம்; அது தொகைநிலைத்தொடர் தொகாநிலைத்தொடர் என இருவகையாம்; தொகைநிலையானது-வினை, பண்பு, உவ

மை, உம்மை, அன்மொழி என ஐவகையாம்; தொகா நிலையானது-எழுவாய், விளி, பெயரெச்சம், வினையெச்சம், தெரிநிலைமுற்று, குறிப்புமுற்று, இடை, உரி, அடுக்கு என ஒன்பது வகையாம்; ஆகவே அல்வழிச் சந்தி பதினான்காம்.

முதல் வேற்றுமைக்கும், எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இன்மையால் அவற்றை இங்ஙனம் சேர்க்கப்பட்டன.

உ-ம். ஐந்து தொகைநிலைத்தொடர்.

1. அடுகளிறு — வினைத்தொகை.
2. ▲ கருங்குதிரை — பண்புத்தொகை.
சாரைப்பாம்பு—இருபெயரொட்டுப்பண்புத்தொகை.
3. மதிமுகம் — உவமைத்தொகை.
4. இராப்பகல் — உம்மைத்தொகை.
5. பொற்றொடி — அன்மொழித்தொகை.

▲ கருங்குதிரை என்றது—நீர்க்குடம்-நீரையுடைய குடம் என விரிவதுபோலக் கருமையை உடைய குதிரை என விரியுமன்றே? இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் தொக்கதொகையன்றோ? எனின், அற்றன்று; ஏனெனின், நீர் என்ற செயப்படுபொருளானது தன்னை உடைய பெயரினின்றும் பிரிவதுபோலக், கருமை என்ற குணமானது தன்னையுடைய குதிரையாகிய குணியைவிட்டுப் பிரியாமையினாலேயாம்; அது நிற்க.

கருமையாகிய குதிரை என்றதற்கு முற்றிலும் கருமையாகிய குதிரையென்றும், கருமையை உடைய குதிரை என்றதற்கு ஏகதேசம்கருமையைஉடைய குதிரையென்றும் பொருள் கூறலும் உண்டு.

உ-ம். ஒன்பது தொகாநிலைத்தொடர்.

1. சாத்தன் வந்தான்—எழுவாய்த்தொடர்.
2. சாத்தா வா—விளித்தொடர்.
3. வந்த சாத்தன்—தெரிநிலைவினைப் பெயரெச்சத்தொடர்.
   பெரிய சாத்தன்—குறிப்புவினைப் பெயரெச்சத்தொடர்.
4. வந்துபோனான்—தெரிநிலைவினை வினையெச்சத்தொடர்.
   விருந்தின்றி உண்ணான்-குறிப்புவினை வினையெச்சத்தொடர்.
5. வந்தான் சாத்தன்—தெரிநிலை வினைமுற்றுத்தொடர்.
6. பெரியன் சாத்தன்—குறிப்புவினைமுற்றுத்தொடர்.
7. மற்றொன்று—இடைச்சொற்றொடர்.
8. நனி பேதை—உரிச்சொற்றொடர்.
9. பாம்பு பாம்பு—அடுக்குத்தொடர்.

வேற்றுமைவழி அல்வழி இரண்டிற்கும் பொதுவாயும் வருவன சில உள.

உ-ம். புலி கொன்றது—புலியானது கொன்றது—புலியைக் கொன்றது—புலியால் கொல்லப்பட்டது எனப் பல பொருள் படுதலால் பொதுவழியாம்.

இருநிலைமொழிகள் வருமொழிகளைப் பொருட்பொருத்தம் உறத் தழுவினமையால் இவை தழுவுதொடராம்; நிலைமொழியானது வருமொழியைப் பொருட்பொருத்தம் உறத் தழுவாதது தழாத்தொடராம்.

உ-ம். தமிழைச் சாமிநாதன் விளக்கினான்—என்பதில் தமிழை என்பது விளக்கினான் என்பதைத் தழுவிச் சாமிநாதன் என்பதைத் தழுவாமல் தொடர்ந்ததினால் வேற்றுமைத் தழாத்தொடராம்.

"சரை ஆழ அம்மி மிதப்ப" என்பது சரைமிதப்ப அம்மி ஆழ எனக் கூட்டப்படுதலால் அல்வழித் தழாத்தொடராம்.

தொகைவகையில் வேற்றுமைத் தொகைக்கும் அல்வழித் தொகைக்கும் உள்ளபேதம்—நீர் குடித்தான் என்ற இரண்டாம் வேற்றுமைத்தொகை விரியின், நீரைக்குடித்தான் என, உருபுவிரித்து இரண்டாம்வேற்றுமை விரி என்ற பெயரைப் பெறும்; இவ்வாறே ஒவ்வொரு வேற்றுமையின் உருபும் விரியின், அவ்வப்பெயரையேபெறும். அல்வழித்தொகையோ அவ்வாறல்ல. அடுகளிறு என்ற வினைத்தொகை-அட்டகளிறு, அடுகிறகளிறு, அடுங்களிறு என இடைநிலை முதலியன விரிந்து பெயரெச்சத்தொடரென வேறுபெயரைப் பெறும். இவ்வாறே ஒழிந்த நான்கு தொகையும் விரியின் வெவ்வேறு பெயரைப்பெறும்.

பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகைகள் விரியின் உருபு முதலியவை இடைச்சொல்லாகையால், இடைச்சொற்றொடராம். உவமஉருபு முதலியவற்றை இடைச்சொல்லென்று கூறியிருக்க, மதியைப்போன்ற முகம் என்ற உவமை விரியாகிய இடைச்சொற்றொடரை, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்றொக்க தொகையெனக் கூறுவதும் உண்டு.

அன்மொழித்தொகையானது வேற்றுமைத்தொகை, வினைத்தொகை முதலிய தொகைகளின் புறத்தேபிறக்கும் என்றமையால், விரிந்துவரும் பொழுது வேற்றுமைவழியும், அல்வழியுமாகிய பலவாறும்.

சூ-ம். வேற்றுமை யைம்முத லாறும் அல்வழி
தொழில்பண் புவமை யும்மை யன்மொழி
எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே.

[ தொகைநிலைத்தொடர் இத்துணையென்பது. ]

(c) வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்

புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை எனத் தொகைநிலை ஆறும்.

சூ-ம். வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும். 97.

[தொகைநிலைத் தொடரின் இலக்கணம்.]

ம. 3. பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும், வேற்றுமை வினை பண்பென வகுத்துக்கூறும் அறுவகைப் பொருட்புணர்ச்சியில், அவற்றின் உருபுகள் இடையே தொக்குநிற்க, இரண்டு முதலிய பல சொற்கள் தொடர்ந்து ஒரு மொழிபோல் நடப்பவை தொகைநிலைத் தொடராம்.

சூ-ம். பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகைநிலைத்தொடர்சொல்.

குறிப்பு. [வினைத்தொகை.]

4. இடைநிலையும் விகுதியும் தொக்க பெயரெச்சவினைகள் வினைத்தொகையாம்; அது முக்காலத்திற்கும் பொதுவாயும், ஒவ்வொரு காலத்திற்குரியவாயும் வந்து—செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற அறுவகைப் பெயரையுங்கொண்டு முடியும்.

உ-ம். இ. வினை-தொ. நி. வினை-தொ. எ. வினை-தொ.
நேற்று அடுகளிறு. இன்று அடுகளிறு. நாளை அடுகளிறு.
முக்காலவினைத்தொகை. அடு-களிறு, அடு-வேல், அடு-களம், அடு-தொழில், அடு-பொழுது, அடு-கந்து, என அறுவகைப் பெயரையுங்கொண்டது.

தா, வா, நட என்ற சிலபகுதிகள் விகாரப்பட்டு வினைத்தொகையாகும்.

உ-ம். தரு-புனல், வரு-வழி, நடந்திடு-குதிரை.

சூ-ம். காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை. ()

[ பண்புத்தொகை. ]

5. பண்புக்கும் பண்பிக்கும் உள்ள ஒற்றுமை நயத்தைக்காட்டும் ஆகிய என்ற பண்புருபு தொக்கதும், ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் பண்புத்தொகையாம். அது வண்ணம், வடிவு அளவு, சுவை என நான்கு வகையாம்,

| உ-ம். | தொகை. | விரி. |
|---|---|---|
| வண்ணப்பண்பு. | செந்தாமரை— | செம்மையாகிய தாமரை. |
| வடிவுப்பண்பு. | வட்டக்கல் — | வட்டமாகியகல். |
| அளவுப்பண்பு. | ஒரு பொருள்— | ஒன்றாகிய பொருள். |
| சுவைப்பண்பு. | துவர்க்காய்— | துவர்ப்பாகியகாய். |

இருபெயரொட்டுப்பண்பு. ஆயன் சாத்தன்-ஆயனாகியசாத்தன்.
பன்மொழிப்பண்பு. செந்நிறக்குவளை—செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும்.

பண்பு=குணம். பண்பி=குணி. விருத்தம் என்ற வடமொழி தமிழில் வட்டம் என வந்தது. ஆயன்=கோ-பாலன்.

௫. பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங்குணத்தொகை.

[ உவமத்தொகை. ]

6. (a) வினை, பயன், மெய், உரு என்பவற்றைப் பற்றி வரும் உவம உருபுகள், தொக்க தொடர்மொழிகள் உவமத் தொகைகளாம்.

| உ-ம். | தொகை. | விரி. |
|---|---|---|
| 1. வினையுவமை. | புலிக்கொற்றன் | புலியைஉறழ்ந்தகொற்றன். |
| 2. பயன் உவமை. | மழைக்கை | மழையைப் போந்த கை. |
| 3. மெய்யுவமை. | A துடியிடை | துடியைப்புரைந்த இடை. |
| 4. உரு உவமை. | பவளவாய் | பவளத்தை ஒத்த வாய். |
| 5. பன்மொழி உவமை. | மரகதக்கிளிமொழி | மரகதம் அன்ன கிளி அன்ன மொழி. |

A துடி=உடுக்கை.

வினையுவமை யிடைச்சொல்—அன்ன, ஆங்க, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்கு.

பயனுவமை யிடைச்சொல்—எள்ள, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ.

மெய்யுவமையிடைச்சொல்—கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப.

உருவுவமை இடைச்சொல்—போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த.

அன்ன என்ற உருபு ஒன்றும் எல்லா உவமையிலும் வரும்.

௫-ம். உவம வுருபில துவமத் தொகையே.

[ உவம உருபு. ]

(b) போலப் புரைய வொப்ப வுறழ
மானக் கடுப்ப வியைய வேய்ப்ப
நேர நிகர வன்ன வின்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே. 102.

[ உம்மைத்தொகை. ]

7. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவைகளால் பொருளை அளக்கும்பொழுது, தொடரும் அவ்வளவைப் பெயர்களுள், உம் தொக்கு நிற்பன உம்மைத் தொகைகளாம்.

உ-ம். 1. எண்ணல். ஒன்றேகால்—ஒன்றும் காலும்.
2. எடுத்தல். கழஞ்சேகால்—கழஞ்சும் காலும்.
3. முகத்தல். கலனேதூணி—கலமும் தூணியும்.
4. நீட்டல். சாணங்குலம்—சாணும் அங்குலமும்.

பன்மொழி. சேர சோழபாண்டியர்-சேரனும் சோழனும் பாண்டியனும்.

நிறைப்பெயர். { கழஞ்சு—பவளம். இரதி—பச்சை. மஞ்சாடி—வைரம்.

சூ-ம் எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்
எனுநான் களவையு ளும்மில தத்தொகை. ()

[ அன்மொழித்தொகை. ]

8. வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத்தொ

கைநிலைத் தொடர்மொழிகளுக்குப் புறத்தே, அவை அல்லாத பிறமொழிகளும் உருபுகளும் தொக்கு வருவன அன்மொழித் தொகைகளாம்.

உ-ம். 1. பூங்குழல்-இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்தது-பூவையணிந்த கூந்தலை உடையாள்;

2. பொற்றொடி ( பொன்+-தொடி ) மூன்றும் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்தது-பொன்னாலாகிய தொடியினை உடையாள்; (தொடி=வளையல்.)

3. கவியிலக்கணம்-நான்காம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்தது—கவிக்கு இலக்கணம்சொன்ன நூல்;

4. பொற்றாலி-ஐந்தாம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்தது—பொன்னினாகிய தாலியை உடையாள்; (மூன்றும் வேற்றுமையாய்க்கூறல் சிறப்பு.)

5. கிள்ளிகுடி-ஆறும் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்தது-கிள்ளியினது குடியிற்பிறந்தவன்-குடியிருக்கும் ஊர்; குடி=குலம் or ஊர்; கிள்ளி=சோழன்.

6. கீழ்வயிற்றுக்கழலை-எழாம்வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்தது-கீழ்வயிற்றின்கண் எழுந்தகழலை போல்வான்;

7. தாழ் குழல்-வினைத்தொகைப் புறத்துப் பிறந்தது-தாழ்ந்த குழலினை உடையாள்; (குழல்=கூந்தல்.)

8. கருங்குழல்-பண்புத்தொகைப்புறத்துப் பிறந்தது-கருமையாகிய குழலினை உடையாள்;

9. துடியிடை-உவமத்தொகைப்புறத்துப் பிறந்தது-துடி அன்ன இடையினை உடையாள்;

10. தகரஞாழல்-உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்தது-தகரமும் ஞாழலும் கலந்த சாந்து;
தகர ஞாழல் மார்பு-தகரமும் ஞாழலும் கலந்த சாந்தை அணிந்த மார்பினை உடையாள் எனவரும்.
தகரம்=வாசனைப்பொருள், ஞாழல்=குங்குமப்பூ.

சூ. ஐந்தொகை மொழிமேல் பிறதொகலன்மொழி.

[ இயல்பு புணர்ச்சி. ]

9. மேல்வரும் விகாரவகை அனைத்தையும் அடையாதது இயல்பு புணர்ச்சியாம்.

சூ-ம். விகார மனைத்து மேவல தியல்பே. 105.

10. விகாரமானது-புணர்ச்சி விகாரம், செய்யுள் விகாரம் என இருவகையாம்.

[ புணர்ச்சி விகாரம். ]

மெய், உயிர், உயிர்மெய், சாரியை முதலியன ஒன்றும், பலவும் தோன்றுதலும், திரிதலும், கெடுதலும் புணர்ச்சி விகாரமாம்.

உ-ம். பூ +கொடி=பூங்கொடி: தோன்றல்.
பொன்+குடம்=பொற்குடம்: திரிதல்.
மரம் +வேர் =மரவேர்: கெடுதல்.
பனை +காய் =பனங்காய்: தோன்றல், திரிதல், கெடுதல்,

சூ-ம். தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும். 106.

[ செய்யுள் விகாரம். ]

M. 11. செய்யுளில் அடி தொடைமுதலியவற்றை நோக்கி மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், இல்லாத எழுத்தை வருவித்தலும், உள்ள எழுத்தை நீக்கலும்; மொழி-முதல், இடை, கடை என்ற மூவிடத்தும் தொன்றுதொட்டுக் குறைந்து வருதலும் செய்யுள் விகாரமாம்.

உ-ம். 1. "குறத்தாட் பூசஞ் சுமந்த அறக்கதிராழியெம் மன்னனைத் தொழினே." குறுந்தாள்-குறத்தாள் என வந்தது வலித்தல்;

2. "தண்டையி னினக்கிளி கடிவோள் பண்டைய ளல்லண் மானோக் கினளே." தட்டை-தண்டை என வந்தது மெலித்தல்;

3. "தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற் போத்தரூர் புல்லறிவினார்."–பொத்தரூர்-போத்தரூர் என வந்தது நீட்டல்;

எருவை=கழுகு-உள்வீடில்லாக் கொறுக்கைத்தட்டை;
பொத்து=குற்றம்-பொந்து.

4. "யானை-யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன் திருத்தார் நன்றென்றேன் தீயேன்."
தீயேன்-தியேன் என வந்தது குறுக்கல்;

5. "சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே."—விளையுமே-விளையும்மே என வந்தது விரித்தல்."
வெதிர்=மூங்கில்.

6. சிறிய இலை-சிறியிலை என வந்தது தொகுத்தல்;

1. தாமரை—மரை: முதற்குறை;
2. ஓந்தி —ஓதி: இடைக்குறை;
3. நீலம் —நீல்: கடைக்குறை;

தொகுத்தலுக்கும் குறைக்கும் வேற்றுமை என்னை யெனின்-தொகுத்தல் செய்யுளில், அடி தொடை நோக்கி, நியதியின்றிச் செய்யுள் செய்வோர் தொகுப்பதாம்; குறை-ஒருமொழியில் தொன்றுதொட்டுக் குறைந்து வருவதாம்.

சூ-ம். வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்த றொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி.

சூ-ம். ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

மேற்கூறியவையன்றி நிலைமாறுதல் எனவும் ஒரு விகாரம் உண்டு.

உ-ம். தசை-சதை; வைசாகி-வைகாசி; நாளிகேரம்-நாரிகேளம்.

நிலைமாறுதலாவது—மொழியில், ஓரிடத்துள்ள எழுத்து வேறு இடத்தில் வேற்றுமையின்றி மாறியிருப்பதாம். 107.

[ எல்லா ஈற்றின் முன்னும் மெல்லினமும்
இடையினமும் புணர்தல். ]

(வருமொழி முதல் இயல்பு.)

12. (a) ( எழுத்தியல். 30. ) இருபத்து நான்கு

எழுத்துக்களையும் இறுதியிலுடைய மொழிகட்கு முன் வரும் ஞ், ந், ம், ய், வ் என்ற மெய்கள் இருவழியிலும் இயல்பாம்.

உ-ம். அல்வழி. வேற்றுமைவழி.

விள + ஞான்றது = விளஞான்றது; விளஞாற்சி.
நீண்டது = விளநீண்டது; விளநீட்சி.
மாண்டது = விளமாண்டது; விளமாட்சி.
யாது = விளயாது; விளயாப்பு.
வலிது = விளவலிது; விளவன்மை.

[ வருமொழி முதல் இரட்டல். ]

(b) குற்றெழுத்தைச் சார்ந்த யகரத்தின் முன்னும் தனி ஐ காரத்தின் முன்னும் வரும் ஞ், ந், ம் என்ற மெய்கள் இருவழியிலும் மிகும்.

உ-ம். அல்வழி. வேற்றுமைவழி.

மெய் + ஞான்றது = மெய்ஞ்ஞான்றது; மெய்ஞ்ஞாற்சி.
நீண்டது = மெய்ந்நீண்டது; மெய்ந்நீட்சி.
மாண்டது = மெய்ம்மாண்டது; மெய்ம்மாட்சி.
கை + ஞான்றது = கைஞ்ஞான்றது; கைஞ்ஞாற்சி.
நீண்டது = கைந்நீண்டது; கைந்நீட்சி.
மாண்டது = கைம்மாண்டது; கைம்மாட்சி.

(c) நொ, து என்ற வினைச்சொற்களின் முன் வரும் ஞ், ந், ம், ய், வ் என்ற மெய்கள் அல்வழியில் மிகும்.

உ-ம். நொ+ஞெள்ளா=நொஞ்ஞெள்ளா; துஞ்ஞெள்ளா.
நாகா =நொந்நாகா; துந்நாகா.
மாடா =நொம்மாடா; தும்மாடா.
யவனா =நொய்யவனா; துய்யவனா.
வளவா =நொவ்வளவா; துவ்வளவா.

இவ்வாறு தனிக்குறிலின்பின் வருமொழி முதலில் வரும் மெல்லினமெய் இடையினமெய்கள் இரட்டின், இவ்விதியையே கொள்க.

உ-ம். அ+முதல்=அம்முதல். ப+வ=பவ்வ.

சூ-ம். எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்க ளியல்பும்
குறில்வழி யத்தனி யைந்நொது முன்மெலி
மிகலுமாம் *ணளனல வழிநத் திரியும்.

* உதாரணம் மெய்யீற்றுப் புணரியலில் கூறப்படும். 108.

[பொதுப்பெயர் உயர்திணைப்பெயர் வருமொழியோடு புணர்தல் ]

(நிலைமொழி ஈறு இயல்பு.)

13. (a) பொதுப்பெயர்க்கும் உயர்திணைப்பெயர்க்கும் ஈறான ண், ன், ல், ள் என்ற மெய்கள் வருமொழி முதலில் வல்லினம் வரின், திரியாது இயல்பாம்.

உ-ம். அல்வழி. வேற்றுமைவழி.
ஆண் +கடியன் =ஆண்கடியன்; ஆண்கை.
கொற்றன்+சிறியன் =கொற்றன்சிறியன்; கொற்றன்செவி.
தோன்றல்+பெரியன்=தோன்றல் பெரியன்; தோன்றல் பெருமை.
வேள் +கொடியன்=வேள்கொடியன்; வேள்கொடுமை.

உயர்திணையாயினும் லகர ளகரங்கள், தகரம் வருமாயின் விகாரப்பட்டே வரும்.

உ-ம். தோன்றல் + தீயன் = தோன்றறீயன்; தோன்றறீமை.
வேள் + தீயன் = வேடீயன்; வேடீமை.

[வருமொழி முதல் இயல்பு.]

(b) உயிரையும்; ய், ர் என்ற மெய்களையும் இறுதியில் உடைய பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களுக்குமுன், வருமொழி முதலில் வரும் க, ச, த, பக்கள் இருவழியிலும் இயல்பாம்.

உ-ம். அல்வழி. வேற்றுமைவழி.
சாத்தி + குறியள் = சாத்திகுறியள்; சாத்திகை.
நம்பி + சிறியன் = நம்பிசிறியன்; நம்பிசெவி.
தாய் + தந்தாள் = தாய்தந்தாள்; தாய்தலை.
புலவர் + பெரியர் = புலவர்பெரியர்; புலவர்பெருமை.

இங்ஙனம் பெயர்க்குக் கூறப்பட்டுள்ள விதியை (ஒப்பின் முடித்தல் என்னும் உத்தியால்) உயர்திணை வினைக்கும் கொள்க.

உதாரணம்.

வந்தான் + பொன்னன் = வந்தான் பொன்னன். } நிலைமொழி
வந்தாள் + பொன்னி = வந்தாள் பொன்னி. } இயல்பு.
வந்தார் + புலவர் = வந்தார்புலவர்; வருமொழி இயல்பு.

ஒப்பின் முடித்தலாவது ஒரு சொல்லுக்குச்சொல்லும் விதி மற்றொரு சொல்லுக்கும் ஒத்திருந்தால் சேர்த்து முடிப்பதாம்.

சில இடத்தில் இகரத்தையும் உகரத்தையும் இறுதியாக உடைய பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்களுக்குமுன் வரும் வல்லினம் மிகும்; (b-க்கு விரோதம்.)

உ-ம். சாத்தி + பெண் = சாத்திப்பெண்.
நம்பி + கொற்றன் = நம்பிக்கொற்றன்.
ஆடூஉ + கை = ஆடூஉக்கை.

(c) உயர்திணைப் பெயர்கள் நாற்கணங்களோடும் புணரும்பொழுது சில விகாரத்தை அடையும்.

உ-ம். வாசுதேவன் + கோட்டம் = வாசுதேவகோட்டம்-வே.

அரசன் + வள்ளல் = அரசவள்ளல்.
கபிலன் + பரணன் = கபிலபரணர்.
} அல்வழி.

நாற்கணம் = வல்லினம், மெல்லினம், இடையினம், உயிரினம்.

சூ-ம். பொதுப்பெயருயர்திணைப் பெயர்களீற்றுமெய்
வலிவரி னியல்பா மாவி யரமுன்
வன்மை மிகாசில விகாரமா முயர்திணை. 109.

[ வினாப்பெயர் விளிப்பெயர் முன் வலி இயல்பு. ]

14. ஆ, ஏ, ஓ என்னும் ஈற்று வினாமுன்னும், யா என்னும் வினாப்பெயர் முன்னும், உயிரும் ஒற்றும் ஈறாகிய விளிப்பெயர் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம்.

உதாரணம்.

நம்பியா + கொண்டான் = நம்பியாகொண்டான்-ஆ
நம்பியே + கொண்டான் = நம்பியேகொண்டான்-ஏ
நம்பியோ + கொண்டான் = நம்பியோகொண்டான்-ஓ
யா + குறியன = யாகுறியன -யா
} வினா

நம்பீ + கொள் = நம்பீகொள்......உயிரீறு } விளி.
தாய் + கொள் = தாய்கொள்......மெய்யீறு }

சூ-ம். ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலியியல்பே.

முன்னிலை வினை, ஏவல்வினையோடு வல்லினம் புணர்தல்.

15. உயிரையும் ய், ர், ழ் என்ற மூன்று ஒற்றையும் இறுதியாக உடைய முன்னிலைவினை முன்னும், ஏவல்வினை முன்னும் வரும் வல்லினம் இயல்பாயும், மிகுந்தும் மிகாமலும் (விகற்பமாயும்) வரும்.

(முன்னிலை வினைமுன் வலியியல்பு.)

உ-ம். உண்டனை + கொற்றா = உண்டனைகொற்றா.
உண்டாய் + சாத்தா = உண்டாய்சாத்தா.
உண்டனிர் + தேவரே = உண்டனிர்தேவரே.
உண்டனீர் + பூதரே = உண்டனீர்பூதரே.

ழகர ஈறு, முன்னிலை வினைக்கு இன்மையை விகுதியால் அறிக. (18-ஆ. 19-ஆ பதவியல்.)

(ஏவல்வினைமுன் வலியியல்பு.)

உ-ம். வா + கொற்றா = வாகொற்றா.
பாய் + சாத்தா = பாய்சாத்தா.
சேர் + தேவா = சேர்தேவா.
வாழ் + பூதா = வாழ்பூதா.

(விகற்பம்.)

நட + கொற்றா = நடக்கொற்றா-நடகொற்றா. } இவ்விகற்பம் இக்காலத்து அருமை.
எய் + கொற்றா = எய்க்கொற்றா-எய்கொற்றா. }

சூ-ம். ஆவி யாழ விறுதிமுன் னிலைவினை
யேவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே.

[ உயிர்முன் உயிர் புணர்தல். ]

16. (a) இ, ஈ, ஐ களுக்கு முன் உயிர் வரின், யகரம் உடம்படுமெய் (உடன்படுமெய்) யாக இடையில் வரும்.

| உ-ம். | அல்வழி. | வேற்றுமைவழி. |
|---|---|---|
| | மணி+அழகிது=மணியழகிது; | மணியழகு. |
| | தீ +அழகிது=தீயழகிது; | தீயழகு. |
| | பனை+அழகிது=பனையழகிது; | பனையழகு. |

(b) அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ கட்குமுன் உயிர் வரின், வகர உடம்படுமெய் தோன்றும்.

| | அல்வழி. | வேற்றுமைவழி. |
|---|---|---|
| உ-ம். | விள +அழகிது=விளவழகிது; | விளவழகு. |
| | பலா +அழகிது=பலாவழகிது; | பலாவழகு. |
| | கடு +அழகிது=கடுவழகிது; | கடுவழகு. |
| | பூ +அழகிது=பூவழகிது; | பூவழகு. |
| | நொ +அழகிது=நொவ்வழகிது; | நொவ்வழகு. |
| | கோ +அழகிது=கோவழகிது; | கோவழகு. |
| | கௌ+ அழகிது=கௌவழகிது; | கௌவழகு. |

(c) இடைச்சொல்லாகிய எகாரத்தின் முன் யகரமும், ஓரெழுத்து ஒருமொழியாகிய ஏகாரத்தின் முன் வகரமும், சே என்றதற்கு முன் யகரமும் வகரமும், உயிர்வரின் உடம்படு மெய்யாக வரும்.

உ-ம். அவனே + அழகன் = அவனேயழகன்—ய்.
ஏ + எலாம் = ஏவெலாம்—வ்.
சே + உழவு = சேயுழவு—சேவழவு—ய்; வ்.

உடம்படுமெய் = வருமொழி உயிர்க்கு உடம்பாகப்பொருந்தும் மெய்; உடன்படுமெய் = இரண்டு உயிரையும் உடன்படுத்தும்மெய். ஏ = பாணம்; சே = இடபம்.

சூ-ம். இஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும். 112.

எகரவினாமுன்னும் சுட்டுமுன்னும் நாற்கணமும் புணர்தல்.

17. (a) எகரவினா முன்னும் அ, இ, உ என்னும் மூன்று சுட்டின்முன்னும், உயிரும் யகரமும் வந்தால் வகரம் தோன்றும்.

உ-ம். எ + அணி = எவ்வணி . இ + அணி = இவ்வணி.
எ + யானை = எவ்யானை . இ + யானை = இவ்யானை.
அ + அணி = அவ்வணி . உ + அணி = உவ்வணி.
அ + யானை = அவ்யானை . உ + யானை = உவ்யானை.

(b) ஒழிந்த மெய்கள் (க், ச், த், ந், ப், ம், வ், ஞ், ங்) வரின், அம்மெய்களே மிகும்.

உ-ம். எ + குதிரை = எக்குதிரை. அ + மனை = அம்மனை.
அ + சாலை = அச்சாலை . இ + வழி = இவ்வழி.
இ + தலை = இத்தலை . உ + ஞாலம் = உஞ்ஞாலம்.
உ + படை = உப்படை . எ + ஙனம் = எங்ஙனம்.
எ + நாடு = எந்நாடு . ஒழிந்தமெய்கள் இரட்டின.

(c) செய்யுளில் சுட்டெழுத்து நீண்டொலித்தால் உயிர்வரின் வகரம் பெறாது யகரம் தோன்றுதலும், தனிக்குறிலைச்சார்ந்த மெய், உயிர்வரின், இரட்டாது, இடையே வகரம்(எழுத்துப்பேறாய்) வருதலும் உண்டு.

உ-ம். அ-ஆ+இடை=ஆயிடை.
விண்+அத்து=விண்வத்து. (எழுத்துப்பேறு.)

எழுத்துப்பேறு என்பது—விதிப்படி ஒரெழுத்து வரவேண்டிய இடத்து வராது, வேறோரெழுத்து வருவதாம்.

சூ-ம். எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் மெய்யின் வவ்வும்
பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு
நீளின் யகரமுந் தோன்றுத நெறியே. 113.

[குற்றியலுகர முற்றியலுகரங்கள் முன்
உயிரும் யகரமும் புணர்தல்.]

18. (a) குற்றியலுகரம் உயிர் முதன்மொழி வந்தால், தனக்கு ஆதாரமான மெய் நிற்கத், தான் கெடும்.

உ-ம். நாகு+அரிது=நாகரிது.
காடு+அலர்ந்தது=காடலர்ந்தது.

அருகி, உகரங்கெடாது உடம்படுமெய் பெறுதலும் உண்டு.

உ-ம். கெடுப்பது+ஏ=கெடுப்பதுவே.

(b) குற்றியலுகரம் யகரமுதன் மொழிவந்தால் இகரமாய்த் திரியும்.

உ-ம். நாகு + யாது = நாகியாது.
வரகு + யாது = வரகியாது.

(c) முற்றியலுகரமும் ஒவ்வோரிடத்து இவ்விரு விதியையும் பெறும்.

உ-ம். கதவு + அழகு = கதவழகு. உ-கெட்டது.
கதவு + யாது = கதவியாது. இகரமாய்த்திரிந்தது.

சூ-ம். உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்
யவ்வரி னிய்யா முற்றுமற் றேரோவழி. 114.

[உயிர்முன் வல்லினம் புணர்தல்.]

(பொதுவிதி.)

19. (a) இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின் முன் வரும் க, ச, த, பக்கள் பெரும்பாலும் இரட்டும்.

உதாரணம்.

ஆடி + கொண்டான் = ஆடிக்கொண்டான். } இயல்பீறு.
கங்கை + சடை = கங்கைச்சடை.

மரம் + கட்டை = மரக்கட்டை. } விதியீறு.
வட்டம் + கல் = வட்டக்கல்.

சூ-ம். இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே.

கச்சத்தப்ப என (எ. 35-ன்படிவரும்) சாரியை—இடைச்சொல்லாகையால் இவ்விதிப்படியிரட்டவில்லை; மெய்-பு. 13-a.

(b) வேற்றுமைவழியில் சில உயிரீற்று மாப் பெயர்முன் வரும் வல்லினம் மிகாமல், மெல்லினந் தோன்றும்,

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | மா + காய் | = மாங்காய். |
| | பழம் | = மாம்பழம். |
| | கொட்டை | = மாங்கொட்டை. |
| | விள + காய் | = விளங்காய். |
| | பழம் | = விளம்பழம். |

சூ-ம். மாப்பெயர் முன்ன ரினமெல் லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே. ()

[ அகரத்தின்முன் வலியியல்பு. ]

(சிறப்புவிதி.)

20. செய்யிய என்னும் வினையெச்சம், அகர வீற்றுப் பெயரெச்சம், அகரவீற்றுமுற்று, ஆறும் வேற்றுமை அகர உருபு, அஃறிணைப் பன்மைப்பெயர், அம்ம என்ற முன்னிலை உரையசை இடைச் சொற்களுக்கு முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| உண்ணிய | + கொண்டான் | = உண்ணியகொண்டான்; | வி-எ. |
| உண்ட | + குதிரை | = உண்டகுதிரை; | பெ-எ. |
| உள | + பன்றி | = உளபன்றி; | முற்று. |
| தன | + கைகள் | = தனகைகள்; | 6-வே. |
| பல | + சென்றன | = பலசென்றன; | அ-பெயர். |
| அம்ம | + கொற்று | = அம்மகொற்று; | இடைச்சொல். |

சூ-ம். செய்யிய வென்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரி னெச்சமுற் றற னுருபே
யஃறிணைப் பன்மை யம்மமுன் னியல்பே. ()

[ ஆகார வீற்றேடு புணர்தல். ]

21. அல்வழியில் ஆ, மா என்ற இருபெயர்க்கும், மியா என்ற முன்னிலையசை இடைச்சொல்லுக்கும், ஆகார வீற்று அஃறிணைப்பன்மை எதிர்மறை முற்றுக்கும் ஈறுகெட்ட வினையெச்சத்திற்கும் முன் வரும் வல்லினம் மிகாவாம்.

உ-ம். ஆ +குறிது =ஆகுறிது.
மா +குறிது =மாகுறிது. } எழுவாய்-தொ.
கேண்மியா+கொற்றா=கேண்மியாகொற்றா. இடை.
உண்ணா+குதிரைகள் =உண்ணாகுதிரைகள். முற்று.
தோன்றா+கெடும்=தோன்றாகெடும்: தோன்றாமல்.

செய்யா என்ற வாய்பாட்டு வினையெச்சத்தின் முன்னும், ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் முன்னும் வரும்வலி மிகும்.

உ-ம். பெய்யா+கொடுக்கும்=பெய்யாக்கொடுக்கும்: பெய்து கொடுக்கும்.
உண்ணாத-உண்ணா+குதிரை=உண்ணாக்குதிரை: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

சூ-ம். அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா. 117.

[ இகரவீற்றேடு புணர்தல். ]

22. அன்றி, இன்றி என்ற வினையெச்சக் குறிப்புச் சொற்களின் ஈற்று இகரம், செய்யுளில் உகரமாய் வரின், வருமொழி முதலில் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம். வாளன்றுபிடியா—வாளன்றிப்பிடியா.
பகையின்றுபல்லார்—பகையின்றிப்பல்லார்.

உகரமாகாது, இகரமாய் நிற்பின் இரட்டித்தேவரும்.

சூ-ம். அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே. 118.

[ இகர ஐகார வீற்றெடு புணர்தல். ]

23. அல்வழியில் இகர ஐகார ஈற்றுச்சொற்களோடு புணரும் வல்லினம்—மிகாமலும், மிகுந்தும், மிகுந்தும் மிகாமலும் (விகற்பமாயும்) வரும்.

உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| பரணி + கார்த்திகை = பரணிகார்த்திகை. | உம்மைத்தொகை. | இ-பு. |
| யானை + குதிரை = யானைகுதிரை. | | |
| மடி + திரை = மடிதிரை. | வினைத்தொகை. | |
| வனை + கழல் = வனைகழல். | | |
| காவி + கண் = காவிக்கண். | உவமைத்தொகை. | மிகுதி. |
| பனை + கை = பனைக்கை. | | |
| மாசி + திங்கள் = மாசித்திங்கள். | பண்புத்தொகை. | |
| சாரை + பாம்பு = சாரைப்பாம்பு. | | |
| கிளி + குறிது = கிளிக்குறிது—கிளிகுறிது. | எழு-தொடர். | விகற்பம். |
| தினை + சிறிது = தினைச்சிறிது-தினைசிறிது. | | |

சூ-ம். அல்வழி இஐம் முன்ன ராயின்
இயல்பு மிக்லும் விகற்பமு மாகும். 119.

[முற்றுகர வீற்றேடு வல்லினம் புணர்தல்.]

24. முற்றுகர வீற்று மூன்றும் (ஒடு) உருபும், ஆறும் ( அது ) உருபும், இயல்பாயும் விகாரமாயும் வரும் எண்ணும், வினைத்தொகையும், சுட்டுப்பெயரும் ஆகிய இவற்றின்முன்வரும் வல்லினம் இயல்பாம்.

உதாரணம்.

சாத்தனெடு + கொண்டான் = சாத்தனெடுகொண்டான். 3.
சாத்தனது + செவி = சாத்தனது செவி. 6. வே.
எழு + கை = எழுகை. } பண்புத்தொகை.
ஒன்று-ஒரு + தலை = ஒருதலை. } பண்புத்தொகை.
சுடு + பாறை = சுடுபாறை—வினைத்தொகை.
அது + பெரிது = அதுபெரிது—சுட்டு.

சாத்தனெடு } என்றவை உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் அல்ல
சாத்தனது } வோ எனின், தொடர் மொழியாய் இல்லாமல், உருபுவேறு சொல்வேறாய்ப் பிரிக்கப்படும் இயல்பை உடையவாதலின் குற்றியலுகரம் அல்லவாம்.

சூ-ம். மூன்று மாறுபெண் வினைத்தொகை சுட்டீ
றாகு முகர முன்ன ரியல்பாம். 120.

[ துற்றுகர விற்றுவிதி. ]

25. வன்றொடர் ஒழிந்த ஐந்து குற்றுகர ஈற்றின் முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் மிகாவாம்.

உ-ம். நாகு + கொடிது = நாகுகொடிது:—நெடில்.
எஃகு + சிறிது = எஃகுசிறிது:—ஆய்தம்.
வரகு + தீது = வரகுதீது:—உயிர்.
குரங்கு + பெரிது = குரங்குபெரிது:—மெலி.
தெள்கு + சிறிது = தெள்குசிறிது:—இடை.

வன்றொடராயினும், வினைத்தொகைமுன் வலி மிகாவாம்.

உ-ம். கூப்பு + கரம் = கூப்புகரம்.
நாட்டு + புகழ் = நாட்டுபுகழ்.
ஈட்டு + தனம் = ஈட்டுதனம்.

சூ-ம். வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி. 121.

26. வேற்றுமையில் இடைத்தொடர் முன்னும், ஆய்தத்தொடர் முன்னும், ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும் உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் மிகாவாம்.

உ-ம். தெள்கு + கால் = தெள்குகால்—இடை.
எஃகு + சிறுமை = எஃகுசிறுமை—ஆய்தம்.
நாகு + கால் = நாகுகால்—நெடில் (நாகு = இளமை.)
வரகு + கதிர் = வரகுகதிர்—உயிர்.

சூ. இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

[ குற்றுகரம் மாறும் வரலாறு. ]

27. நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றுகர மொழிகளுள், உகரம் ஏறிநின்ற டகர றகர மெய்கள்

பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும்; சிறுபான்மை அம்மெய்கள் அல்வழியிலும், ககர தகர மெய்கள் இருவழியிலும் இரட்டும்.

உ-ம். வேற்றுமைவழி. அல்வழி.

ஆடு + கால் = ஆட்டுக்கால். காடு + அரண் = காட்டரண்.
பாறு + கால் = பாற்றுக்கால். ஏறு + ஏனம் = ஏற்றேனம்.
முருடு + கால் = முருட்டுக்கால். குருடு + கோழி = குருட்டுக்கோழி.
முயிறு + கால் = முயிற்றுக்கால். களிறு + யானை = களிற்றியானை. (பாறு = பருந்து.) (ஏனம் = பன்றி.) (முருடு = ஒருவாத்தியம்.)

( ககர தகரம் இரட்டல். )

வெருகு + கண் = வெருக்குக்கண் — க். } (வெருகு = பூனை.)
எருது + கால் = எருத்துக்கால் — த். } வேற்றுமைவழி.
எருது + மாடு = எருத்துமாடு — த்: அல்வழி.

சூ-ம். நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுட்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே. ()

28. மென்றொடர்க் குற்றுகர மொழிகளுள் சில, வேற்றுமையில், தமக்கு இனமான வன்றொடராகும்.

உதாரணம்.

மருந்து + பை = மருத்துப்பை. கரும்பு + வில் = கருப்புவில்.
கன்று + ஆ = கற்று. செம்பு + குடம் = செப்புக்குடம்.

சூ-ம். மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே. 124.

29. சில குற்றுகரம் ஐகாரச்சாரியையை இறுதியிலே பெற்றுவரும்.

உ-ம். பண்டு+காலம் =பண்டைக்காலம்.
இன்று+நாள் =இற்றைநாள்.
அன்று+கூலி =அற்றைக்கூலி.
நேற்று+பொழுது=நேற்றைப்பொழுது.

சூ-ம். ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே. 125.

30. திசைச்சொல்லோடு திசைப்பெயரும் பிற பெயரும் புணரின், நிலைமொழி ஈற்றில் நின்ற உயிர் மெய்யும், அதன்மேல் நின்ற ககர ஒற்றும்-கெடுதலும், அங்ஙனம் நின்ற றகர ஒற்று-னகர ஒற்றாயும் லகர ஒற்றாயும் திரிதலும் ஆம்.

உ-ம். வடக்கு+கிழக்கு=வடகிழக்கு—க்கு-கெட்டது.
தெற்கு+கிழக்கு=தென்கிழக்கு:—ற்-ன்-திரிந்தது.
மேற்கு+பால் =மேல்பால்:—ற்-ல்-திரிந்தது.

சூ-ம். திசையொடு திசையும் பிறவுஞ் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலு மாம்பிற. 126.

31. காய் என்னும் சொல் வருமாயின், தெங்கு என்னும் நிலைமொழி முதல் நீண்டு, ஈற்றுயிர் மெய் கெடும்,

உ-ம். தெங்கு+காய்=தேங்காய்; தெங்கங்காய் எனவும்வரும்.

சூ. தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.()

M. 32. எண்ணுப்பெயரும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிறபெயரும் வரின், நிலைமொழியாக

நின்ற ஒன்று முதல் எட்டீறாகிய எண்ணுள், ஒன்று இரண்டு என்னும் இரண்டெண்ணும் முதல் நீளும்; மூன்று, ஆறு, ஏழு முதல் குறுகும்; ஆறும் ஏழும் அல்லாத ஆறு எண்களின் (1, 2, 3, 4, 5, 8.) ஈற்று உயிர்மெய்யும், ஏழு என்னும் எண்ணின் ஈற்று உயிரும் கெடும்.

உ-ம். ஆறு + ஆயிரம் = ஆறாயிரம்.<br>
ஏழு + ஆயிரம் = ஏழாயிரம். } உயிர்முன் குறுகாது.

ஆறு + பத்து = அறுபது.<br>
ஏழு + பத்து = எழுபது. } மெய்ம்முன்குறுகும்.

ஏழு + கடல் = எழ்கடல்—உயிர்கெட்டது.

(ஒழிந்த உதாரணம் பின்வரும்.)

சூ-ம். எண்ணிறை யளவும் பிறவு மெய்தின்<br>
ஒன்று முதலெட் டீறு மெண்ணுள்<br>
முதலீ ரெண்முத னீளு மூன்று<br>
மாறேழ் குறுகு மாறேழ லவற்றின்<br>
ஈற்றுயிர் மெய்யு மேழ னுயிரும்<br>
ஏகு மேற்புழி யென்மனார் புலவர். 128.

M. 33. இறுதி உயிர்மெய்கெட நின்ற ஒன்றினது ளகரமெய்-ரகரமெய்யாகத்திரிந்து, வருமொழி முதலில் மெய்வரின், உகரம்பெறும்; இரண்டினது ணகரமெய்யும் அகர உயிரும் கெட்டு, மெய்வரின் நின்ற ரகர மெய்-உகரம்பெறும்; உயிர்வரின் முதல்நீண்டேவரும்.

உதாரணம்.

ஒன்று+பத்து=ஒருபது; ஒன்று+ஆயிரம்=ஓராயிரம்.
இரண்டு+பத்து=இருபது; இரண்டு+ஆயிரம்=ஈராயிரம்.

யகர மெய்ம்முன், ஒன்று முதல் நீண்டும் வரும்.

உ-ம். ஒன்று+யானை=ஓர்யானை—ஒருயானை.

சூ-ம். ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்டனொற் றுயி ரேகவுவ் வருமே. 129.

M. 34. இறுதி உயிர்மெய் கெட்டுநின்ற மூன்று என்னும் எண்ணினது னகர ஒற்றுக்-கெடுதலும், வரும ஒற்றாகத் திரிதலும் ஆம். (முதல் குறுகல். 32.)

உ-ம். மூன்று+ஒன்று=மூவொன்று:—ன்-கெட்டது.
மூன்று+நூறு=முந்நூறு:-ன்-நகரஒற்றாகத்திரிந்தது.

சூ-ம். மூன்றனுறுப் பழிவும் வந்தது மாகும். 130.

M. 35. இறுதி உயிர்மெய்கெடநின்ற நான்கு என்னும் எண்ணினது னகர ஒற்று-உயிர்முன் லகர ஒற்றும், வல்லினத்தின்முன் றகர ஒற்றும் திரியும்.

உ-ம். நான்கு+ஒன்று=நாலொன்று:-ன்-ல் ஆயிற்று.
நான்கு+பத்து=நாற்பது:-ன்-ற் ஆயிற்று.

சூ-ம். நான்கன் மெய்யே லறவா குமமே. 131.

M. 36. இறுதி உயிர்மெய்கெட்டு நின்ற ஐந்து என்னும் எண்ணினது நகரமெய்-வரும் ஒற்றாகியும், அதற்கு இனமாகியும், கெட்டும் முடியும்.

உ-ம். ஐந்து + மூன்று = ஐம்மூன்று:-வருமொழிஒற்றாயிற்று.
ஐந்து + பத்து = ஐம்பது:-இனமாய்த்திரிந்தது.
ஐந்து + எடை = ஐயெடை:-கெட்டது.

சூ-ம். ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும். ()

M. 37. இறுதி உயிர்மெய்கெட்டு நின்ற எட்டு என்னும் எண்ணினது டகர ஒற்று-ணகர ஒற்றும்.

உ-ம். எட்டு + பத்து = எண்பது:-ட்-ண் ஆயிற்று.

சூ-ம். எட்ட னுடம்புணவ் வாகு மென்ப. 133.

M. 38. ஒன்பதுடனே பத்து என்பதும் நூறு என்பதும் புணரின், அந்நிலைமொழி வருமொழிகளுள், முன்னதாகிய நிலை மொழியினின்றும் மற்றைய வருமொழிகளாகிய பத்தையும், நூற்றையும், முறையே நூறெனவும், ஆயிரம் எனவும் திரித்து, நிலைமொழி முதலிலுள்ள ஒகர உயிரோடு தகரமெய்யை அதற்கு ஆதாரமாக நிறுத்தி, அந்நிலைமொழியிலுள்ள பத்தைக்கெடுத்து, அம்மொழிமுதற்கு அயல் நின்ற னகர மெய்யை முறையே ணகர மெய்யாகவும் ளகர மெய்யாகவும் திரித்தல் வேண்டும்.

உ-ம். ஒன்பது + பத்து = ஒன்பது-நூறு-தொன்பது-நூறு—தொன்-நூறு-தொள்-நூறு-தொண்ணூறு.
ஒன்பது + நூறு = ஒன்பது-ஆயிரம்-தொன்பது—ஆயிரம்-தொன்-ஆயிரம்-தொள்-ஆயிரம்-தொள்ளாயிரம்.

தொளாயிரம் எனக்கூறுவது இக்கால வழக்கம்.

தொண்ணூறு=பத்துத்-தொள்ளலாகிய (குறைந்த) நூறு;

தொள்ளாயிரம்=நூறு-தொள்ளலாகிய(குறைந்த) ஆயிரம், என்பன பொருளாம்.

சூ-ம். ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிறீப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே. 134.

M. 39. ஒன்று முதலாகிய எட்டு எண்களின் முன்னும் வருகிற பத்து என்னும் எண்ணினது நடுநின்ற தகர மெய் கெடுதலும், ஆய்தமாகத் திரிதலும் ஆம்.

உ-ம். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எழு, எட்டு+பத்து=ஒருபது—ஒருபஃது; இருபது—இருபஃது; முப்பது—முப்பஃது; நாற்பது—நாற்பஃது; ஐம்பது-ஐம்பஃது; அறுபது-அறுபஃது; எழுபது-எழுபஃது; எண்பது-எண்பஃது.

சூ-ம். முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தின்
இடையொற் றேக லாய்த மாகல்
எனவிரு விதியு மேற்கு மென்ப. 135.

M. 40. ஒன்று முதலாகிய பத்து எண்களும், ஆயிரமும் கோடியுமாகிய எண்ணுப்பெயரும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிறபெயரும் வந்து புணரின், நிலைமொழியாகிய பத்தினது ஈற்றிலுள்ள, து

-கெட்டு, இன் அல்லது இற்றுச்சாரியை ஏற்றுவரும்; ஒன்பதும் இவ்வாறே வருமொழியோடு புணரும்.

உ-ம். பத்து + ஒன்று = பதினொன்று—பத்தும் ஒன்றும்:— உம்மைத்தொகை. இன் = + கூட்டல்.
பத்து × ஒன்று = பதிற்றொன்று—பத்தாகிய ஒன்று:— பண்புத்தொகை. இற்று = × பெருக்கல்.

சூ-ம். ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே. 136.

ம. 41. இரண்டு என்பது வருமொழியாய் வரின், பத்து என்னும் நிலைமொழியிலுள்ள, து-கெட்டு தகர மெய் னகர மெய்யாகத் திரியும்.

உ-ம். பத்து + இரண்டு = பன்னிரண்டு.

சூ-ம். இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய்
கரந்திட வொற்றுனவ் வாகு மென்ப. 137.

ம. 42. ஒன்பது ஒழிந்த ( 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 10. ) பத்து எண்ணும் இரட்டித்துவரின், நிலைமொழி யிலுள்ள முதலெழுத்து ஒழிந்தவைகெட்டு, வருமொ ழிமுதலில் உயிர்வரின் வகரமும், மெய்வரின் வந்த மெய்யும் மிகும்.

உ-ம்: ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று.
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு.
மூன்று + மூன்று = மும்மூன்று.
நான்கு + நான்கு = நந்நான்கு.
ஐந்து + ஐந்து = ஐவைந்து.
ஆறு + ஆறு = அவ்வாறு.
ஏழு + ஏழு = எவ்வேழு.
எட்டு + எட்டு = எவ்வெட்டு.
பத்து + பத்து = பப்பத்து.

இவை போலவே வேறு-வேறு, பையப்-பைய என்பன—வெவ்வேறு, பைபய, எனவரும்.

சூ-ம். ஒன்ப தொழித்தவெண் ணெண்பது மிரட்டின்
முன்னதின் முன்னல வோட வுயிர்வரின்
வவ்வு மெய்வரின் வந்தது மிகனெறி. 138.

[ உளகார வீறு. ]

43. பூ என்னும் பலபொருள் குறித்த பெயர்ச்சொல் முன்வரும் வல்லினம்-மிகுதலேயன்றி, அவற்றிற்கு இனமாகிய மெல்லினமும் தோன்றும்.

உ-ம். பூ + கொடி = பூக்கொடி—பூங்கொடி.
பூ + சோலை = பூச்சோலை—பூஞ்சோலை.
பூ + தோட்டம் = பூத்தோட்டம்—பூந்தோட்டம்.
பூ + பணை = பூப்பணை—பூம்பணை.

சூ. பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும். ()

[ ஏகார ஓகார வீறு. ]

44. இடைச்சொல்லாகிய ஏகார ஓகாரங்கட்கு முன்வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம். அவனே + கொண்டான் = அவனேகொண்டான்.
அவனோ + கொண்டான் = அவனோகொண்டான்.

சூ-ம். இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே. ()

[ ஐகார வீறு. ]

45. ஐகார வீற்றுச்சொற்கள்-வேற்றுமைவழியில் வருமொழியோடு புணரும்பொழுது ஐ கெட்டும், கெடாதும்; அம்முச்சாரியை பெறும்.

உ-ம். எலுமிச்சை + காய் = எலுமிச்சங்காய்:—ஐ கெட்டு, அம் தோன்றிற்று.
புன்னை + கானல் = புன்னையங்கானல்:—ஐ கெடாது, அம் தோன்றிற்று.

சூ-ம். வேற்றுமை யாயி னைகா னிறுமொழி
ஈற்றழி வோடுமம் மேற்பவு முளவே. 141.

உயிரீற்றுப் புணரியன் முற்றிற்று.

## 4. மெய்யீற்றுப்புணரியல்.

[ மெய்முன் உயிர்புணர்தல். ]

1. நிலைமொழி யீற்றில் நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர்வந்து இணங்கி நிற்பது இயல்பு புணர்ச்சியாம்.

உ-ம். வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்.

சூ-ம். உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே. ()

[ தனிக்குறிலைச்சார்ந்த மெய் உயிருடன் புணர்தல். ]

2. தனிக்குறிலைச் சார்ந்த மெய், உயிர் வரின் இரட்டும்.

உ-ம். மண் + அரிது = மண்ணரிது.
மண் + அகம் = மண்ணகம்.

சூ-ம். தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும்.

[ ணகர னகர விதி. ]

(பொது விதி.)

3. (a) ணகர னகரங்கள், வேற்றுமை வழியில் வல்லினம் வந்தால் முறையே டகாரமும் றகாரமும் ஆம்; அல்வழியில் இயல்பாம்.

| | | |
|---|---|---|
| உ-ம். | சிறுகண் + களிறு = சிறுகட்களிறு.<br>பொன் + பானை = பொற்பானை. | வேற்றுமைவழி. |
| | மண் + கடிது = மண்கடிது.<br>பொன் + கடிது = பொன்கடிது. | அல்வழி. |

[ சிறப்புவிதி. ]

(b) சிறுபான்மை ஏழாம் வேற்றுமைத் தொகையில் திரியாது இயல்பாம்.

உ-ம். மண் புகுந்தும்; விண்பறந்தும்.

சூ-ம். ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்
கணைத்துமெய் வரினு மியல்பா கும்மே.

(c) தன், என் என்பவற்றிலுள்ள னகரம்-வல்லினம் வரின், திரிந்தும் திரியாமலும் (உறழ்ந்தும்), நின் ஈற்றுமெய் திரியாமலும், செயின் என்ற வாய்பாடெச்சத்து ஈற்றுமெய் திரிந்தும் வரும்.

உதாரணம்.

தன் + பகை = தற்பகை-தன்பகை. }
என் + பகை = எற்பகை-என்பகை. } வேற்றுமைவழி.
நின் + பகை = — -நின்பகை. }
வரின் + கொள்ளும் = வரிற் கொள்ளும்—அல்வழி.

சூ. தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ
டுறழு நின்னீ றியல்பா முறவே. 144.

4. தனிக்குறிலணையாத ணகர னகரங்கள், வருமொழி முதலில் வந்த நகரம் திரிந்த விடத்துக்கெடும்.

உதாரணம். அல்வழி. வேற்றுமைவழி.

தூண் + நன்று = தூணன்று; தூணன்மை, } இருவழியும்
களன் + நல்லன் = களனல்லன்; களனன்மை. } கெட்டன.

சூ-ம். குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே. 145.

[ மகர ஈறு. ]

5. (a) மகர விற்றுச்சொற்கள், இறுதிமகரம்கெட்டு உயிரீறாய் நின்று, இயல்புயிரீறுபோலப் புணர்வனவும், வல்லினம் வரின் கெடாது, அவற்றிற்கினமாய்த் திரிவனவுமாம்.

| உதாரணம். | அல்வழி. | வேற்றுமைவழி. | |
|---|---|---|---|
| வட்டம்+ஆழி | =வட்டவாழி, | மரவடி. | கெட்டுயிர் தோன்றல். |
| வட்டம்+கல் | =வட்டக்கல், | மரக்கோடு. | கெட்டுவலிமிக்கது. |
| நிலம் +தீது | =நிலந்தீது, | நங்கை. | இனமாய்த்திரிந்தது. |

சூ-ம். மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாய்த் திரிபவு மாகும்.

[ சிறப்புவிதி. ]

(b) வேற்றுமையில் சில விடத்தில் மகரம்கெட வலியாவது மெலியாவது வரும்.

உ-ம். குளம்+கரை=குளக்கரை-குளங்கரை: உறழ்ந்தது.

சூ-ம். வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வும்
அல்வழி யுயிரிடை வரினியல் பும்முள. 146.

6. நும், தம், எம், நம் என்னும் இந்நான்கு விகார மொழியீற்று மகரம், வருமொழி முதலில் வரும் ஞ, நக் களாகத் திரியும்.

உ-ம். நும்+ஞாண்=நுஞ்ஞாண்; நுந்நூல்: நீர்.
தம்+ஞாண்=தஞ்ஞாண்; தந்நூல்: தாம்.
எம்+ஞாண்=எஞ்ஞாண்; எந்நூல்: யாம்.
நம்+ஞாண்=நஞ்ஞாண்; நந்நூல்; நாம்.

N. B. நன்னூலெனின், நன்மையாகிய நூலாம்.
நன்மை-நல்+நூல்=நன்னூல்.

சூ-ம், நும், தம்,—
எம்நம் மீறா மவ்வரு ஞநவே. 147.

[யரழ ஈறு.]

7. (a) ய, ர, ழ என்ற ஒற்றுக்களுக்கு முன்வரும் க ச த பக்கள்-அல்வழியில் இயல்பாதலும், மிகுதலும் ஆம்.

உதாரணம். இயல்பு.

| | |
|---|---|
| வேய்+கடிது=வேய்கடிது. | |
| வேர்+சிறிது=வேர்சிறிது. | எழுவாய்த்தொடர். |
| வீழ்+பெரிது=வீழ்பெரிது. | |
| பேய்+பூதம்=பேய்பூதம். | |
| நீர்+கனல்=நீர்கனல். | உம்மைத்தொகை. |
| இகழ்+புகழ்=இகழ்புகழ். | |
| செய்+கடன்=செய்கடன். | |
| தேர்+பொருள்=தேர்பொருள். | வினைத்தொகை. |
| வீழ்+பொருள்=வீழ்பொருள். | |

மிகுதி.

| | |
|---|---|
| மெய்+கீர்த்தி=மெய்க்கீர்த்தி. | |
| கார்+பருவம்=கார்ப்பருவம். | பண்புத்தொகை. |
| யாழ்+கருவி=யாழ்க்கருவி. | |

கார் + குழல் = கார்க்குழல்—உவமைத்தொகை.
போய் + கொண்டான் = போய்க்கொண்டான்—வினையெச்சம்.

(b) வேற்றுமைவழியில் வலி மிகுதலும், இருவழியிலும் வலியாவது மெலியாவது மிகுதலும் (உறழ்வும்) ஆம்.

உ-ம். வேற்றுமைவழி.

நாய் + கால் = நாய்க்கால்.
தேர் + கால் = தேர்க்கால். } மிகுதி.
யாழ் + கால் = யாழ்க்கால்.

வேய் + குழல் = வேய்க்குழல்—வேய்ங்குழல். } உறழ்வு.
ஆர் + கோடு = ஆர்க்கோடு—ஆர்ங்கோடு.

அல்வழி.

பாழ் + கிணறு = பாழ்க்கிணறு—பாழ்ங்கிணறு—உறழ்வு.

(c) மூன்றும் வேற்றுமைத் தொகையில் சிறுபான்மை வலி மிகுந்தும் மிகாமலும் (உறழ்ந்தும்), ஏழாம் வேற்றுமைத் தொகையில் இயல்பாயும் வரும்.

உதாரணம்.

பேய் + கோட்பட்டான் = பேய்க்கோட்பட்டான்: உறழ்வு. 3.
வாய் + புகுவதெனினும் = வாய்புகுவதெனினும்—இயல்பு. 7.

சூ-ம். யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல். ()

[லகர ளகர ஈறு.]

( பொதுவிதி. )

8. (a) லகர ளகரங்கள் வல்லினம் வரின் வேற்றுமையில் முறையே றகர டகரங்களாம்.

உதாரணம்.

கல்+குறை=கற்குறை; முள்+குறை=முட்குறை: திரிபு.

(b) அல்வழியில் ஒரே இடத்தில் திரிந்தும் திரியாமலும் (உறழ்ந்தும்) வரும்.

உதாரணம்.

கல் +குறிது=கற்குறிது—கல்குறிது.
முள்+குறிது=முட்குறிது—முள்குறிது. } உறழ்ந்தது.

(c) இருவழியிலும் ல, ள க்கள்-மெல்லினம் வரின் ன, ணக் களாய்த் திரியும்.

| உதாரணம். | அல்வழி. | வேற்றுமைவழி. | |
|---|---|---|---|
| கல் | +ஞெரிந்தது=கன்ஞெரிந்தது; | கன்மலை. | } திரிபு. |
| முள் | +ஞெரிந்தது=முண்ஞெரிந்தது; | முண்முடி. | |

சூ-ம். லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப. 149.

[ சிறப்புவிதி ]

9. தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகரங்கள்-அல்வழியில் தகரம் வரின், றகர டகரங்களாய்த் திரிதலே யன்றி, ஆய்தமாகவுந் திரியும்.

உ-ம்: கல் +தீது=கற்றீது; கஃறீது.
முள்+தீது=முட்டீது; முஃடீது.

சூ-ம். குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉ மல்வழி யானே. 150.

10. (a) தனிக்குறிலை அணையாத ல, ளக்கள்-அல்வழியில் வருமொழி முதலில் வந்த தகரமானது திரியின் கெடும்.

உ-ம். தோன்றல்+தீயன்=தோன்றறீயன். வேள்+தீயன்=வேடீயன்.

(b) இருவழியிலும் வருமொழிமுதலில் வந்த நகரமானது திரியின் (ல ள) கெடும்.

உதாரணம். அல்வழி. வேற்றுமைவழி.

தோன்றல்+நல்லன்=தோன்றனல்லன்; தோன்றனன்மை.

வேள்+நல்லன்=வேணல்லன்; வேணன்மை.

(c) அல்வழியில் (8—b-யில், சொல்லியிருக்கிறபடி) உறழாது, சிலவிடத்தில் திரிந்தும், சிலவிடத்தில் திரியாதும் வரும்.

உதாரணம்.

| | | |
|---|---|---|
| வேல் +படை =வேற்படை. வாள் +படை =வாட்படை. | பண்புத்தொகை. | திரிபு. |
| வேல் +புருவம் =வேற்புருவம். வாள் +கண் =வாட்கண். | உவமைத்தொகை. | திரிபு. |
| கால் +கடிது =கால்கடிது. மரங்கள்+கடிய =மரங்கள்கடிய. | எழுவாய். | இயல்பு. |
| கொல் +களிறு =கொல்களிறு. கொள் +பொருள்=கொள்பொருள். | வினைத்தொகை. | இயல்பு. |

(d) வேற்றுமைவழியில் (8. உ-யில். சொல்லிய பொது விதிப்படி) திரியாது, சிலவிடத்தில் இயல்பாம்.

உதாரணம்.

| | |
|---|---|
| கால் + குதித்து = கால்குதித்து-காலால்.<br>வாள் + போழ்ந்து = வாள்போழ்ந்து-வாளால். | வேற்றுமை-இயல்பு. |

சூ-ம். குறில்செறி யாலள வல்வழி வந்த
தகரந் திரிந்தபிற் கேடுமீ ரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரின்
இயல்புந் திரிபு மாவன வுளபிற. 151.

[ வகர வீறு ]

M. 11. அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயரீற்று வகரம்-வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர, முறையே ஆய்தமும், மென்மையும், இயல்புமாகும்.

உ-ம். அவ் + கடிய = அஃகடிய.
இவ் + ஞானம் = இஞ்ஞானம்.
உவ் + யாவை = உவ்யாவை.

N. B. அவ் + ஞானம் = அஞ்ஞானம்: அம் + ஞானம் = அஞ்ஞானம் (6th.): அ + ஞானம் = அஞ்ஞானம் (உ-பு-17-b.) : அக்ஞானம்— அஞ்ஞானம் (வடமொழித்திரிபு) எனப்-பலவாறுய்த் தோற்றுமாதலின் இவ்வுதாரணம் கொடுக்கப்படவில்லை.

சூ-ம். சுட்டு வகரமூ வினமுற முறையே
ஆய்தமு மென்மையு மியல்பு மாகும். 152.

[ வருமொழித் தகர நகரத் திரிபு. ]

12. (a) ன, லக் களுக்கு முன் வரும் த, ந க்கள்-ற, னக் களாய்த்திரியும்.

| உதாரணம். | அல்வழி. | வேற்றுமைவழி. |
|---|---|---|
| பொன் + | தீது = பொன்றீது; | பொன் + தீமை = பொற்றீமை. |
| | நன்று = பொன்னன்று; | நன்மை = பொன்னன்மை. |
| கல் + | தீது = கற்றீது; | கல் + தீமை = கற்றீமை. |
| | நன்று = கன்னன்று; | நன்மை = கன்னன்மை. |

(b) ண, ளக் கள் முன்வரும் த, ந க்கள்-ட, ணக் களாய்த் திரியும்.

| உதாரணம். | அல்வழி. | வேற்றுமைவழி. |
|---|---|---|
| மண் + | தீது = மண்டீது; | மண் + தீமை = மட்டீமை. |
| | நன்று = மண்ணன்று; | நன்மை = மண்ணன்மை. |
| முள் + | தீது = முட்டீது; | முள் + தீமை = முட்டீமை. |
| | நன்று = முண்ணன்று; | நன்மை = முண்ணன்மை. |

சூ-ம். னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே. 153.

[ புணரியல்கட்தப் புறநடை. ]

13. (a) இடை, உரி, வடசொற்களில்—புணரியலில் கூறப்பட்டுள்ள தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பு என்ற விதியுள் வேறுபட்டு வருவனவற்றையும்; இலக்கணப்போலி மொழிகளும், மரூஉ மொழிகளும் இருவகைவழக்கிலும் முறைமைப்படி பொருந்துதலேயும் அறிந்து, புணர்த்தல் வேண்டும்.

உதாரணம்.

ஆன் + கன்று = ஆன்கன்று-இடையியல்பு. 3 ஃ-க்குவிரோதம்.

மழ + களிறு = மழகளிறு-உரியியல்பு. } உயி-பு-
ஆதி + பகவன் = ஆதிபகவன்-வடமொழியியல்பு. } 19. ஃ-வி.

இல் + முன் = முன்றில்-இலக்கணப்போலி.
அருமை + மருந்து + அன்ன + பிள்ளை = அருமந்தபிள்ளை.
சோழன் + நாடு = சோணாடு.
நும் (உன்) + தந்தை = நுந்தை.
பூதன் + தந்தை = பூந்தை.
முகடு (மூடு) + பூச்சி = மூட்டுப்பூச்சி.
பறை + அலகு = பலகறை.
} மரூஉமொழிகள்.

இருவகை வழக்கு = உலக வழக்கு, செய்யுள் வழக்கு; உலகவழக்கு என்பது-உயர்ந்தோர் வழக்கு.

(b) தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி, என வடமொழிச்சந்தி மூவகையாம்.

[ 1. தீர்க்கசந்தி. ]

அ, ஆ முன் அ, ஆ வரின் இரண்டுங்கெட ஆ வும்; இ, ஈ முன் இ, ஈ வரின் இரண்டுங்கெட ஈ யும்; உ, ஊ முன் உ, ஊ வரின் இரண்டுங்கெட ஊ வுந் தோன்றும்.

உ-ம். பத + அம்புயம் = பதாம்புயம்.
சிவ + ஆலயம் = சிவாலயம்.
சேநா + அதிபதி = சேநாதிபதி.
சதா + ஆநந்தம் = சதாநந்தம்.
} ஆ-தோன்றிற்று.

| | | |
|---|---|---|
| கிரி + இந்திரன் = கிரீந்திரன். | | |
| கிரி + ஈசன் = கிரீசன். | ஈ-தோன்றிற்று. | |
| மகி + இந்திரன் = மகீந்திரன். | | |
| நதி + ஈசன் = நதீசன். | | |

| | |
|---|---|
| குரு + உபதேசம் = குரூபதேசம். | |
| மேரு + ஊர்த்துவம் = மேரூர்த்துவம். | ஊ-தோன்றிற்று. |
| வதூ + உத்துவாகம் = வதூத்துவாகம். | |
| வதூ + ஊரு = வதூரு. | |

[2. குணசந்தி.]

அ, ஆ முன் இ, ஈ வரின் இரண்டுங்கெட ஏயும், உ, ஊ வரின் இரண்டுங்கெட ஓவுந் தோன்றும்.

| | |
|---|---|
| உ-ம். நர + இந்திரன் = நரேந்திரன். | |
| சுர + ஈசன் = சுரேசன் | ஏ-தோன்றிற்று. |
| தரா + இந்திரன் = தரேந்திரன். | |
| மகா + ஈசன் = மகேசன். | |

| | |
|---|---|
| பாத + உதகம் = பாதோதகம். | |
| ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன். | ஓ-தோன்றிற்று. |
| கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி. | |
| தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன். | |

[3. விருத்திசந்தி.]

அ, ஆ முன் ஏ, ஐ வரின் இரண்டுங்கெட ஐயும், ஓ, ஔ வரின் இரண்டுங்கெட ஔவுந் தோன்றும்.

உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| லோக + ஏகநாயகன் | = லோகைகநாயகன். | | ஐ-தோன்றிற்று. |
| சிவ + ஐக்கியம் | = சிவைக்கியம். | | |
| தரா + ஏகவீரன் | = தரைகவீரன். | | |
| மகா + ஐசுவரியம் | = மகைசுவரியம். | | |
| கலச + ஓதனம் | = கலசௌதனம். | | ஔ-தோன்றிற்று. |
| திவ்விய + ஔடதம் | = திவ்வியௌடதம். | | |
| கங்கா + ஓகம் | = கங்கௌகம். | | |
| மகா + ஔதாரியம் | = மகௌதாரியம். | | |

உதகம் = நீர்த்தம்; ஓகம் = வெள்ளம். திவ்வியம் என்ற வட மொழி—தென்மொழியில் திப்பியம் என வழங்கும்.

சூ-ம். இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்
போலியு மரூஉவும் பொருந்திய வாற்றிற்
கியையப் புணர்த்தல் யாவர்க்கு நெறியே. ()

மெய்யீற்றுப்புணரியன் முற்றிற்று.

## 5. உருபு புணரியல்.

[ சாரியைகள். ]

M. 1. அன், ஆன், இன், அல், அற்று, இற்று அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன்-முதலியவை-பதத்தின்முன், விகுதி பதம் உருபு என்ற மூன்றும் புணரும் பொழுதும், தனிமொழியிலும் வருதலின் பொதுச்சாரியைகளாம்.

உதாரணம்.

| | |
|---|---|
| ஒன்றன் கூட்டம்-அன். | எல்லாநம்மையும்-நம். |
| ஒருபாற்கு-ஆன். | எல்லீர்நும்மையும்-நும். |
| வண்டினகால்-இன். | ஒன்றேகால்-ஏ. |
| தொடையல்-அல். | நடந்தது-அ. |
| பலவற்றை-அற்று. | சாத்தனுக்கு-உ. |
| பதிற்றுப்பத்து-இற்று. | ஒற்றை-ஐ. |
| மரத்திலே-அத்து. | செய்துவாய்-கு. |
| நெஞ்சம்-அம். | கோன்-ன்;எனச் |
| எல்லார்தம்மையும்-தம். | சாரியைகள் முறையே வந்தன. |

கூ-ம். அன்ஆன் இன்னல் அற்றிற் றத்தம்
தம்நம் நும்ஏ அஉ ஐகுன
இன்ன பிறவும் பொதுச்சா ரியையே. 155.

[சாரியைவருமாறு.]

ப. 2. பதத்தின்முன் விகுதியேனும், பதமேனும், உருபேனும், புணரின்-சாரியை ஒன்றேனும், பலவேனும் வருதலும், வராதொழிதலும், இவ்விரண்டு மாதலுமாம்.

உதாரணம்.

| விகுதிப்புணர்ச்சி. | பதப்புணர்ச்சி. | உருபு புணர்ச்சி. | |
|---|---|---|---|
| நடந்தனன். | புளியங்காய். | அவற்றை: வருதல். | |
| நடந்தான். | புளிக்கறி. | தன்னை: தவிர்தல். | |
| நடந்தன. | நெல்லின்குப்பை. | ஆனை: | விகற்பம். |
| நடந்த. | நெற்குப்பை. | ஆவை: | |

ஆவினுக்கு, மரத்தினுக்கு—சாரியை பலவந்தன.

சூ-ம். பதமுன் விகுதியும் பதமு முருபும்
புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை
வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும் 156.

[ தான்முதலிய பெயர்க்குவிதி. ]

3. தான், தாம் ,நாம்; யான், யாம், நீ, நீர் என்ற இருதிணைப் பொதுவாகிய மூவிடப்பெயர் ஏழோடும் ஆறு உருபும் புணரின்-தான், தாம், நாம் என்ற மூன்றும் முதல்குறுகி,முறையே தன்னை தம்மை நம்மை என வரும்; யான், யாம், நீ, நீர் என்ற நான்கும் என்னை, எம்மை, நின்னை, நும்மை என விகாரப்பட்டு வரும்; இவ்வெழுபெயரோடும் கு உருபு புணரின், இடையே அகரச்சாரியைவரும்; அகரச்சாரியை வரினும், ஆறும் உருபு உயிர்கள் ( அது, ஆது, அ ) வரினும், இவ்விகார மொழிகளின் இறுதியவாய தனிக்குறிலைச்சார்ந்த ஒற்றுக்கள் இரட்டாவாம்.

உதாரணம்.

| | | |
|---|---|---|
| தான் + ஐ = தன்னை. | யான் + ஐ = என்னை. | |
| தாம் + ஆல் = தம்மால். | யாம் + ஆல் = எம்மால். | |
| நாம் + இன் = நம்மின். | நீ + இன் = நின்னின். | |
| முதல்குறுகின. | நீர் + இல் = நும்மில். | திரிந்தன. |

தன் + அ + கு = தனக்கு; தன் + அது = தனது; தன் + ஆது = தனாது;

தன் + அ = தன எனத்-தனிக்குறிலைச்சார்ந்த ஒற்றுக்கள், உருபுகள் இடைச்சொல்லாகையால் ( மெய்-பு-2. படி. ) இரட்டவில்லை.

நீ, நீர் என்பன உன், உம் எனத்திரிவதும் உண்டு.

சூ-ம். தான்தாம் நாம்முதல் குறுகும் யான்யாம்
நீநீர் என்எம் நின்னு மாம்பிற
குவ்வி னவ்வரு நான்கா மிரட்டல. 157.

[ ஆ, மா, கோ என்ற சொற்கள். ]

4. ஆ என்னும் பசுவின் பெயரும், மா என்னும் விலங்கின் பொதுப்பெயரும், கோ என்னும் இறைவனை உணர்த்திநிற்கும் பெயரும் உருபுகள் புணரின், னகரச்சாரியையைப் பெற்றும் பெறுமலும் வரும்.

உ-ம். ஆ + ஐ = ஆனை - ஆவை.
மா + ஐ = மானை - மாவை.
கோ + ஐ = கோனை - கோவை. } விகற்பித்தன.

சூ-ம். ஆமா கோனவ் வணையவும் பெறுமே. 158.

5. அஃறிணைப்பன்மையான வகர வீற்று மூன்று சுட்டுப்பெயருக்கும் வினவுக்கும் அற்றுச்சாரியை வரும்.

உ-ம். அவ் + ஐ = அவற்றை; இவ் + ஐ = இவற்றை;
உவ் + ஐ = உவற்றை; எவ் + ஐ = எவற்றை.

அற்றுச்சாரியையோடு இன்சாரியையும், உகரச்சாரியையும் பெற்று வருவது முண்டு.

உ-ம். அவ் + அற்று + இன் + ஐ = அவற்றினை.
அவ் + அற்று + இன் + உ + கு = அவற்றினுக்கு.

சூ-ம். வவ்விறு சுட்டிற் கற்றுறல் வழியே. 159.

[ அஃது முதலிய சுட்டுப்பெயர். ]

6. அஃது, இஃது, உஃது என்ற மூன்றுபெயர்களோடு உருபுகள்புணருமிடத்து இடையே அன் சாரியை வரின், சுட்டெழுத்துக்கு முன்னின்ற ஆய்தம் கெடும்.

உ-ம். அஃது + அன் + ஐ = அதனை.
இஃது + அன் + ஐ = இதனை.
உஃது + அன் + ஐ = உதனை - எனவே,

ஏனைய உயிர்முதன்மொழி புணரின், ஆய்தம் கெடாதாம்.

உ-ம். அஃது + அரங்கம் = அஃதரங்கம்.

உயிர்முன் கெடாதெனவே, வருமொழி முதல் மெய்யாயின், ஆய்தம் கெட்டே வரும்.

உ-ம். இஃது + துடக்கை = இதுதுடக்கை.

சூ-ம். சுட்டின் முன்னாய்த மன்வரிற் கெடுமே. 160.

[ அத்துச்சாரியை முதல் கேடுதல். ]

7. அத்துச்சாரியையின் அகர உயிர், அகரவீற்றின்முன் வகர உடம்படுமெய் பெறாது கெடும்.

உ-ம். மரம் + அத்து + குறை = மர + அத்து + குறை என (மெய்-பு-5-a-யின்படி) ம் கெட்டு, மர + அத்து = மரவத்து என (உயிர்-பு-16-bபடி) வகரம் தோன்றாது, சாரியையின் அகரங்கெட்டு, மரத்துக்குறை எனமுடிந்தது.

சூ-ம். அத்தி னகர மகரமுனை யில்லை. 161.

[ இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி. ]

8. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியானது வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொதுவிதியோடு ஒப்பமுடிதலேயன்றி, ( அங்ஙனம் விதித்த ) இயல்பில் விகாரமாகியும், விகாரத்தில் இயல்பாகியும், உயர்திணையில் ( ஐ ) உருபு விரிந்துந், தொக்கும், பொதுப்பெயரில் விரிந்தும், விரிதலொழிந்தும் வரும்.

உ-ம். நின் + புறம் = நிற்புறம் என இயல்பில் விகாரம்.
(மெய்-பு-3 ௳-க்கு விரோதம்.)
மண் + கொணர்ந்தான் = மண்கொணர்ந்தான் என விகாரத்தியல்பு. (மெய்-பு-3 உ-க்கு விரோதம்.)

நம்பியைக்கொணர்ந்தான் என-உயர்திணையில் ஐ உருபு விரிந்து வந்தது: அவ்வுருபு- தொகின், எழுவாயோ என்ற மயக்கம் உண்டாகும்.

நான்முகற்றொழுது என உயர்திணையிற்றொக்கது. கொற்றனைக் கொணர்ந்தான் எனப் பொதுப்பெயரில் விரிந்து வந்தது. ஆண் பெற்றாள் எனப் பொதுப்பெயரிற்றொக்கது.

சூ-ம். இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவு மாகுமை யுருபே. 162.
உருபு புணரியன் முற்றிற்று.

# 2. சொல்லிலக்கணம்.

## பெயரியல்.

பொருண் முதலியவற்றின் பெயரை உணர்த்தி, வேற்றுமை உருபையேற்கும் ஆற்றலுடைய சொல் பெயர்ச்சொல்லாம்.

[ சொல். ]

1. ஒருமொழியும், தொடர்மொழியும், பொது மொழியும் என மூவகையினதாய், இருதிணை ஐம்பாற் பொருளையும், அப்பொருளையன்றித் தன்னையும், மூன்றிடத்தும், வழக்கிலும், செய்யுளிலும், வெளிப்படையினும், குறிப்பினும் விளக்குவது சொல்லாம்.

சூத்திரம்.

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று
இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே. 163.

[ மூவகைமொழி. ]

2. (a) ஒருமொழிகளாவன—பகாப்பதமேனும் பகுபதமேனும் ஒருபொருளைத் தருவனவாம்.

உ-ம். 1. நிலம்:- பெயர். 3. மன்:- இடை.
2. நடந்தான்:- வினை. 4. நனி:- உரி.

(b) தொடர்மொழிகளாவன—அவ்விருவகைப் பதங்களும் இரண்டு முதலியவாகத் தொடர்ந்துநின்று இரண்டுமுதலிய பலபொருளைத் தருவனவாம்.

உ-ம். நிலம் வலிது; அது கொல்; சாலப்பகை; நிலங்கடந்த நெடுமால்.

(c) பொதுமொழிகளாவன—ஒன்றாய் நின்று ஒருபொருளைத் தந்தும், அதுவே தொடர்ந்து நின்று பலபொருளைத் தந்தும் இவ்விரண்டிற்கும் பொது வாய் நிற்பனவாம்.

உ-ம். ஒருமொழி. தொடர்மொழி.
எட்டு=8. என்+து =என்னை உண்.
தாமரை=மலர். தா+மரை=தாவுகின்ற மான்.
வேங்கை=புலி ஒருவகைமரம். வேம்+கை=வேகிறகை.
எழுந்திருந்தான்=எழுந்தான் (இரு-ப. 33.) எழுந்து+இருந்தான்=எழுந்தான்-உட்கார்ந்தான்.

சூ. ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
பலபொரு ளனபொது விருமையு மேற்பன. 164.

[ இருதிணை. ]

3. மக்கள் தேவர் நரகர் உயர்திணையாம்; அவரை ஒழிந்த விலங்குமுதலிய உயிருள்ளனவும், நிலம் நீர் முதலிய உயிரில்லாதனவும் அஃறிணையாம்.

உயர்-திணை=உயர்வாகிய ஜாதி.
அஃறிணை (அல் + திணை) உயர்வு அன்மையாகியஜாதி. } பண்பு-தொ.

மண்ணுலகில் மக்களாய்ப் பிறந்தவர் புண்ணியமிகுதியால் தேவராயும், பாவமிகுதியால் நரகராயுமாகிறுர்கள்.

சூ-ம். மக்க டேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை. 165.

[ ஐம்பால். ]

4. ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்றும் உயர்திணைக்குரியவாம்.

அறிவுமுதலியவற்றுல் ஆண் சிறந்தமையின், ஆண்பாலை முன்னர்க்கூறப்பட்டது; ஆண, பெண் இரண்டையும் பற்றிக் கூறுதலால்; பலர்பாலைப் பின்னர்க் கூறப்பட்டது.

பால்=பகுப்பு—பிரிவு.

சூ-ம். ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை.

N. B. ஆணுறுப்பு மிகுந்த அலியை ஆண்பாலென்றும், பெண்ணுறுப்புமிகுந்த அலியைப் பெண்பாலென்றும் கொள்ளவேண்டும். அதை அஃறிணையாகவுங் கூறலாம்; பேடுவந்தது. 166.

5. ஒன்றன்பால், பலவின்பால் என்ற இரண்டும் அஃறிணைக்கு உரியவாம்.

சூ-ம். ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை. 167.

[ சொல் உணர்த்துதல். ]

6. படர்க்கை வினைமுற்றுச்சொல்லும், பெயர்ச்சொல்லும்-இருதிணைக்கும், ஐம்பாலுக்கும் உரியனவாம்; ஒழிந்த தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய

ஒருமை வினைமுற்றுச்சொல்லும், பெயர்ச்சொல்லும்-இருதிணை ஆண், பெண், ஒன்று என்ற மூன்று ஒருமைப்பாலுக்கும், பன்மைச்சொற்கள்-பலர், பல என்ற பன்மைப்பாலுக்கும் உரியனவாம்.

படர்க்கையிடத்தில் பால் அறியலாம்; ஒழிந்த இடங்களில், ஒருமை பன்மையை மாத்திரம் அறியலாம்.

உ-ம்.

| படர்க்கை. | வினை. | பெயர். | |
|---|---|---|---|
| ஆண்பால். | நடந்தான். | அவன். | உயர்திணை. |
| பெண்பால். | நடந்தாள். | அவள். | |
| பலர்பால். | நடந்தார். | அவர். | |
| ஒன்றன்பால். | நடந்தது. | அது. | அஃறிணை. |
| பலவின்பால். | நடந்தன. | அவை. | |
| தன்மை ஒருமை. | நடந்தேன். | யான். | ஆண், பெண், ஒன்று. |
| பன்மை. | நடந்தோம். | யாம். | பலர், பல. |
| முன்னிலை ஒருமை. | நடந்தாய். | நீ. | ஆண், பெண், ஒன்று. |
| பன்மை. | நடந்தீர். | நீர். | பலர், பல. |

சூ-ம். படர்க்கைவினை முற்று நாமங் குறிப்பின்
பெறப்படுந் திணைபா லனைத்து மேனை
யிடத்தவற் றொருமைப் பன்மைப் பாலே. 168.

[ மூவிடம். ]

7. மூவிடமாவன—தன்மையும், முன்னிலையும், படர்க்கையுமாம்.

பேசுவோன் தன்மை; கேட்போன் முன்னிலை; பேசப் படுவோன் படர்க்கையாம்.

சூ-ம். தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே. ()

[ வழக்கு. ]

8. வழக்கானது இயல்பு, தகுதி என இரண்டாம்; அவை பின் வருமாறு மும்மூன்றாம்.

1. இயல்பு. இலக்கணமுடையது-இலக்கண நெறியால் வருவதாம் or தொன்றுதொட்டு எழுத்து வேறுபாடின்றி வரும் மொழியாம்.

உ-ம். நிலம், நீர்.

2. இலக்கணப்போலி-இலக்கணம் இல்லையாயினும் இலக்கணமுடையது போலத் தொன்றுதொட்டு (ஆதிமுதல்) வழங்கப்பட்டு வருவதாம்.

உ-ம். முன்றில் (இல்+முன்.) புறநகர் (நகர்+புறம்.)

இப்போலி-மொழி முன்பின்னாக மாறி வரும்.

3. மரூஉ—தொன்றுதொட்டு வருதலின்றி, இடையிலே சில எழுத்துக்கெட்டும், திரிந்தும், தோன்றியும் இலக்கணம் கெட்டு வழங்கிவருவதாம்.

உ-ம் மலாடு (மலையமா நாடு.) சோணாடு (சோழன் நாடு.)

இம்மூன்றும் எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லாற் கூறுதலால் இயல்புவழக்கெனப் பட்டன.

தகுதி. 1. இடக்கரடக்கல்-பெரியோரிடம் சொல்லத் தகாத சொல்லை மறைத்து வேறு சொல்லாற் கூறுவதாம்.

உ-ம். கால்கழுவி வருதும்; பவ்வீ.

2. மங்கலம்—மங்கலம் இல்லாததை ஒழித்து மங்கலமாகக் கூறுவதாம்.

உ-ம். திருமுகம் (ஓலை.); நன்காடு (இடுகாடு.)

3. குழூஉக்குறி—ஒவ்வொரு கூட்டத்தார் யாதாயினும் ஒருகாரணம்பற்றி, ஒரு பொருளினது பெயரை ஒழித்து, அப்பொருளை வேறொரு பெயராற் கூறுவதாம்.

உ-ம். சொல்விளம்பி=கள்; பறி=போன்.

இம்மூன்றும் இப்பொருளை அறிய இச்சொல்லைச் சொல்வது தகுதியன்று; வேறுசொல்லைச் சொல்வது-தகுதி எனக் கூறுதலால் தகுதி வழக்காம்.

சூ-ம். இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவென் றுகு மூவகை யியல்பும்
இடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல். ()

[ செய்யுள். ]

M. 9. எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடனாக இயற்றப்பட்ட உடம்புபோல-இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச்சொற்களால் பொருட்கிடனாகக் கல்வியறிவினால் செய்யுள் செய்யவல்லவர் அலங்காரம் பெறச் செய்வன செய்யுளாம்.

எழுவகைத்தாது—தோல், இரத்தம், இறைச்சி, மேதை, என்பு, மச்சை, சுவேதநீர். பொருள்—அகப்பொருள் or அகத்திணை, புறப்பொருள் or புறத்திணை என இருவகையாம்.

அகப்பொருள் என்பது அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில், மனத்தின்கண் உண்டாகும் காமவின்பத்தைப்பற்றிக் கூறுவதாம். புறப்பொருள் என்பது புறம்பாயுள்ள அறத்தையும் பொருளையும்பற்றிக் கூறுவதாம்.

சூ-ம். பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள். ()

[ வெளிப்படை குறிப்பு. ]

M. 10. இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றனை ஒழிக்கும் பொதுச்சொல்லும், வலித்தல் முதலிய ஒன்பது விகாரச்சொல்லும், மூவகைத் தகுதிவழக்குச் சொல்லும், ஆகுபெயர்ச்சொல்லும், அன்மொழித் தொகைச்சொல்லும், வினைக்குறிப்புச் சொல்லும் முதற்குறிப்புச் சொல்லும், தொகைக்குறிப்புச் சொல்லும், இவைபோன்ற பிறவும் குறிப்புச் சொற்களாம்.

உ-ம். 1. பொதுச்சொல்—ஆயிர மக்கள் போந்தார் என்றதில்-மக்கள் என்ற பொதுப்பெயரும் பொருதார் என்ற பொதுவினையும் உயர்திணைப்பெண்பாலையொழித்துப் பொருதற்கு உரிய ஆண்பாலைக்குறிப்பாலுணர்த்தின.

2. விகாரச்சொல்—மரைமலர் என்றதில்-மரை என்றது, மலர் என்றதால் தாமரையை உணர்த்திற்று.

3. ஆகுபெயர்ச்சொல்—புளிதின்றான் என்றதில்-புளி என்றது, தின்றான் என்றதால் புளிப்பையுடைய பழத்தை உணர்த்திற்று.

4. அன்மொழித்தொகை—பொற்றொடி வந்தாள் என்றதில்-வந்தாள் என்றதால் பொற்றொடி என்றது, தொடியினையுடைய மகளை உணர்த்திற்று.

5. வினைக்குறிப்பு—இவன் இப்போது பொன்னன் என்றதில்-இப்போது என்றதால் பொன்னையுடையவனாகயிருக்கிறான் என்ற வினைக்குறிப்புப் பொருளை யுணர்த்திற்று.

6. முதற்குறிப்பு—ஆத்திசூடி படித்தான் என்றதில் ஆத்திசூடி என்றது, இதனை முதலாக உடைய நூலை உணர்த்திற்று.

7. தொகைக்குறிப்பு—ஐவரோடு குந்தி வந்தாள் என்றதில் ஐவர் என்றது, குந்தி என்றதால் பாண்டவரை உணர்த்திற்று.

8. பிறகுறிப்பு—கல்லைக்கடித்து நன்ருய்ச்சமைத்தாய் என்றது, நன்ருய்ச்சமைக்கவில்லை என்றதையும், பாயாவேங்கை,பறவாக்கொக்குஎன்றன, பாயா பறவா என்றமையால் மரத்தையும் உணர்த்தின. கொக்கு=மாமரம்.

சூ-ம். ஒன்ருெழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதலெுகை குறிப்போ டின்ன பிறவுங்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை.

[ சொல்லினது வகை. ]

11. சொல்லானது—பெயரியற்சொல், பெயர்த்திரிசொல், வினையியற்சொல், வினைத்திரிசொல், இடையியற்சொல், இடைத்திரிசொல், உரியியற்சொல், உரித்திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப்பத்து வகையாம்.

சூ-ம். அதுவே,—
இயற்சொற் றிரிசொல் இயல்பிற் பெயர்வினை
எனவிரண் டாகு மிடையுரி யடுத்து
நான்கு மாந்திசை வடசொலணு காவழி. 173.

[ இயற்சொல். ]

12. கற்ருர்க்கும், கல்லார்க்கும் பொருளை விளக்கும் உலகவழக்கச்சொல்லே இயற்சொல்லாகும்.

உ-ம். 1. மண்—பெயர்; 3. அவனை—இடை.
2. நடந்தான்—வினை; 4. அழகு—உரி.

சூ-ம். செந்தமி ழாகித் திரியா தியார்க்கும்
தம்பொருள் விளக்குந் தன்மைய இயற்சொல்.

[ திரிசொல். ]

13. ஒருபொருளைத்தருகிற பல சொல்லாகியும், பல பொருளைத் தருகிற ஒருசொல்லாகியும் கற்றோர் உணரவருஞ்சொல் திரிசொல்லாகும்.

உ-ம். 1. (a) கிள்ளை, சுகம், தத்தை என்பன-கிளி என்னும் ஒருபொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.

(b) வாரணம் என்பது—கோழி, சங்கு, யானை முதலிய பல பொருள்களைக்காட்டும் ஒருபெயர்த் திரிசொல்.

2. (a) படர்ந்தான், சென்றான், என்பன-போயினான் என்னும் ஒருபொருள் குறித்த பலவினைத்திரிசொல்.

(b) வரைந்தான் என்பது—நீக்கினான், கொண்டான் என்னும் பலபொருள் குறித்த ஒரு வினைத்திரிசொல்.

3. (a) சேறும், வருதும் என்பவற்றுள் றும், தும் என்னும் விகுதிகள்—தன்மைப்பன்மை எதிர்காலமென்னும் ஒருபொருள் குறித்த பல இடைத்திரிசொல் (பதவியல் 17-c.)

(b) கொல் என்பது-ஐயமும், அசைநிலையுமாகிய பல பொருள் குறித்த ஓரிடைத்திரிசொல். (இடை. 11.)

4. (a) சால், உறு, தவ, நனி, கூர், கழி என்பன-மிகுதி என்னும் ஒருபொருள் குறித்த பல உரித்திரிசொல். (உரி-12.)

(b) கடி என்பது—காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு, மணம் முதலிய பல பொருள் குறித்த ஒருரித்திரிசொல். (உரி-13.)

சூ-ம். ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த வொருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும். ()

[ திசைச்சொல். ]

M. 14. செந்தமிழ் நிலத்தைச் சார்ந்த கொடுந்தமிழ்நிலங்களினின்றும், தென்மொழியும் வடமொழியும் ஒழிந்த பாஷைகளினின்றும் தமிழில் வந்து வழங்குஞ் சொற்கள் திசைச்சொற்களாம்.

உ-ம். தமிழ்ச்சொல். திசைச்சொல். நாட்டின்பெயர்.

| | | |
|---|---|---|
| 1. பசு | — பெற்றம் | — தென்பாண்டி. |
| 2. தாய் | — தள்ளை | — குட்டநாடு. |
| 3. தந்தை | — அச்சன் | — குடநாடு. |
| 4. வஞ்ச(க)ர் | — கையர் | — கற்காநாடு. |
| 5. தோட்டம் | — கிழார் | — வேணாடு. |

6. சிறுகுளம் — பாழி — பூழிநாடு.
7. வயல் — செய் — அருவாநாடு.
8. புளி — எகின் — அருவாவடதலை.
9. தோழி — இகுளை — சீதநாடு.
10. நீர் — வெள்ளம் — மலாடு.
11. மாமரம் — கொக்கு — துளுவநாடு.
12. சொல்லுதல் — செப்புதல் — தெலுங்கு.
13. அய்யோ — அந்தோ — சிங்களம்.

சூ. செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப. 176.

[வடசொல்.]

M. 15. ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுஎழுத்தினாலும், ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்துத்திரிந்த எழுத்தினாலும், இவ்விரண்டினாலும் வழங்குவன வடசொல்லாம்.

உ-ம். காரணம்—பொதுவெழுத்து.
சுகி —சிறப்பெழுத்து. (ஸ-வி.)
அரன் —ஈரெழுத்து. (ஹ.)

சூ-ம். பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல். 177.

[பெயர்ச்சொல்.]

16. இடுகுறிப்பொது, இடுகுறிச்சிறப்பு; காரணப்பொது, காரணச்சிறப்பு; காரணவிடுகுறி; வினை

யாலணையும் பெயர் என அறுவகையினவாய், வேற்றுமை சார்தற்கிடத்தனவாய், இருதிணை ஐம்பால் மூவிடத்துள் ஒன்றனை யேற்றுவருவன பெயர்ச்சொற்களாம். வினையாலணையும்பெயர் ஒன்றுக்குங் காலமுண்டு.

வினைமுற்று வேற்றுமையுருபையேற்றும்; மாறுபட்டும் வினையாலணையும் பெயராம்.

(வரலாறு.)

1. காரணம் பற்றாது வழங்குவது இடுகுறிப்பெயராம். (பகாப்பதமாயிருக்கும்.)

மரம்-எல்லாமரத்தையுங் குறித்தலால் இடுகுறிப் பொதுவாம்.

பனை—ஒருவகையைக் குறித்தலாற் சிறப்பாம்.

2. காரணம்பற்றி வழங்குவது காரணப்பெயராம். (பதுபதமாயிருக்கும்.)

அணி—அணியப்படுங் காரணத்தால் எல்லா ஆபரணத்தையுங்குறித்தலால் காரணப்பொதுவாம்.

முடி—முடியில் ( தலையில் ) கவிக்கப்படும் ஒரு அணியைக் குறித்தலால் காரணச்சிறப்பாம்.

3. காரணமாயும் இடுகுறியாயும் வழங்குவது காரண இடுகுறியாம்.

அந்தணன்-காரணங்கருதியபொழுது அழகியதண்மையை உடைய பலரையும், காரணங்கருதாதபொழுது பிராமணரையும், அம்புஜம்-காரணங்கருதிய பொழுது நீரில் முளைப்பனவற்றையும், காரணங்கருதாத பொழுது தாமரையையுங் குறித்தலால், காரண இடுகுறியாம். அம்பு=ஜலம்; ஜம்=முளைப்பது.

4. நடந்தான்—நடந்தானை: உருபையேற்ற வினையாலணையும்பெயர்.

நடந்தவன்: சொன்மாறுபட்ட வினையாலணையும் பெயர்.

அன்றியும் இடுகுறிமரபு, காரணக்குறிமரபு, இடுகுறியாக்கம், காரணக்குறியாக்கம் என நால்வகைப் பெயராய்க் கூறுவதும் உண்டு.

உ-ம். மரம், பனை—இடுகுறிமரபு.
அவன், அவள், விலங்கு, பறவை-காரணக்குறிமரபு.

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேல் *முட்டைக்குங் காடு."

என்றதில் குமரன் பெயரை முட்டைஎன்றது இடுகுறியாக்கம். (*முள்+தைக்கும்.)

பொன்னன், பூணன்-காரணக்குறியாக்கம்.
நடந்தவனை, நடந்தோனை-வினையாலணையுங் காரணக்குறியாக்கம்.

மரபென்பது தொன்றுதொட்டு வருவதாம். ஆக்கம் என்பது ஒருவரால் இடையிலே ஆக்கப்பட்டு வருவதாம்.

சூ-ம். இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

சூ-ம். இடுகுறி காரண மரபோ டாக்கந்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபாலிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே. 178.

[தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்கள்.]

17. தன்மைப்பெயர்—யான், நான்; யாம், நாம் என்பனவாம்; முன்னிலைப்பெயர்—நீ; எல்லீர், நீயிர், நீவிர், நீர் என்பனவாம்; இவ்வொன்பதும் அல்லாதவை படர்க்கைக்குரியவாம்; (எல்லாம் என்ற ஒன்றும் மூவிடத்திற்கும் உரியதாம்.)

N. B. எடா, எடி என்றவை-முன்னிலைகுறித்த தோழன், தோழிக்குவரும் பெயர்களாம். அவை இக்காலத்து, அடா, அடி என வழங்குகின்றன.

சூ-ம். தன்மை யானன் யானா முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ
அல்லன படர்க்கை எல்லா மெனல்பொது.()

[தொழிற்பெயர்க்கும் வினையாலணையும்பெயர்க்கும்
[இடங்கூறல்.]

18. தொழிற்பெயர் படர்க்கைக்கும், வினையாலணையும்பெயர் மூவிடத்திற்கும் உரியன.

தொழிற்பெயர் செய்கையை உணர்த்தும்; வினையாலணையும் பெயர் பொருளை உணர்த்தும். வினையாலணையும்பெயரைத் தொழிற்பெயரெனக்கூறுவது முன்னோர்வழக்கு.

உ-ம், யான் உணல்; நீஉணல்; அவன் உணல்-தொழிற்பெயர்;
உண்டேனை; உண்டாயை; உண்டானை-வினையாலணையும்பெயர்.

சூ-ம். வினையின் பெயரே படர்க்கை வினையா
லணையும் பெயரே யாண்டு மாகும். 180.

[பொதுப்பெயர்.]

19. தான், யான், நான், நீ என்னும் நான்கும் இருதிணை முக்கூற்று ஒருமைப்பெயராம்; தாம், யாம், நாம், எலாம் எல்லீர், நீயிர், நீர், நீவிர் என்னும் எட்டும் இருதிணையிருகூற்றுப் பன்மைப் பெயராம்.

(முக்கூற்று—ஆண், பெண், ஒன்று.) (இருகூற்று—பலர், பல.)

சூ-ம். தான்யா னானீ யொருமை பன்மைதாம்
யானா மெலாமெலீர் நீயிர்நீர் நீவிர். 181.

20. ஒன்று என்னும் எண்ணால் ஒருவன் ஒருத்தி என வருவனவன்றி இரண்டுமுதலாகிய எண்களால் பெயர்கள் வராவாம்.

சூ-ம். ஒருவ னொருத்திப் பெயர்மே லெண்ணில. ()

21. ஒருவர் என வழங்குஞ்சொல் உயர்திணை ஆண்பால் பெண்பால் இரண்டிற்கும் பொதுவாய்ப் பலர்பால் வினையைக்கொண்டு முடியும்.

உ-ம். ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பார்;
பெண்டிருள் ஒருவர் கொழுநன்வழி நிற்பார்.

சூ-ம். ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப்
பன்மை வினைகொளும் பங்கிற் றென்ப. 183.

[ஆகுபெயர்.]

22. ஒருபொருளின் இயற்பெயரானது அப்பொருளுக்குச் சம்பந்தமாகிய பிறிதொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு வழங்கிவருவது ஆகுபெயராம்;

அது-பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், நால்வகையளவை, சொல், தானி, கருவி, காரியம், கருத்தன், உவமைமுதலியவைகளின் காரணமாக வரும். ஆகுபெயர்க்கு வடமொழியில் இலக்கணை என்று பெயர். (இலக்கணை—லக்ஷணை.)

உ-ம். 1. தாமரை போன்ற பாதம்:— தாமரை என்ற முதலின் பெயர் சினையாகிய மலருக்கு வந்தமையால் முதலாகுபெயராம் or பொருளாகுபெயராம்.

2. ஊர் வந்தது:—ஊர் என்ற இடத்தின்பெயர், இடத்திலுள்ள ஜனத்திற்கு வந்தமையால் இடவாகுபெயராம் or தானவாகுபெயராம்.

3. கார் அறுத்தது:—கார்என்ற காலத்தின்பெயர், அக்காலத்து விளையும் பயிர்க்கு வந்தமையால் காலவாகுபெயராம்.

4. வெற்றிலை நட்டான்:— வெற்றிலை யென்ற சினையின் பெயர், அதனை உடைய கொடியாகிய முதலுக்கு வந்தமையால் சினையாகுபெயராம்.

5. நீலம் சூடினாள்:— நீலம் என்ற நிறத்தின் பெயர், அந்நிறத்தை உடைய மலருக்குவந்தமையால் குணவாகுபெயராம் or பண்பாகுபெயராம்.

6. வற்றலுண்டான்:— வற்றல் என்ற தொழிலின் பெயர், அத்தொழிலை அடைந்த பொருளுக்கு வந்தமையால் தொழிலாகுபெயராம்.

7. காலாலேகடந்தான்:-கால்என்ற எண்ணலளவைப் பெயர், அவ்வளவைக்கொண்ட உறுப்பிற்கு வந்தமையால் எண்ணலளவை யாகுபெயராம்.

8. வீசைதந்தான்:—வீசை என்ற நிறைப்பெயர், அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு வந்தமையால் நிறுத்தலளவை யாகுபெயராம்.

9. நாழி உடைந்தது:—நாழி என்ற முகத்தலளவைப் பெயர், மொண்டு அளக்கிறகருவிக்கு வந்தமையால் முகத்தலளவை யாகுபெயராம்.

10. முழம் தந்தான்:— முழம் என்ற நீட்டலளவைப் பெயர், அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு வந்தமையால் நீட்டலளவை யாகுபெயராம்.

11. உரைசெய்தான்:— உரை என்ற சொல்லின் பெயர், அதன் பொருளுக்கு வந்தமையால் சொல்லாகுபெயராம்.

12. விளக்கு முரிந்தது:—விளக்கு என்ற சுடரின் பெயர் அதற்கு இடமான தகழிக்கு வந்தமையால் தானியாகு பெயராம்.

தானி=ஸ்தானத்திலுள்ள பொருள், தகளி—தகழி=அகல்.

13. திருவாய்மொழி படித்தான்:—மொழி என்ற கருவியின்பெயர், அதனாலாகிய நூலுக்குவந்தமையால் கருவியாகு பெயராம். கருவி=காரணம்: காரணத்தின் பெயர் காரியத்திற்கு வருவது காரணவாகு பெயராம்.

14. அலங்காரம் படித்தான்:—அலங்காரம் என்றகாரியத்தின் பெயர், அதையறிவித்தற்குக் காரணமாகிய நூலுக்கு வந்தமையால் காரியவாகு பெயராம்: காரியத்தின் பெயர் காரணத்திற்கு வருவது காரியவாகுபெயராம்.

15. திருவள்ளுவர் படித்தான்:—திருவள்ளுவர் என்ற கருத்தாவின் பெயர் அவரால் இயற்றப்பட்ட நூலுக்கு வந்தமையால் கருத்தாவாகுபெயராம்: செய்தவன் பெயர் அவனால் செய்யப்பட்ட நூலுக்கு வருவது கருத்தாவாகு பெயராம்.

16. பாவை வந்தாள்:— பாவை என்ற உபமானத்தின் பெயர் அதுபோன்ற உபமேயமாகிய பெண்ணுக்கு வந்தமையால் உவமையாகுபெயராம்: உபமானத்தின் பெயர் உபமேயத்திற்கு வருவது உவமையாகு பெயர்.

இவ்வாகுபெயர் இருமடியாகுபெயர், மும்மடியாகுபெயர் அடைபடுத்தவாகு பெயரெனவும் வரும்.

உ-ம். புளி முளைத்தது என்றதில், புளி என்ற குணத்தின் பெயர் பழத்திற்காய், பழத்தின்பெயர் மரத்திற்கு ஆனமையால் இருமடியாகு பெயராம்.

கார் அறுத்தது என்றதில், கார் என்ற கரியநிறத்தின் பெயர், அந்நிறத்தை உடைய மேகத்திற்காய், மேகத்தின் பெயர் காலத்திற்காய், காலத்தின் பெயர் அக்காலத்தில்விளையும் பயிருக்கு ஆனமையால் மும்மடியாகு பெயராம்.

வெற்றிலை நட்டான்:—* வெறுமை என்ற அடைமொழியையடுத்த ஆகுபெயராம்.

இவ்வாகுபெயர் விட்டவாகுபெயர் விடாதவாகுபெயர் எனவும் பெயர்பெறும்.

உ-ம். ஊர் வந்தது என்னுமிடத்து-ஊர் என்பது, இடமாகிய தன்பொருளைவிட்டுத் தன்னிடத்துள்ள மனிதரை உணர்த்தலால் விட்ட ஆகுபெயராம்.

புளி தின்றான் என்னுமிடத்து-புளியாகியசுவையானது தன்பொருளை விடாதுநின்று, தன்பொருளின் வேறல்லாதபொருளை உணர்த்தலால் விடாத ஆகுபெயராம்.

N. B. *மற்றைய ஒவ்வொரு இலைக்கும் *அடைமொழி உண்டு என்பதையும், இவ்விலைக்கு அடைமொழி இல்லை என்பதையும் உணர்த்தற்கு, வெறுமைஎன்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. ஆகுபெயர் ஒருமொழியினதாகித் தொன்றுதொட்டு வருவது; அன்மொழித்தொகை இருமொழியினதாகிச் செய்யுள் செய்பவர் தம்மொழியினாலேனும் பிறர்மொழியினாலேனுங் கூறுவதாம்.

( * புளியிலை, அரசிலை-&c. )

சூ-ம். பொருண்முத லாறோ டளவைசொற் றானி
கருவி காரியங் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரா னதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன வாகு பெயரே. ()

[ வேற்றுமை. ]

23. பெயர்கட்கு இறுதியாய் அப்பெயர்ப்பொருளை வேற்றுமைப்படுத்துவன வேற்றுமையாம்; அவ்வேற்றுமைகள் எட்டாம்.

சூ. ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றுய்ப்பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை. ()

[ வேற்றுமையின் பெயரும் முறையும். ]

24. எட்டே வேற்றுமை என்றவற்றின் பெயரும் முறையும் என்னையெனில்—பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி என்றவையாம்.

சூ-ம். பெயரே ஐஆல் குஇன் அதுகண்
விளியென் றாகு மவற்றின் பெயர்முறை. ()

[ உருபு ஏலாப்பெயர்கள். ]

25. நீயிர், நீவிர், நான் என்ற மூன்றும் எழுவாய் வேற்றுமை ஒன்றற்கே வரும்.

சூ-ம். நீயிர் நீவிர்நா னெழுவா யலபெறா. 187.

[ பெயர் வேற்றுமை. ]

26. எட்டு வேற்றுமையுள் முதல்வேற்றுமையின் உருபாவது திரிபில்லாத பெயரேயாம். அதன் பொருளாவது வினையையும், பெயரையும், வினாவையுங்கொள்ள வருவதாம். அத்திரிபில்லாத பெயரை வேற்றுமை என்றது—தானே தன்பொருளை வினைமுதற் பொருளாய் வேறுபடுத்துதலாலேயாம். எழுவாய், வினைமுதல், கருத்தா, செய்பவன் என்பன ஒருபொருட் சொற்கள்.

உ-ம்: சாத்தன் வந்தான்—தெரிநிலைவினை.
அவன் பெரியன் —குறிப்புவினை.
அது குதிரை —பெயர்.
அவன்யார் —வினா.

வினைமுதற் பொருளாவது தொழிலில் சுதந்தரமுடைய பொருளாம்; சாத்தன் வந்தான் என்றதில், சாத்தன் வருகைத் தொழிலிற் சுதந்தரமுடையவன்.

எழுவாய்ச்சொல்லுருபுகள்—ஆனவன், ஆகின்றவன், ஆவான்; என்பவன் முதலிய ஐம்பாற் சொற்களுமாம்.

உருபே இல்லாதிருக்கச் சொல்லுருபு கூறியது வடமொழி வழக்காம்.

N. B. குறிப்புவினைமுற்றுப் பயனிலையும் பெயர்ப்பயனிலையும் சொல்லளவில் பேயயன்றோ? காலத்தைக்குறிப்பாக அல்லவோ கொள்ளவேண்டும்; பேதம் என்னையெனில், பெயர்ப்பகுபதத்தைக் குறிப்புவினைமுற்றுப் பயனிலை என்றும், பகாப்பதத்தைப் பெயர்ப் பயனிலை யென்றுங்கொள்க.

சூ-ம். எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினாக்கொள லதன்பய னிலையே.

[ இரண்டாம்வேற்றுமை. ]

27. இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ, அதன்பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை முதலியனவாம்.

உ-ம். குடத்தை வனைந்தான்—ஆக்கல்.
கோட்டையை இடித்தான்—அழித்தல்.
ஊரையடைந்தான்—அடைதல்.
மனைவியைத்துறந்தான்—துறத்தல்.
புலியை நிகர்த்தான்—ஒப்பு.
பொன்னையுடையான்—உடைமை.

அன்றியும் கருத்தின்றிச்செய்வது, கருத்தோடுசெய்வது என இருவகை உண்டு.

உ-ம். நெல்லையும் பதரையும் விலைக்கு வாங்கினான்—கருத்தின்றிச்செய்வது;
நெல்லையும் பதரையும் விற்றான்-கருத்தோடுசெய்வது.

செயப்படுபொருளாவது கருத்தாவினது தொழிலின் பயனை அடைவது. செயப்படுபொருள்-செய்பொருள்-கருமம்-காரியம் என்பன ஒருபொருட்சொற்கள். குடத்தை வனைந்தான் என்புழி, மண்கூட்டுகை திரிகை சுழற்றுகை முதலியவை வினைமுதலினது தொழில்; குடம்தோன்றுதல்-அத்தொழிலின் பயன்; அப்பயனை உறுவது குடமாதலால் குடம் செயப்படுபொருளாம்.

ஆக்கல்=முன் இல்லாததை உண்டாக்குதல்.
அழித்தல்=முன் உள்ளதைச் சிதைத்தல்.
அடைதல்=இரண்டும் இன்றித் தொழிற்பயனை அடைய நிற்றல்.

N. B வேற்றுமை, கொண்டுமுடியும் சொல்லினது பொருளை அறிந்து, பொருள் கூறுக.

சூ-ம். இரண்டா வதனுரு பையே யதன்பொருள்
ஆக்க லழித்த லடைத னீத்தல்
ஒத்த லுடைமை யாதி யாகும். 189.

[ மூன்றாம் வேற்றுமை. ]

28. மூன்றாம் வேற்றுமையின் உருபு முன் கூறிய ஆல் அன்றி ஆன், ஓடு, ஒடுவுமாம்; அவற்றின் பொருள்கள்—கருவி, கருத்தா, உடனிகழ்ச்சியாம். கருவி-முதற்கருவியும், துணைக்கருவியும்; கருத்தா—ஏவுதற்கருத்தாவும் இயற்றுதற்கருத்தாவும்; உடனிகழ்ச்சி-தலைமையுடனிகழ்ச்சியும், தலைமையில் உடனிகழ்ச்சியும் என இவ்விருவகையாம்.

உடன்—நிகழ்ச்சி யெனினும், ஒருவினையெனினும், கூடவெனினும் ஒக்கும்.

உ-ம். 1. வாளால்-ளான் பகைவனை வெட்டினான்-கருவி; கருவியாவது-கருத்தாவின் தொழிலுக்கு உதவியாயிருப்பது; வாளாற் பகைவனை வெட்டினான் என்றதில்-வெட்டுதல் கருத்தாவினது தொழில்; அவ்வெட்டுதலுக்கு உதவி வாள்.

2. மண்ணாற் குடத்தை வனைந்தான்— முதற்கருவி; முதற்கருவியாவது—செயப்படுபொருள் தோன்றி அழியும்வரையில் உடனிருப்பது; குடம் செயப்படுபொருள், மண் உடனிருப்பது.

3. திரிகையாற் குடத்தை வனைந்தான்—துணைக்கருவி; துணைக்கருவியாவது செயப்படுபொருள் தோன்றும் அளவும் துணையாயிருப்பது.

4. அரசனாலாகிய கோயில்—ஏவுதற்கருத்தா; ஏவுதற்கருத்தாவாவது அவ்வியற்றும் வினைமுதலினது தொழிலையுண்டாக்குந் தொழிலை உடையது.

5. தச்சனுலாகிய கோயில்—இயற்றுதற்கருத்தா; இயற்றும் வினைமுதலாவது கருவியைத்தொழிற்படுத்துவது; எழுவாய்வேற்றுமையில் வரும் வினைமுதலானது தன் விகுதிவினையினுலே முடியும்; மூன்ரும் வேற்றுமையில் வரும் வினைமுதல் செயப்படுபொருள் விகுதிவினையினுலே முடியும்.
6. மன்னனேடு மன்னன் வந்தான்—உடனிகழ்ச்சி; உடனிகழ்ச்சிப் பொருளாவது-வினைகொண்டுமுடியும் பொருளின்ருெழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருளாம்.
7. மன்னனேடு-னேடு மந்திரிவந்தான்—தலைமையுடனிகழ்ச்சி; தலைமையுடனிகழ்ச்சியாவது வினைகொண்டுமுடியும் பொருளின் உயர்வையுடையது.
8. மந்திரியோடு மன்னன் வந்தான்-தலைமையில் உடனிகழ்ச்சி; தலைமையில் உடனிகழ்ச்சியாவது-வினைகொண்டுமுடியும்பொருளின் இழிவையுடையது.

அருகி இவ்வுடனிகழ்ச்சியானது—வேறுவினை உடனிகழ்ச்சிப் பொருள், வினையில் பொருள், கலப்புறுபொருள், ஒப்புப்பொருள், ஒப்பலொப்புப்பொருள், ஒற்றுமைப்பொருள், அடைமொழிப் பொருள் எனவும் வரும்.

உ-ம். தொடியொடு தொல்கவின் வாடியதோள்— தொடிகழலுதல்; கவின் வாடுதலாகிய வேறுவினைப்பொருள். மலையொடு பொருதமால் யானை—மலைக்குப்பொருதல் இல்லை, வினையில் பொருள்; பாலொடுதேன்கலந் தற்று—கலப்புறுபொருள்; மதியொடு ஒக்கும் முகம்—ஒப்புப்பொருள்; விலங்கொடு மக்களனையர்-விலங்கு, ஒப்பலொப்புப் பொருள், எழுத்தொடு புணர்ந்தசொல்-எழுத்து, சொல்லோடு ஒற்றுமையுடையதாதலால், எழுத்து—ஒற்றுமைப்பொருள், கோபத்தோடு வந்தான்-வருவதற்கு விசேடணம் கோபமாதலால்-கோபம் அடைமொழிப்பொருள்,

பெரும்பாலும் ஆல், ஆன் உருபிற்குக்கருவியும், கருத்தா வும்; ஒடு, ஓடு உருபிற்கு உடனிகழ்ச்சியும் பொருளாகவரும்.

ஆல், ஆன் உருபிற்குக் கொண்டு என்பதும், ஒடு, ஓடு உருபிற்கு உடன் என்பதும் சொல்லுருபுகளாக வரும்.

சூ-ம். மூன்றா வதனுரு பாலா னோடொடு
கருவி கருத்தா வுடனிகழ் வதன்பொருள். ()

[ நான்காம் வேற்றுமை. ]

29. நான்காம் வேற்றுமையின் உருபு கு ஒன்றுமேயாம்; இதன் பொருள்-கோடல், பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலியனவாம்.

உ-ம். 1. இரவலர்க்குப் பொன்னைக்கொடுத்தான்-கோடல்; கோடற் பொருளாவது கொடுத்தற்றொழிலின் செயப்படுபொருளைத் தனக்கு உரியதாக்கிக் கொள்ளுதலையுடைய பொருளாம். கோடல், கோளி என்பன ஒரு பொருட்சொற்கள்.

2. பாம்புக்குப் பகை கருடன்—பகைதொடர் பொருள்; பகை தொடர்பொருளாவது ஒருபொருளினிடத்துள்ள பகை தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

3. சாத்தனுக்குச் சிநேகன் கொற்றன்-நட்புத்தொடர் பொருள் or நேர்ச்சி; நட்புத்தொடர்பொருளாவது ஒருபொருளினிடத்துள்ள நட்புத்தொடர்தற்கு இடமாகிய பொருளாம்.

4. அரசர்க்கு உரித்து அருங்கலம்-தகுதியுடைப்பொருள்; தகுதியுடைப்பொருளாவது தன்னோடு பொருந்துதற்குத் தகுதியாகிய பொருளையுடைய பொருளாம்.

5. குண்டலத்திற்குப் பொன்-முதற்காரணகாரியம் or அதுவாதல்; முதற்காரணகாரியப் பொருளாவது முதற்காரணத்தாலாகும் பொருளாம்.

இதை வேறு வேற்றுமையாய் மாற்றவேண்டுமானால், மண்ணாலாகிய குடம் என்றாற்போலப் பொன்னாலாகிய குண்டலம் எனல் வேண்டும்.

6. கூலிக்கு வேலை-நிமித்தகாரணகாரியம் or பொருட்டு; நிமித்தகாரணகாரியப் பொருளாவது நிமித்த காரணத்தாலாகும் பொருளாம்.

7. சாத்தனுக்கு மகன் கொற்றன்-முறைக்கிளைபொருள்; முறைக்கிளை பொருளாவது பிறப்பினால் ஒருபொருளின் முறைக்குத் தான் இயைந்து நிற்கும் பொருளாம்.

நான்காம் வேற்றுமைச் சொல்லுருபுகள்—பொருட்டு, நிமித்தம், ஆக என்பனவாம்; ஆக என்பது கு வ்வைப்பெற்று வரும்.

உ-ம். கூலியின்பொருட்டு வேலைசெய்தான்.
கூலியினிமித்தம் வேலைசெய்தான்
கூலிக்காக வேலைசெய்தான்.

சூ-ம். நான்கா வதற்குரு பாகுங் குவ்வே
கொடைபகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டுமுறை யாதியி னிதற்கிதெனல் பொருளே.

[ ஐந்தாம் வேற்றுமை. ]

30. இன்னும், இல்லும் ஐந்தாம் வேற்றுமையின் உருபாம்; அவற்றின் பொருள்களாவன--நீக்கல், ஒப்பு, எல்லை, ஏதுவாம்.

உ-ம். 1. மலையின் வீழ் அருவி—நீக்கல்; நீக்கப்பொருளாவது — பிரிவை உண்டாக்குந் தொழிலின்றிப் பிரிவை மாத்திரந் தன்னிடத்துடைய பொருளாம்.

2. காக்கை-யிற் (யைப்போல்)கரிது களம் பழம்— ஒப்பு: கரிது—வினை ( 37-b. )
யைக்காட்டிலும் ( பார்க்கிலும் )
கரிது களம் பழம்—எல்லை: கரிது-பெயர் (37-a)

ஒப்புப் பொருளாவது உபமேயப் பொருளிலும் தன்னிலும் இருக்கின்ற பொதுத்தன்மையால் உவமானமாகும் பொருளாம். ( பொதுத்தன்மை-கருமை. )

3. மதுரையின் வடக்குச் சிதம்பரம்-எல்லை: எல்லைப் பொருளாவது அறியப்படாத திசையளவு, வழியளவு, கால அளவு, பண்பு முதலியவற்றைக் குறிப்பித்தற்கு எல்லையாக நிற்கும் பொருளாம்.

4. கல்வியிற் பெரியன் கம்பன்—ஏது; ஏதுப்பொருளாவது ஒரு பொருளின் பெருமை முதலியவற்றிற்கு ஏதுவாகும் பொருளாம்.

நீக்கப்பொருளிலும் எல்லைப்பொருளிலும், இன் இல் உருபுகளின்மேல், நின்று இருந்து என்பவை-உம் பெற்றும் பெறாதும் சொல்லுருபுகளாகவரும்.

உ-ம். ஊரினின்றும் போயினன்—ஊரினின்று போயினன்.
ஊரிலிருந்தும் போயினன்-ஊரிலிருந்து போயினன்.

காட்டிலும், பார்க்கிலும் என்றவை-எல்லைப்பொருளில், சொல்லுருபுகளாக வரும். (உதாரணம். 2.)

சூ-ம். ஐந்தா வதனுரு பில்லு மின்னும்
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே. ()

[ ஆறம் வேற்றுமை. ]

31. ஆறாம் வேற்றுமையின் உருபு அது, ஆது, அ என்பனவாம்; அதுவும், ஆதுவும் அஃறிணை ஒருமைப் பெயரைக்கொண்டு முடியும்; அகரம் பன்மைப் பெயரைக்கொண்டு முடியும்; அவற்றின் பொருள்களாவன—குணமுந் தொழிலுமாகிய பண்பும், சினையும், ஒருபொருட் கூட்டமும், பலபொருட் கூட்டமும், ஒன்று திரிந்து ஒன்றானதும் (திரிபினுக்கம்) ஆகிய ஐந்து தற்கிழமைப்பொருளும்; பொருள், இடம், காலம் என்ற மூன்று பிறிதின்கிழமைப் பொருள்களுமாம்.

தற்கிழமை—தன்னின் வேறாகாத பொருளினது உரிமை.

பிறிதின்கிழமை—வேறாகிய பொருளினது உரிமை.

உ-ம் 1. சாத்தனது கருமை—குணம்.<br>
சாத்தனது வரவு —தொழில். } பண்புத் தற்கிழமை.<br>
2. சாத்தனது கை —உறுப்புத்தற்கிழமை.<br>
3. மாந்தரது தொகுதி—ஒன்றன் கூட்டத்தற்கிழமை.<br>
4. படைகளது தொகுதி—பலவின் ஈட்டத்தற்கிழமை.<br>
5. நெல்லினது பொரி—திரிபின் ஆக்கத்தற்கிழமை.<br>
} தற்கிழமை.

1. மாலது சக்கரம் —பொருட்பிறிதின்கிழமை.<br>
2. மாலது முல்லை —இடப்பிறிதின்கிழமை.<br>
3. மாரனது வேனில் —காலப்பிறிதின்கிழமை.<br>
தனது கை —ஆது; தனகைகள்—அ.

குறிப்புப் பெயரெச்சமாக வரும் உடைய என்பதைச் சொல்லுருபாகக் கூறுவதும் உண்டு.

உ-ம் முருகனுடைய குறிஞ்சி.

ஒற்றுமைப்பொருள் என்றும் ஒன்று உண்டு.

உ-ம். இராகுவினது தலை; எனதுயிர்;

இராகுவே தலையாதலாலும், என் என்பதற்கு விஷயம் உயிரே யாதலாலும் ஒற்றுமைப் பொருளாயின.

இவ்வேற்றுமைக்குக் குறையென்றும் பெயர், மேலே கூறப் பட்டுள்ள பொருள்களால் உருபு கொண்டுமுடியுஞ் சொல் அஃறிணைச் சொல்லென அறிக.

சூ-ம். ஆற னுருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னாக்க மாந்தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.()

[ ஏழாம் வேற்றுமை. ]

32. ஏழாம் வேற்றுமையின் உருபுகள் மேற் கூறிய கண் அல்லாமல்—கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை முதலியனவாம்.

இவற்றின் பொருள்கள் — தம்மை யேற்ற பெயர்ப்பொருளாகிய பொருளாதியாறும் மேற்கூறிய இருகிழமைப் பொருட்கும் இடமாகி நிற்றலாம்.

உதாரணம்.

1. மணியின்கண் இருக்கின்றது ஒளி —த.
பணையின்கண் வாழ்கின்றது அன்றில்—பி. } பொ-இடம்.

2. ஊரின்கண் இருக்கும் இல்லம் —த.
ஆகாயத்தின்கட் பறவை —பி. } இ-இடம்.

3. நாளின்கண் நாழிகை —த.
வேனிற்கட் பாதிரி பூக்கும் —பி. } கா-இடம்.

4. கையின்கண் உள்ளது விரல் —த.
விரலின்கண் உள்ளது மோதிரம் —பி. } சி-இடம்.

5. கறுப்பின்கண் உள்ளது அழகு —த.
இளமையிற்கட் செல்வம் —பி. } கு-இடம்.

6. ஆடற்கண் உள்ளது அபிநயம் —த.
ஆட்டத்தின்கட் பாட்டு —பி. } தொ-இடம்.

அன்றில் = ஒருவகைப் பறவை.

இவ்வுருபுகள் இணைந்தவரின் முன்னையது பெயராம்.

உ-ம். தலைக்—கட் சென்றான். இடைக்—கண் முரிந்தார்.

இணைந்தவாலன்றி, உருபு-பெயருக்குமுன் வருவதும் உண்டு.

உ-ம். உள்—ளூர், மீ—கண், கீழ்—நீர், இவ்வாறு வருதல் இலக்கணப்போலியுள் அடங்கும்.

சூ-ம் ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருண்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்ற லிதன்பொரு ளென்ப.

[ உருபுகள். ]

சூ-ம். கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முறைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே. ()

[ எட்டாம் வேற்றுமை. ]

33. எட்டாம் வேற்றுமையாகிய விளிக்கு வேறுருபு இல்லையாயினும் அவ்விளியடைந்த பெயரீறு திரிதல், கெடுதல், மிகுதல், இயல்பு, ஈற்றயல் திரிதல் முதலியன உருபுகளாம்; இவற்றின் பொருள்-இவற்றினை யேற்ற படர்க்கைப் பெயர்ப்பொருளை ஒருவன் தனக்கு எதிர்முகமாக அழைக்கப்படுவதாக வேற்றுமை செய்தலாம்.

உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| அம்மை—அம்மா; | நல்லை —நல்லாய்: | திரிபு. | ஈ. சூ. இ. |
| அரசன் —அரச; | அலவன்—அலவ: | கேடு. | |
| மகன் —மகனே; | தாய் —தாயே: | மிகுதி. | |
| நம்பி; பெருமான்; | தோழி; அரங்கன்: | இயல்பு. | |

புலவர்-புலவீர்; மக்கள்-மக்காள்: அயற்றிரிபு—சம்போதனம்.

N. B. அம்மா என்ற எட்டாம் வேற்றுமை—அம்மா வந்தாள் என இக்காலத்து முதல்வேற்றுமையாக வழக்கில் வழங்குகின்றது.

ஒருமை விளியைச் சம்புத்தி என்றும், பன்மை விளியைச் சம்போதனம் என்றும் வடமொழியில் கூறுவர்.

சூ-ம். எட்ட னுருபே யெய்து பெயரீற்றின்
திரிபு குன்றன் மிகுத லியல்பயற்
றிரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே. 195.

[ விளி உருபுத் புறநடை. ]

34. அண்மைவிளியில் இயல்பும், ஈறழிவும்; சேய்மைவிளியில் அளபும்; புலம்பல்விளியில் ஓவுமாகும்.

உ-ம். தம்பி—இயல்பு; அரச—ஈறழிவு: அண்மைவிளி.
மாஅல்—சிருஅர்; அளபு: சேய்மைவிளி.
அப்பாவோ ... ... ... ... ... ... புலம்பல்விளி.

சூ-ம். அண்மையி னியல்புமீ றழிவுஞ் சேய்மையின்
அளபும் புலம்பி னோவு மாகும். 196.

[ விளி ஏலாப் பெயர்கள். ]

35. ன, ள, ர, என்ற ஒற்றுக்களையிறுதியில் உடைய நுமன் முதலிய கிளைப்பெயரும், எவன் முதலிய வினைப்பெயரும், அவன் முதலிய சுட்டுப் பெயரும், தான், தாம் என்ற பொதுப்பெயரும், பிற மற்று என்ற இடையடியாகப்பிறக்கும் பிறன் மற்றை யான் முதலிய பெயர்களும் விளிக்கப்படாவாம்.

சூ-ம். நுவ்வொடு வினச்சுட் டுற்ற னளர
வைதுத் தாந்நா னின்னன விளியா. 197.

[ உருபு மயக்கம். ]

36. ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொருவேற்றுமையாற் கூறப்பட்டதாயினும் பொருள் திரியாவாம்.

உதாரணம்.

"இந்நகர்க்கே வாழ்கின்றோம்"-இந்நகர்க்கண் வாழ்கின்றோம்.
"தவ்வையைக் காட்டிவிடும்"—தவ்வைக்குக் காட்டிவிடும்.
குவ்வைக் கண்ணாகவும், ஐயைக்குவ்வாகவுந் திரிக்க.

சூ-ம். யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.()

[ வேற்றுமை முடிக்குஞ் சொல். ]

37. (a) பெரும்பாலும் எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம் வேற்றுமையும், ஆறும் வேற்றுமையும் பெயரைக்கொண்டு முடியும்.

உ-ம். மதுரையின் வடக்குச் சிதம்பரம்—5-வே; எல்லை.
சாத்தனதுகை ... ... ... ... ... ...6-ம் வேற்றுமை.

(b) ஒழிந்த எழுவாய் முதலிய வேற்றுமைகளெல்லாம் வினையைக்கொண்டு முடியும்.

உ-ம். 1. சாத்தன் வந்தான்; 2. குடத்தை வனைந்தான்; 3. வாளால் வெட்டினான்; 4. சாத்தனுக்குக் கொடுத்தான்; 5. கோயின் நீங்கினான்; 7. அவையின்கண் இருந்தான்; 8. கொற்றாகொள்.

(c) அவற்றுள் நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினையையன்றி வினையொடு பொருந்தும் பெயரையுங்கொண்டு முடியும்,

உ-ம். பிணிக்கு மருந்து—பிணிக்குக் கொடுக்கும் மருந்து.
மணியின்கண் ஒளி—மணியின்கண் இருக்கின்ற ஒளி.

(d) சிறுபான்மை எழுவாயானது பெயரையும், வினாவையுங்கொண்டு முடியும். (பெய—25.)

உ-ம். சாத்தன் அவன்; அவன் யார்.

N. B. இவ்வேற்றுமைகள் வினையைக்கொண்டு முடியின், காரகம் எனப் பெயர் பெறும்.

சூ-ம். எல்லை யின்னு மதுவும் பெயர்கொளும்
அல்ல வினைகொளு நான்கே ழிருமையும்
புல்லும்பெரும்பாலு மென்மனார்புலவர். 199.

N. B. இவ்வேற்றுமைப் பொருள்கள்—தத்தமக்கு உரிய வேற்றுமையை விட்டு, வேறு வேற்றுமையோடும் வரும்.

வரலாறு.

சூ-ம். (1) ஒன்று மூன்றுநான் காறெனு முருபொடு
வருமே வினைமுத லெனவகுத் தனரே.
(2) எல்லா வுருபொடுஞ் செயப்படு பொருளெழும்.
(3) ஒன்று மூன்றுநான் கைந்தா றுருபொடு
கருவி வருமெனக் கருதினர் பெரியோர்.
(4) எல்லா வுருபொடுங் கொள்வோனெழுமே.
(5) இரண்டுநான் கைந்தொடு மெழுமே நீக்கம்.
(6) நான்கைந் தாறே ழொடுகுறை நடக்கும்.
(7) ஒன்றி ரண்டுநான் கேழொ டிடமெழும்.

பெயரியன் முற்றிற்று.

## 2. வினையியல்.

வேற்றுமை உருபை ஏலாது பொருளின் தொழிலை உணர்த்தித், தெரிநிலையாயேனும் குறிப்பாயேனும் காலத்தை யேற்றுவருவது வினைச்சொல்லாம்.

### [ தெரிநிலை வினைச்சொல். ]

1. கருத்தா, கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள் என்ற அறுவகைப் பொருளையும் தருவது தெரிநிலை வினைச்சொல்லாம். செயப்படு பொருள்குன்றியவினை, ஐந்து பொருளைத்தரும்.

உ-ம். வனைந்தான் என்புழிக் குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற்காரணமும், தண்டசக்கரங்களாகிய துணைக்காரணங்களும், வனைதற்கு ஆதாரமாகிய இடமும், வனைதற்கு முதற்காரணமாகிய செயலும், இறந்த காலமும், குடம் முதலிய செயப்படுபொருளுந் தோன்றுதல் காண்க.

கொடி ஆடிற்று—செயப்படுபொருள் குன்றியவினையாதலால், அது ஒழிந்த ஐந்து பொருளும் தோன்றுதல் காண்க.

பகுதி, விகுதி, இடைநிலைகளால் முறையே செயலும், செய்பவனும், காலமும் வெளிப்படையாகத் தோன்றும்; ஏனையவை குறிப்பாய்த் தோன்றும்.

சூ-ம். செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்
செய்பொரு ளாறுந் தருவது வினையே. 200.

[ குறிப்பு வினைச்சொல். ]

2. பொருளாதி ஆறும் அடியாகத்தோன்றி கருத்தா முதலாகச் சொல்லப்பட்ட ஆறனுள் விகுதியால் கருத்தா ஒன்றையுமே விளக்குதல் வினைக்குறிப்புச் சொல்லாம்.

உதாரணம்.

1. குழையன்:—பொருள். 4. கண்ணன்:—சினை.
2. அகத்தன்:—இடம். 5. கரியன்:—குணம்.
3. ஆதிரையான்:—காலம். 6. நடையன்:—தொழில்.

சூத்திரம்.

பொருண்முத லாறினுந் தோற்றிமுன் னாறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே. ()

[ வினைச்சொற்களை வகுத்தல். ]

3. தெரிநிலையாயும் குறிப்பாயும் வரும் வினைச்சொற்கள்-முற்றுவினை, பெயரெச்சவினை, வினையெச்சவினை என மூவகையினதாகி, திணை பாலிடத்து ஒன்றற்கு உரியவாகியும் பொதுவாகியும் வரும்.

உ-ம். நடந்தான்—தன்வினை; நடத்தினான்—பிறவினை; வெளுத்தான்: பொதுவினை.

நடந்தான்—விதிவினை; நடவான்:—மறைவினை; வேவான்:—பொதுவினை.

உண்டான்:—செய்வினை; உண்ணப்பட்டான்—செயப்பாட்டுவினை; முதலை உண்டான்:—பொதுவினை.

உண்ணும்:—பலர் ஒழிந்த நான்கு பால்கட்கும், நிகழ்காலம் எதிர்காலம் இரண்டிற்கும் உரிய முற்று.

தேடிய வந்தான்; தேடிய சாத்தன்:—பொதுவெச்சம்.

இங்ஙனங் கூறியவண்ணம் வினை ஒவ்வொன்றும் தன்வினை—பிறவினை, விதிவினை—மறைவினை, செய்வினை—செயப்பாட்டுவினை என இவ்விருவகையாம்.

கூ-ம். அவை தாம்,—

முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி
ஒன்றற் குரியவும் பொதுவு மாகும். 202.

[ முற்றுவினை. ]

4. செய்பவன் முதலிய ஆறையுந் தோற்றுவித்துத் திணை, பால், இடத்தைக்காட்டும் முற்றுவிகுதியோடு கூடி, பொருட்பெயர் முதலிய ஆறையுங் கொண்டு முடிவது முற்றுவினையாம்.

உதாரணம்.

| | தெரிநிலை. | குறிப்பு. | |
|---|---|---|---|
| 1. | செய்தான் அவன்: | பெரியன் அவன்: | பொருள். |
| 2. | குளிர்ந்தது நிலம்: | வலியது நிலம்: | இடம். |
| 3. | வந்தது கார்: | கரியது கார்: | காலம். |
| 4. | குவிந்தது கை: | சிறியது கை: | சினை. |
| 5. | வந்தது நன்மை: | உள்ளது நன்மை: | குணம். |
| 6. | ஒழிந்தது பிறப்பு: | கொடியது பிறப்பு: | தொழில். |

சூத்திரம்.

பொதுவியல் பாறையுந் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரல தேற்பில முற்றே. 203.

[ இருதிணைப் பொதுவினை. ]

5. தன்மைவினைமுற்றும் முன்னிலைவினைமுற்றும், வியங்கோள்வினைமுற்றும், வேறு-இல்லை-உண்டு என்ற மூன்று குறிப்பு வினைமுற்றும், பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் இருதிணைக்கும் பொது வினையாம்.

N. B. வேறு, இல்லை, உண்டு என்ற மூன்றும் பகாப்பதம். இல்லை என்றது இல் என இறுகுறைந்து வருவதும் உண்டு. உண்டு என்றதை உண்மை+டு எனப்பிரிக்கின் ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்றும். (பதவியல்—14. உண்மை=இருத்தல்,) உண்+டு எனப்பிரிக்கின் தன்மை ஒருமை வினைமுற்றும். (பதவியல்—16. உண்டு=உண்டேன்.) உண்+ட்+உ எனப்பிரிக்கின் இறந்தகால வினையெச்சமாம். (பதவியல்—24. உண்டு=சாப்பிட்டு.) வேண்டும், தகும், படும் என்ற சொற்களும் மூவிடத்திற்கும் உரியனவாம்.

சூ-ம். தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை
உண்டீ ரெச்ச மிருதிணைப் பொதுவினை. 204.

[ பெயரெச்சம். ]

6. திணை, பால், இடத்தைக்காட்டும் முற்று விகுதிபெறாத குறைச்சொல்லாய், செய்பவன் முதலிய அறுபெயரையுங் கொண்டுமுடியும்வினை—பெய

ரெச்சமாம்; செய்த, செய்கின்ற, செய்யும் என்றமூன்றும் முறையே முக்காலங்கட்கும் உரிய வாய்பாடாம்; தெரிநிலையில் செயலுங் காலமுந்தோன்றும்.

N. B. குறிப்பெச்சத்தில் பகுதி-பெயராகையால் செயலும், இடைநிலையின்மையால் காலமுந் தோன்றாவாம். இதை வினையெச்சத்திற்குங் கொள்க.

உதாரணம்.

உண்ட—உண்கின்ற—உண்ணும் சாத்தன்:—வினைமுதல்.
கலம்:—கருவி.
வீடு:—நிலம்.
ஊண்:—செயல்.
பகல்:—காலம்.
சோறு:—செய்பொருள்.

குறிப்பெச்சம். உள்ள, பெரிய, நல்ல, முகத்த—களிறு.

சூ-ம். செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே.

கு-ம். காலமும் வினையுந் தோன்றிப்பா லொன்றுறா
பெயர் கொள்ளும்மது பெயரெச் சம்மே. 205.

7. செய்யும் என்ற வாய்பாட்டுப் பெயரெச்சத்தின் இறுதி உயிர்மெய்கெடுதலும், செய்யுளில், அதன் இறுதி உம் உந்து எனத்திரிதலும் ஆம்; அது முற்றாயின், இறுதி உயிரேனும் உயிர்மெய்யேனும் கெட்டு வருதலும் உண்டு.

உதாரணம்.

| | | |
|---|---|---|
| ஆகும் பொருள் | —ஆம்பொருள், | உயிர்மெய் கெட்டது. |
| வாவும் புரவி | —வாம்புரவி, | |
| பாயும் | —பாயுந்து, | —உம்—உந்து ஆயிற்று. |
| போலும் | —போன்ம், | முற்றில் உயிர் கெட்டது. |
| மருளும் | —மருண்ம், | |
| ஆகும் | —ஆம், | உயிர்மெய் கெட்டது. |
| முடியும் | —முடிமே, | |
| உரையும் | —உரைமோ, | |

சூ-ம். செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ்
செய்யுளு ளும்முந் தாகலு முற்றேல்
உயிரு முயிர்மெய்யு மேகலு முளவே. 206.

[ வினையெச்சம் ]

8. திணை பால் இடத்தைக்காட்டும் முற்றுவிகுதி பெறாத குறைச்சொல்லாய், வினையைக்கொண்டுமுடிவது வினையெச்சமாம்.

தெரிநிலை.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | இறந்தகாலம். | உண்டு. | போவான். |
| | நிகழ்காலம். | உண்ண. | |
| | எதிர்காலம். | உண்ணின். | |
| | குறிப்பு. | அன்றி. | போவான். |
| | | இன்றி. | |

இக்குறிப்பெச்சம் பண்படியாகத் தோன்றும்.

வினையானது குறைந்துநிற்பது வினையெச்சம்.

சூ-ம். தொழிலுங் காலமுந் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே. 207.

[ வினையெச்ச வாய்பாடுகள். ]

9, இறந்தகால வாய்பாடு—செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென;

நிகழ்கால வாய்பாடு—செய;

எதிர்கால வாய்பாடு—செயின், செய்யிய, செய்யியர் என்பனவும்; வான், பான், பாக்கு என்ற விகுதிகளை யுடையனவும், இவை போன்ற பிறவுமாம்.

| உ-ம். இறந்தகாலம். | நிகழ்காலம். | எதிர்காலம். |
|---|---|---|
| 1. நடந்துவந்தான். | 1. நடக்கவல்லன். | 1. வரிற்கொள்ளும். |
| 2. உண்குபுபோனான். | | 2. ஆடியதந்தான். |
| 3. பெய்யாக்கொடுக்கும். | | 3. உண்ணியர் வருவான். |
| 4. காணா மகிழ்ந்தான். | | 4. கொல்வான் சென்றது. |
| 5. உண்ணெனப்போனான். | | 5. தின்பான் புகுந்தது. |
| | | 6. செய்பாக்கு வந்தான். |

N. B. செய என்ற வாய்பாட்டெச்சம் காரணப்பொருட்டாய் இறந்த காலத்தையும், காரியப்பொருட்டாய் எதிர்காலத்தையும், இவ்விரண்டும் அல்லாமல் வரும்பொழுது நிகழ்காலத்தையும் உணர்த்துவதால், அதை முக்காலத்திற்கும் பொதுவாகிய வினையெச்சம் எனக்கூறுவதும் உண்டு. காரணப்பொருட்டில் வரும்பொழுது செய்து என்றதின் திரிபாகிய செய என்றும், காரியப்பொருட்டில் வரும் பொழுது செயின் என்றதின் திரிபாகிய செய என்றும், வாய்பாடு கூறுக.

உதாரணம்.

1. மழை பெய்ய நெல் விளைந்தது-இறந்தகாலம். (காரணம்)
2 நெல் விளைய மழை பெய்தது —எதிர்காலம். (காரியம்)
3. சூரியன் உதிக்கச் சாத்தன் வந்தான்—நிகழ்காலம்.(இரண்டு மில்லை.)

சூத்திரம்.

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றுறுமுக் காலமு முறைதரும். 208.

[ வினையெச்சங்களின் முடிபு. ]

10. மேற்கூறிய செய்து, செய்பு, செய்யா, செய்யூ என்ற நான்கும், வான் பான் பாக்கு என்ற மூன்றும், தன்-வினைமுதல் வினையைக்கொண்டு முடியும். இடைநின்ற செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்ற ஐந்தும், இவை போன்ற பிற வினையெச்சங்களும்-தன்—வினைமுதல் வினையையும், பிற-வினைமுதல் வினையையுங்கொண்டு முடியும்.

உதாரணம்.

தான்-நடந்து வந்தான்—உ. கொல்வான் சென்றான்-வான்.
உண்குபு போனான்-பு. அலைப்பான் புகுந்தான்-பான்.
கல்லாக் கழித்தான்-ஆ. தருபாக்கு வருவான்-பாக்கு.
காணூ மகிழ்ந்தான்—ஊ என்றவை, வினைமுதலின் வினையைக் கொண்டன.

தான்-பிறன்: உண்டென மகிழ்ந்தான்—என.
உண்ண வருகிறான் —அ.
உண்ணின் மகிழ்வான் —இன்.
உண்ணிய வருவான் —இய.
உண்ணியர் போவான் —இயர்.

தன்வினைமுதல் வினையையும் பிறவினைமுதல் வினையையுங் கொண்டன.

சூ-ம். அவற்றுள்,—
முதலி னைந்து மீற்றின் மூன்றும்
வினைமுதல் கொள்ளும் பிறவு மேற்கும்பிற.()

[ வினையெச்சந் திரிதல். ]

11. ஒருகால வினையெச்சம் மற்றொருகால வினையெச்சமாகத் திரியினும் பொருள் திரியாவாம்.

உ-ம். மழைபெய்து நெல் விளைந்தது;
யான் கொள்வான் பொன் கொடுத்தான்;
வேறு வினைகொள்ள ஏலாமையின், பெய்ய—கொள்ள எனத்திரிக்க. (பெய்தல்- மழை; விளைதல்-நெல்.)(10.)

சூ-ம். சொற்றிரி யினும்பொரு டிரியா வினைக்குறை.

[ பாற்பொதுவினை ]

12. வினைப்பொருளைத் தரும் யார் என்னும் வினைக் குறிப்பு முற்று, உயர்திணை முப்பாலுக்கும் உரிய பொதுவினையாம்.

உ-ம். அவன், அவள், அவர்—யார்.

நான் யார், நீ யார் என அஃறிணையிருபாலினும் (புதியன புகுதலாய்) வருதல் இக்கால வழக்கம். ஆர் என மருவியும் வரும்.

சூ-ம். யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால். ()

13. வினாப்பொருளைத்தரும் எவன் என்னும் வினைக்குறிப்பு முற்று-அஃறிணை யிருபாற்கும் பொது வினையாம்.

உ-ம். அஃது எவன்; அவை எவன்;

இது—என், என்ன, என்னை என மருவி வருவதும் உண்டு.

சூ-ம். எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.()

[ வினைமுற்று வேறுபடுதல். ]

14. தெரிநிலை வினைமுற்றும் குறிப்புமுற்றும் வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வரும்.

உ-ம். கண்டனன் வணங்கினான்-கண்டு வணங்கினான்: தெரிநிலை வினையெச்சம்.

படித்தான் உத்தமதானத்தான் * பஞ்சகாவியத்தை விளக்கினான்—படித்த உத்தமதானத்தான் விளக்கினான்: தெரிநிலைப்பெயரெச்சம்.

அவன் வில்லினன் வந்தான்—வில்லினனாகி வந்தான்: குறிப்பு வினையெச்சம்.

குழையினன் கொற்றன் வந்தான் —குழையினனாகிய கொற்றன் வந்தான்: குறிப்புப் பெயரெச்சம்.

N. B. இங்ஙனம்-எச்சமாய் வருகிறதை முற்றெச்சம் என்றும், எச்சமாய் நிற்கவேண்டிய சொல் முற்றாய் வந்தமையால், எச்சமுற்றென்றுங் கூறுவர். குறிப்புமுற்று, பெயரைக்கொண்டு முடியின், பெயரெச்சமும்; வினையைக்கொண்டு முடியின், வினையெச்சமுமாம்.

* பஞ்சகாவியம்—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.

சூ-ம் வினைமுற் றேவினை யெச்ச மாகலுங்
குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே. 213.

வினையியல் முற்றிற்று.

## 3. பொதுவியல்.

[ பெயரிலும் வினையிலும் ஈற்றயல் திரிதல். ]

1. செய்யுளில் பெயரிலும் வினையிலும் னகர, ளகர, ரகர, யகர ஈற்றிற்கு அயலில் நின்ற (விகுதி முதல்) ஆகாரம் ஓகாரமாகும். (ஆன், ஆள், ஆர், ஆய்.)

உ-ம். வில்லோன், தொடியோள், நல்லோர், கொடுத்தோய்—பெயர்.
படைத்தோன், நல்லோள், சென்றோர், வந்தோய்—வினை.

சூ-ம். பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே. 214.

[ உருபும் வினையும் அடுக்கி முடிதல். ]

ந. 2. வேற்றுமை உருபுகள் விரிந்தும் தொக்கும் ஒன்றும் பலவும் அடுக்கி வரினும், மூவகை வினைச்சொற்களும் ஒன்று பல அடுக்கி வரினும், அவை தம்மை முடித்தற்குரிய ஒரு சொல்லைக்கொண்டு முடியும்.

உ-ம். 1. சாத்தனையும் கொற்றனையும் வாழ்த்தினன்;
சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தந்தை;
சந்தான சம்பத்து உடையன்-உருபுகள் விரிந்தும் மறைந்தும் ஒன்று பல அடுக்கி வினையையும் பெயரையுங் கொண்டன.

2. அரசன் பகைவனை வாளால் வெட்டினன்;
அரசன் வாள் கைக்கொண்டான்—உருபுகள் விரிந்தும் மறைந்தும் பல அடுக்கி முடிந்தன.

3. ஆடினன் பாடினன் கண்ணன்;
இளையள் மெல்லியள் இலக்குமி—தெரிநிலை முற்றும் குறிப்புமுற்றும், ஒன்று பல அடுக்கி முறையே ஒவ்வொரு பெயர் கொண்டன.

4. கற்ற கேட்ட பெரியோர்;
நெடிய பெரிய மனிதன்—தெரிநிலைப் பெயரெச்சமும் குறிப்புப்பெயரெச்சமும், ஒன்று பல அடுக்கி முறையே ஒவ்வொரு பெயர்கொண்டன.

5. கற்றுக் கேட்டு அறிந்தார்;
விருப்பின்றி வெறுப்பின்றி இருந்தார்—தெரிநிலை வினையெச்சமும் குறிப்புவினையெச்சமும், ஒன்று பல அடுக்கி முறையே ஒவ்வொரு வினைகொண்டன.

சூ-ம். உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினும்
ஒருதம் மெச்ச மீறுற முடியும். 215.

[ இடைப் பிற வரல். ]

3. வேற்றுமை உருபுகளும், முற்றுக்களும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களும்-கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையே பொருந்தி வரும் பிற சொற்கள்—இடைப்பிறவரலாம்.

உதாரணம்.

1. சாத்தன் (வயிறுநிரம்ப) உண்டான்.
அறத்தை (அழகுபெறச்) செய்தான்.
வாளால் (மாய) வெட்டினான்.
தேவர்க்குச் (செல்வம்வேண்டிச்) சிறப்பெடுத்தான்.
மலையினின்று (உருண்டு) விழுந்தான்.
சாத்தனது (பருங்கை) யானை.
ஊர்க்கண் (உயர்ந்த ஒளி) மாடம்.
சாத்தா (விரைந்து ஓடி) வா—வேற்றுமை உருபு.
2. வந்தான் (அவ்வூர்க்குப்போன) சாத்தன்-வினைமுற்று.
3. வந்த (வடகாசி) மன்னன்—பெயரெச்சம்.
4. வந்து (சாத்தன் அவ்வூர்க்குப்) போயினான்-வினையெச்சம்.

சூ-ம். உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.

[ முடிக்குஞ் சொல் நிற்கும் இடம். ]

4. உருபுகளும், முற்றுக்களும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களுங் கொண்டுமுடியும் எச்ச

மாகிய பெயரும், வினையும்—அவற்றிற்கு ஈற்றினும் முதலினும் வரும்.

| உ-ம். | ஈறு. | முதல். |
| --- | --- | --- |
| | சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன். |
| | மரத்தைக்குறைத்தான் | குறைத்தான் மரத்தை. |
| | சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால். |
| | சாத்தனுக்குக்கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு. |
| | சாத்தனின் நீங்கினான் | நீங்கினான் சாத்தனின். |
| | சாத்தனது ஆடை | ... |
| | சாத்தன்கட்சென்றான் | சென்றான் சாத்தன்கண். |
| | மணியில் ஒளி | ... |
| | சாத்தா வா | வா சாத்தா. |
| | எச்சங்கள் | ஈரிடத்தும் வந்தன. |
| | வந்தான் சாத்தன் | சாத்தன் வந்தான். |
| | வந்த சாத்தன் | ... |
| | வந்து போயினான் | போயினான் வந்து. |

முற்றெச்சங்களின் எச்சங்கள் ஈரிடத்தும் வந்தன. ஆறனுருபின் எச்சமும் ஏழனுருபின் எச்சப்பெயரும் பெயரெச்சத்தின் எச்சமும் முதலில் வாராவாம்.

எனெனின்—

ஆடை சாத்தனது என மாறின், குறிப்புவினைமுற்றோ என்றும், சாத்தன் வந்த எனின், பால்வழுவாகிய வினைமுற்றோ என்றும்,மயக்கம் உண்டாகும். ஏழாம் வேற்றுமையானது வினையோடு பொருந்திவரும் பெயரைக்கொண்டு முடியுமாகையால் மாறிவராதாம்.

சூ-ம். எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும். 217.

[ ஒருமொழி வேறென்றை யமைத்தல். ]

5. பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்று, எஞ்சிநின்ற தன்றன் இனங்களைத் தெரிவிக்கும்.

உதாரணம்.

சோற்றை நனி உண்டான் என்றபொழுது, கறிமுதலியவற்றை நனி தின்றான் என்ற தன்னினம் எஞ்சி நின்றன.

சூ. ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.

[ திணைபால் இடப்பொதுமை நீங்கு நெறி. ]

M. 6. பொதுப்பெயரினுடையவும், வினையினுடையவும் பொதுத் தன்மையை, மேலே வரும் சிறப்புப்பெயரும் வினையும் நீக்கும்.

உ-ம். சாத்தன் இவன்; சாத்தன் இது—பெயர்த்திணைப்பொதுமையைச் சிறப்புப்பெயர் நீக்கிற்று.

சாத்தன் வந்தான்; சாத்தன் வந்தது—பெயர்ப்பொதுமையை வினை நீக்கிற்று.

வாழ்க அவன் —வினைப்பொதுமையைப் பெயர் நீக்கிற்று.

உண்டு வந்தான் —வினைப்பொதுமையை வினை நீக்கிற்று.

சூ. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே. 219.

[ எச்சங்களின் முடிபு. ]

M. 7. பெயரெச்சமும், வினையெச்சமும், உம்மையெச்சமும், சொல்லெச்சமும், பிரிநிலையெச்சமும், எனவெச்சமும், ஒழியிசையெச்சமும், எதிர்மறையெச்சமும், இசையெச்சமுமாகிய சொல்லெச்சம் ஒன்பதும், குறிப்பெச்சம் ஒன்றும் தத்தம் எச்சங்களைக் கொள்ளும்.

உ-ம். 1. செய்த சாத்தன்—பெயரெச்சம், பெயரைக்கொண்டது.

2. செய்து வந்தான்—வினையெச்சம், வினைமுற்றைக் கொண்டது.

3. சாத்தனும் வந்தான்—உம்மையெச்சம், முன்னே கொற்றனும் வந்தான் or வருவான் என்ற எச்சத்தைக்கொண்டது.

4. நல்லவன் என்றான் என்னுஞ் சொல்லெச்சம்—நல்லவன் என்று சொன்னான் எனச், சொல் என்னும் தன் எச்சத்தைக்கொண்டது.

5. சாத்தனே கொண்டான்—என்னும் பிரிநிலையெச்சம்—பிறர் கொண்டிலர் எனத், தன்னெச்சங்கொண்டது.

6. கடல் ஒல்லென ஒலித்தது என்னும் எனவெச்சம் — தன் எச்சமாகிய வினையைக்கொண்டது. என=மிகுதி.

7. உண்ணுதற்கோ வந்தான் என்னும் ஒழியிசையெச்சம்—கலகம் செய்யவந்தான் என்னும் தன் எச்சங்கொண்டது.

8. யானே செய்தேன் என்னும் எதிர்மறையெச்சம்-யான் செய்திலேன் என்னும் தன் எச்சங்கொண்டது.

9. இசையெச்சமாவது வாக்கியங்களில் அவ்வவ்விடத்திற்கேற்ப ஒருசொல்லும் பல சொல்லுமாக வருவித்து உரைக்கப்பட்டு வருவதாம். இசை=சொல். "கற்றதனாலாய பயன் என்" என்புழி நூலைக் கற்றதனால் என ஒருசொல்லும்; "அந்தாமரை யன்னமே நின்னை யானகன் றாற்றுவனே" என்புழி என்னுயிரினுஞ் சிறந்த நின்னையெனப் பல சொற்களும் வருவிக்கப்பட்டன.

N. B. ஒருசொல் எஞ்சிநிற்றலைச் சொல்லெச்சமென்றும், பல சொல் எஞ்சிநிற்றலை இசையெச்சம் என்றுங் கூறலுமுண்டு.

10. குறிப்பெச்சமாவது பெயரியலில் கூறப்பட்டுள்ள ஆயிரமக்கள் பொருதார் முதலியன.

சூத்திரம்.

பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை
எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்பதுங்
குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும். 220.

[ தொகைநிலைத் தொடரில் பொருள் சிறக்கும் இடம். ]

ம. 8. தொகைநிலைத்தொடர் மொழிகளில் முன் மொழியிலேனும் பின்மொழியிலேனும் அனைத்துமொ ழியிலேனும் புறமொழியிலேனும் தொகைப்பொருள் சிறந்து நிற்கும்.

உ-ம். 1. குடம் வனைந்தான்; செந்தாமரை-குடம் முதலிய முன் மொழிகள்-பானை, வெண்மை முதலிய தம் இனத்தை விலக்கி நிற்றலால், முன்மொழியில் பொருள் சிறந்தன.

2. நிலம் உழுதான்; புலி பாய்ந்தான்—உழுதான், பாய்ந்தான் என்ற மொழிகளைக்கூறிய மாத்திரத் தில்-நிலம், புலி என்ற முன்மொழிகள் தாமே வந்து இயைதலால், பின்மொழியில்பொருள் சிறந் தன.

3. கபிலபரணர்; சேரசோழபாண்டியர் என்ற உம் மைத்தொகைகளில், எல்லா மொழிகளிலும் பொ ருள் சிறந்தன.

4. பூங்குழல்; உயிர்மெய் என்ற அன்மொழித்தொகை களில், இவ்விரு மொழிகளிலும் ஆகாமல்-உடை யான், கூடிப்பிறந்த எழுத்து என்ற புறமொழிக ளில் பொருள் சிறந்தன.

சூத்திரம்.

முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள். ()

[ இடத்தொகை பெயர்த்தொகை அறிதல். ]

9. வல்லொற்று இடையே வரின், இடத்தொகையாம்; மெல்லொற்று இடையே வரின், பெயர்த்தொகையாம்.

உதாரணம்.

வடகீக்கண்ணன்-வடகோட்டிற் பிறந்த கண்ணன்; வே. தொ.
வடகங்கண்ணன்-வடுகனாகிய கண்ணன்; பண்புத்தொகை.

சூத்திரம்.

வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும். 222.

10. உயர்திணை ஒருமைப்பாலில் வரும் உம்மைத்தொகைகள், ரவ்வீறும் கள்ளீறுமாகிய பலர்பால் விகுதியைக்கொண்டு முடியும்.

உ-ம். சேர சோழ பாண்டியர்; கபிலபரணர்.

சூ-ம். உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே. 223.

[தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்.]

M. 11. வேற்றுமை யுருபு முதலிய உருபுகள், தொக்குநின்றவழி மயங்குந் தன்மையவாகிய தொடர்மொழிகள்-இரண்டுமுதல் ஏழீறாகிய பொருள்களால் மயங்கும்.

உ-ம். தெய்வ வணக்கம்-தெய்வத்தை வணங்கும் வணக்கம்; தெய்வத்திற்கு வணக்கம்—2.
தற்சேர்ந்தார்—தன்னைச்சேர்ந்தார்; தன்னொடு சேர்ந்தார்; தன்கட்சேர்ந்தார்—3.

சொல்லிலக்கணம்-சொல்லினது இலக்கணம்; சொற்கு இலக்கணம்; சொல்லின்கண் இலக்கணம்; சொல்லினது இலக்கணஞ் சொன்ன நூல்—4.

பொன்மணி—பொன்னலாகிய மணி; பொன்னாகிய மணி; பொன்னின்கண்மணி; பொன்னொடு சேர்ந்த மணி; பொன்னும் மணியும்—5.

மரவேலி-மரத்தைக்காக்கும் வேலி; மரத்திற்குவேலி; மரத்தினது வேலி; மரத்தின் புறத்து வேலி; மரத்தாலாகிய வேலி; மரமாகிய வேலி—6.

சொற்பொருள்—சொல்லால் அறியப்படும் பொருள்; சொல்லினது பொருள்; சொற்குப் பொருள்; சொல்லின்கட்பொருள்; சொல்லும்பொருளும்; சொல்லாகியபொருள்; சொல்லானது பொருள்—7.

௬-ம். தொக்குழி * மயங்குந விரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கு மென்ப. 224.

* மயங்குந=மயங்குகின்றவைகள்; நகரமெய் இடைநிலையாம்.

[ வழுக்கள். ]

12. திணை, பால், இடம், பொழுது, வினா, விடை, மரபு-இவ்வேழும் மாறி வரின் வழுவாம்.

உ-ம். 1. அவன் வந்தது … … … … திணைவழு.
2. அவன் வந்தாள் … … … … பால்வழு.
3. யான் வந்தான் … … … … இடவழு.
4. நாளை வந்தான் … … … … காலவழு.

5. கறக்கின்ற எருமை பாலோ சினையோ? வினவழு.
6. பட்டுக்கோட்டைக்கு வழி எது? என்றால் கொட்டைப்பாக்கு எட்டுப்பணம் என்பது—விடைவழு.
7. யானை மேய்ப்பானை இடையன் என்பது—மரபு வழு; பாகன் என்பது—மரபு.

சூ-ம். திணையே பாலிடம் பொழுது வினவிறை
மரபா மேழு மயங்கினும் வழுவே. 225.

[ வினவிடைகள் திணைபால்களில் வழுவாமை. ]

ம. 13. திணை ஐயத்தினை அவற்றின் பொதுச் சொல்லானும் பால் ஐயத்தினை அவற்றின் பொதுச் சொல்லானும் துணிந்த பொருண்மேல் அல்லாத தன்மையினை வைத்துக் கூறவேண்டும்.

1. வினா—திணையில் ஐயந்தோன்றியபோது, குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகிற உரு எனப் பொதுச்சொல்லால் வினவுக.
( குற்றி=கட்டை. ) தோன்றுகிறது, தோன்றுகிறவன் எனச் சிறப்புச் சொல்லாற் கூறின் திணைவழுவும் வினவழுவுமாம்.

2. (a) உயர்திணையில் பாலையந் தோன்றியபோது, ஆண்மகனோ, பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர் எனப் பொதுச்சொல்லால் வினவுக.
தோன்றுகிறவன், தோன்றுகிறவள் எனச் சிறப்புச் சொல்லாற் கூறின் பால்வழுவும் வினவழுவுமாம்.

(b) அஃறிணையில் பாலையந் தோன்றியபோது, ஒன்றோ பலவோ இவ்வயலில் புகுந்த மாடு எனப் பொதுச்சொல்லால் வினவுக.
புக்கது, புக்கன எனச் சிறப்புச் சொல்லாற் கூறின் பால்வழுவும் வினைவழுவுமாம்.

1. விடை—குற்றியோ மகனோ என்று ஐயப்பட்டு வினவியபோது, துணிந்த பொருள் குற்றியாயின் மகன் அன்று என்றும், மகனாயின் குற்றியல்லன் என்றும் துணிந்த பொருளின்மேல் அல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

2. (a) ஆண்மகனோ, பெண்மகளோ என்று ஐயப்பட்டு வினவியபோது துணிந்தபொருள் ஆண்மகனாயின் பெண்மகளல்லன் என்றும், பெண்மகளாயின் ஆண்மகனல்லள் என்றுந் துணிந்த பொருள்மேல் அல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(b) ஒன்றோ பலவோ என்று ஐயப்பட்டு வினவிய போது துணிந்த பொருள் ஒன்றாயின் பல அன்று என்றும், பலவாயின் ஒன்று அல்ல என்றும் துணிந்த பொருள்மேல் அல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

ரு. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.()

[ திணை வழுவமைதி. ]

M. 14. உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து வந்து தானும் எழுவாயாக நிற்கிற அஃறிணையாகிய பொருள் முதலிய ஆறும்-அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கப்பட்டால் அவ்வுயர்திணை முடிபைப் பெறுவனவாம்.

உ-ம். நம்பி பொன் பெரியன் ... ... ... ... ... பொருள்.
நம்பி நாடு பெரியன் ... ... ... ... ... ...இடம்.
நம்பி வாழ்நாள் பெரியன் ... ... ... ......காலம்.
நம்பி மூக்குக் கூரியன் ... ... ... ... ... சினை.
நம்பி குடிமை நல்லன் ... ... ... ... ... குணம்.
நம்பி நடை கடியன் ... ... ... ... ... ... தொழில்.

சூ-ம். உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின. 227.

[ திணை, பால், மரபு வழுவமைதி. ]

M. 15. சிறப்பினாலும், மிகுதியினாலும், இழிபினாலும்; திணையும், பாலும், வேறுவினைப் பல பொருள்களும் விரவிநின்றவழி, அவைபலவும் ஒருமுடிபினவாம்.

உ-ம். 1. திணை. "திங்களும் சான்றோரும் ஒப்பர்" — இது திணை விரவிச் சான்றோர் என்ற உயர்வு பற்றித், திங்களாகிய அஃறிணை, உயர்திணை முடிபை யேற்றது- சிறப்பு.

2. " பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தாரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்கு " என்றதில்-இருதிணையுங் கலந்து பசு என அஃறிணைப் பொருள் ஒன்றாயிருக்க, பார்ப்பார் முதலிய உயர்திணைப்பொருள் பலவாதலால், மிகுதிபற்றி இவர்கள் என்னும் உயர்திணை முடிபைப் பெற்றமை-மிகுதி.

3. " மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா "-என்றதில் இருதிணையுங் கலந்து இழிவினால் விடா என அஃறிணை முடிபைப்பெற்றமை-இழிவு.

பால். " தானுந் தையலும்-ஆண்டிலனேல் "—என்றதில் ஆண்பாலும் பெண்பாலுங்கலந்து பெண்ணினும் ஆண் சிறந்தமையால் ஆண்பால் முடிபைப்பெற்றமை-சிறப்பு. தையல்=உமாதேவி-பார்வதி.

கலப்பில்லாமல் வருங்காலத்து ஒருமை முடிபைப்பெறும்.

உ-ம். தோழனும் தானும் வந்தான்; தோழியும் தானும் வந்தாள் எனவரும்.

மரபு. கறியுஞ்சோறு முண்டான்; மாலையும் முடியுங்கவித்தான் என்புழி, வேறுவினைப்பலபொருள்கள் கலந்து சிறப்பினால் உண்டான் " கவித்தான் " என ஒரு பொருட்குரிய வினைமுடிபைப் பெற்றன. உண்டல் என்னும் வினைக்கு உரிய சோறு-தின்றல் என்னும் வினைக்கு உரிய கறியினும் தலைமையுடைமையும், கவித்தல் என்னும் வினைக்குரிய முடி-சூடுதல் என்னும் வினைக்கு உரிய மாலையினும் தலைமையுடைமையும்-சிறப்பு.

சூ-ம். திணைபால் பொருள்பல விரவின சிறப்பினு
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே. 228.

[ திணை, பால் வழுவமைதி. ]

M. 16. உவப்பு, உயர்வு, சிறப்பு, செறல், இழிப்பு என்ற இவ்வைந்தினும் பாலுந் திணையும் வழுவி வருதலும் உண்டு.

உ-ம். பால். 1. தன் புதல்வனை- 'என் அம்மை வந்தாள்' என்பது, உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

2. ஒருவனை- 'அவர் வந்தார்,' என்பது, உயர்வினால் ஒருமைப்பால்பன்மைப்பாலாயிற்று.

3. "தாதாய் மூவே மூலகுக்குந் தாயே" என்பது, சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

4. "எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்" என்பது கோபத்தினால் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

5. பெண்வழிச் செல்வானை- 'இவன் பெண்' என்பது இழிவினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை. 1. ஒரு பசுவை- 'என் அம்மை வந்தாள்' என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

2. " பசுங்கிளியார் சென்றார்க்கு " என்பது உயர்வினால் அஃறிணை யுயர்திணையாயிற்று.

3. " தம்பொரு ளென்ப தம்மக்கள் " என்பது, சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

4. " எவவுஞ் செய்கலான் தான்தேரா னவ்வுயிர், போஒ மளவுமோர் நோய் " என்பது, கோபத்தினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

5. 'நாம் அரியுடைமை'—என்பது, இழிவினால் உயர்திணை அஃறிணையாயிற்று.
மகனை 'அப்பன்' என்பதும், மகளை 'அம்மை' என்பதும், மரபுவழு.

சூத்திரம்.

உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்.
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே. 229.

[ பால் இட வழு. ]

M. 17. ஒருமைப்பாலில் பன்மைப்பாற் சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும் ஓரிடத்தில் பிறவிடச்சொல்லையும் கூறுதலும் உண்டு.

உ-ம். பால். 1. 'வெயிலெல்லாம் மறைத்தது மேகம்'—என்பதில், வெயில் என்னும் ஒருமைப்பாலில் எல்லாம் என்னும் பன்மைப்பாற்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

2. 'இரண்டுகண்ணுஞ் சிவந்தது' என்பதில், இரண்டு என்னும் பன்மைப்பாலில் சிவந்தது என்னும் ஒருமைப்பாற்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

இடம். 1. 'சாத்தன் தாய் இவை செய்வேனே' என்பதில் யான் எனச் சொல்லவேண்டுந் தன்மையில் தாய் எனப்படர்க்கைச்சொல்சேர்த்துச் சொல்லப்பட்டது.

2. "எம்பியை யீங்குப்பெற்றேன்" என்பதில் தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனையே நோக்கிக்கூறுதலால், நின்னை யெனச் சொல்லவேண்டும் முன்னிலையில், எம்பியை எனப் படர்க்கைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

நீயோ அவனோ யார் இது செய்தார் எனக் கலந்து ஓரிடத்தில் பிறவிடம் வருதலும் உண்டு.

சூத்திரம்.

ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே. 230.

[கால வழு.]

18. முக்காலத்திலும் ஒரேதன்மையாய் உள்ளபொருள்களின் தொழிலை நிகழ்காலத்தாற் கூறவேண்டும்.

உ-ம். தெய்வம் இருக்கிறது; மலைநிற்கிறது; பறவை பறக்கிறது.

சூ-ம். முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே. 231.

19. விரைவு, மிகுதி, தெளிவு என்னும் மூன்று காரணத்தினாலும், இக்காரணம் இன்றியும், முக்காலங்களும், ஒன்றை யொன்றாகக் கூறப்படும்.

உ-ம். 1. சோறு வேவாதிருக்க அதனையுண்டு போதற்கு இருப்பானை விரைவில் உடன்கொண்டு போகவேண்டிய மற்றொருவன் பார்த்து இன்னும் உண்டிலையோ என்றால் உண்டேன் உண்டேன் என்பான், உண்கின்றானை அவ்வாறு வினவினாலும் உண்டேன் உண்டேன் என்பான்-இங்கே விரைவுபற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின.

2. களவுசெய்ய நினையின் கையறுப்புண்டான், கையறுப்புண்கிறான்—மிகுதிபற்றி எதிர்காலம், இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது.

3. எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழை பெய்தது, பெய்கின்றது — இங்கே தெளிவினால் எதிர்காலம், இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது.

4. யாம் பண்டு விளையாடுவது இச்சோலை, விளையாடுகின்றது இச்சோலை-இங்கே இயல்பினால் இறந்தகாலம், எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று.

சூ. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்
பிறழவும் பெறூஉம்முக் காலமு மேற்புழி. 232.

[ அறுவகை வினா. ]

20. அறிவு, அறியாமை, ஐயுறல், கொளல், கொடை, ஏவல் என வினா ஆறும்.

உ-ம். 1. ஆசிரியன் இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது? என்பது—அறிவினா.

2. மாணாக்கன் அவ்வாறு ஆசிரியனைக் கேட்பது—அறியாவினா.

3. குற்றியோ மகனோ? என்பது—ஐயவினா.

4. பயறுளதோ? வணிகீர் என்பது-கொள்ளுதல் வினா.

5. சாத்தனுக்கு ஆடையில்லையா? என்பது—கொடை வினா.

6. சாத்தா உண்டாயா? என்பது—ஏவல்வினா.

சூ-ம். அறிவறி யாமை யையுறல் கொளல்கொடை
ஏவறரும் வினா வாறு மிழுக்கார். 233.

[ விடை எட்டுவகை. ]

21. சுட்டு, எதிர்மறுத்தல், உடன்படல், ஏவல், வினாதல், உற்றதுரைத்தல், உறுவதுகூறல், இனத்தைச் சொல்லுதல் என விடை யெட்டாம்.

உ-ம். 1. தில்லைக்கு வழி யாது? எனின் — இது என்பது சுட்டு.

2. சாத்தா இது செய்வாயா? என்றபோது செய்யேன் என்பது மறை.

3. செய்வேன் என்பது—உடன்படல்.

4. நீ செய் என்பது—ஏவல்.

5. செய்வேனே என்பது—வினா.
6. உடம்பு நொந்தது என்றது—உற்றதுரைத்தல்.
7. உடம்பு நோம் என்றது—உறுவதுரைத்தல்.
8. மற்றையது செய்வேன் என்பது—இனமொழி.

முதல் மூன்றும் வெளிப்படைவிடை; பின்னைந்தும் குறிப்புவிடை.

சூ-ம். சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மை நேர்ப.

[ மரபு. ]

22. எப்பொருளை எச்சொல்லால் அறிவுடையோர் சொன்னார்களோ அப்பொருளை அச்சொல்லால் சொல்லுதல மரபாம்.

உ-ம். குதிரைக்குட்டி; யானைக்குட்டி; வாழைக்கன்று; மரபு.
குதிரைக்கன்று; யானைக்கன்று; வாழைக்குட்டி; வழு.

சூ-ம். எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே. 235.

[ சிறப்புவினை மரபு வழாநிலை. ]

M. 23. குறித்தபொருளை விளக்கும் வினையும் சார்பும் இனமும் இடமும் பொருந்தி விளங்காத பல பொருள் ஒருசொல்லைச்-சிறப்புச் சொல்லோடு கூட்டிச் சொல்லல் வேண்டும்.

1. மா என்பது-மாமரத்திற்கும் வண்டிற்கும் குதிரைக்கும் திருமகளுக்கும் பொதுவாகிய பல பொருள் குறித்த ஒரு சொல். இப்பொருள்களுள் 'மாப்பூத்தது' என்ற விடத்து, மரம் என்பது வினையால் விளங்கிற்று.

'மாவீழ்மலர்' என்ற விடத்து, வண்டு என்பது சார்பால் விளங்கிற்று.

தேர்கரிமாக் காலாள் என்றவிடத்து குதிரை என்பது இனத்தால் விளங்கிற்று.

'மாவாழ் மார்பன்' என்றவிடத்து, திரு என்பது இடத்தால் விளங்கிற்று.

2. இனி மா-எறிஞன், மா யாது என்றவிடத்து, குறித்தபொருள் விளங்காமையால், விளங்குதற் பொருட்டுப் பாய் மா எறிஞன், மாமரம் எறிஞன்; பாய்மா யாது, மாமரம் யாது எனச் சிறப்புச்சொல்லோடு கூட்டிக்கூறுக.

சூத்திரம்.

வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர் சிறப்பெடுத்தே.

[ தொடர்மொழிகள் இசை வேறுபாட்டால் பொருள் துணியப்படுதல். ]

24. எழுத்தினியல்பு வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்கும் தொடர்மொழிகள், அங்ஙனங் கூறுஞ் சொற்களின் இறுதியும் முதலுந் தோன்ற, இசையறுத்துக்கூறும் வேறுபாட்டால் பொருள் துணியப்படும்.

உ-ம். 1. செம்பொன்பதின்பலம்—செம்பு ஒன்பது பலம்;
செம்பொன் பத்துப்பலம்.

2. குறும்பரம்பு—குறும் பரம்பு; குறும்பர் அம்பு;

3. புத்தியில் லாதவன்—புத்தியில் ஆதவன்;
புத்தி-இல்லாதவன்.

4. கல்விக்கிரஹம்- கல்வி கிரஹம்; கல் விக்கிரஹம்.

5. பனிக்காலம்நல்லது—பனிக்கு ஆலம் நல்லது;
(துணைபிரிந்தவர் கூற்று.)
பனிக்காலம் நல்லது; (கூடினவர் கூற்று.)

6. குன்றேறுமா—குன்று ஏறு ஆமா; குன்றேறு மா.

பரம்பு=கழனிதிருத்தும் பலகை; குறும்பர்=சிற்றரசர்.
ஆதவன்=சூரியன். ஆலம்=விஷம்.

சூ-ம். எழுத்திய லிரியாப் பொருடிரி புணர்மொழி
இசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப. 237.

[அடுக்குத்தொடர்.]

M. 25. அசைநிலைக்கும், விரைவு வெகுளி உவகை அச்சம் அவலம் முதலிய பொருணிலைக்கும், இசை நிறைக்கும், ஒரு சொல் இரண்டு மூன்று நான்களவு முறையே வரும்.

உதாரணம்.

| | | |
|---|---|---|
| அன்றேயன்றே | அசைநிலை. | |
| உண்டேன் உண்டேன்; போ போ போ | விரைவு. | பொருணிலை. |
| எய் எய்; எறி எறி எறி | வெகுளி. | |
| வருக வருக; வாழ்க வாழ்க வாழ்க | உவகை. | |
| பாம்பு பாம்பு; தீத் தீத் தீ | அச்சம். | |
| உய்யேன் உய்யேன்; வாழேன் வாழேன் வாழேன். | அவலம் | |

ஏ யே... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
நல்குமே நல்குமே நல்குமே... ... ... ... ... ... } இசைநிறை.
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ ... ...

அசைநிலைக்கு இரண்டும், பொருணிலைக்கு இரண்டும் மூன்றும், இசைநிறைக்கு இரண்டுமுதல் நான்கும் வரும்.

சூத்திரம்.

அசைநிலை பொருணிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும். 238.

[ இரட்டைச் சொற்கள். ]

26. இரட்டைச்சொற்கள் பிரிந்து ஒலியாவாம்.

உ-ம். சலசல; கலகல; பளபள; களகள.

N. B. அடுக்கைப் பிரித்தால் பொருள் கொடுக்கும்; இரட்டைச்சொல்லைப் பிரித்தால் பொருள் தராவாம்.

சூ-ம் இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா. ()

[ ஒருபொருள் குறித்துவரும் பல சொற்கள் ]

27. ஒருபொருளைக் குறித்துவரும் பல சொற்கள் அவ்வாறு வருதற்கு ஓர் காரணம் இன்றேனும் சிறந்து நிற்றலின் அவை வழுவலவாம்.

உ-ம். நாகிளங் கமுகு; உயர்ந்தோங்கு பெருவரை; புனிற்றிளங் கன்று.

சூ-ம் ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா. ()

[ முற்றும்மை வேண்டும் இடம். ]

28. இத்துணைத்து என்று வரையறை யுணரப் படும் பொருளையும், எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளையும் வினைப்படுத்துரைப்பின் முற்றும்மை வேண்டும்.

உ-ம். தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்.
ஒளிமுன் இருளெந்த மில்லை.

சூ. இனைத்தென் றறிபொரு ளுலகி னிலாப்பொருள்
வினைப்படுத் துரைப்பி னும்மை வேண்டும். 241.

[ செயப்படுபொருளைக் கருத்தாவாகக் கூறல். ]

M. 29. வழக்கில் செயப்படுபொருள் முதலியவற்றைக் கருத்தாவைப்போல வைத்துக் கூறுதலும் உண்டு.

உ-ம். இம்மாடு யான் கொண்டது
இச்சோறு யான் கொடுத்தது } செய்பொருள்.

இவ்வெழுத்தாணி யான் எழுதியது.........கருவி.
இவ்வீடு அவன் இருந்தது ... ... ... ... ... நிலம்.
இத்தொழில் நீ செய்தது ... ... ... ...... செயல்.
இந்நாள் அவர் பிறந்தது ... ... ... ... ... காலம்.

சூ. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினு ளுரித்தே.

[ மாபுவழுவாமற் காத்தலும், மாபுவழுவமைதியும். ]

M. 30. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறும் இனமுள்ளவைகளுக்குத் தகுதி

பற்றியும், இனமில்லாதவைகளுக்குச் சிறப்புப் பற்றியும் அடைமொழிகளாய் வரும்.

உ-ம். இனமுள்ளன. இனமில்லன.
நெய்க்குடம். ............ உப்பளம்—பொருள்.
நீளநெல். ... ... ... ... ஊர்மன்று—இடம்.
கார்த்திகை விளக்கு. ... நாளரும்பு—காலம்.
பூமரம்.... ... ... ... ... இலைமரம்—சினை
செந்தாமரை. ... ... ... செம்போத்து—குணம்.
ஆடுபாம்பு. ... ... ...... தோய்தயிர்—தொழில்.

N. B. இனமுள்ளனவற்றை அடைகொடாது கூறின், குறித்த பொருள் விளங்காவாம்; இனம் இல்லனவற்றைச் சிறப்புப்பற்றி அடைகொடுத்துக் கூறினும் வழுவாம்.

சூ. பொருண்முத லாறு மடைசேர் மொழியினம்
உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும். 243.

[ விடை மரபு வழுவாமற் காத்தல். ]

M. 31. வினவுதலும் செப்புதலுமாகிய சொற்கள் சுருங்குதற்பொருட்டு ஒருவன் வினவியது தம்மிடம் இல்லையாயின், அதனை யில்லையெனலுறின், அவன் வினவியதற்கு இனமாய்த் தம்மிடம் உள்ளதனைக்கூறி, அக்கூற்றாலே யதனை யில்லையென்றும், உள்ளதாயின் இத்துணையுண்டு என்றுங் கூறுவர்.

உ-ம். பயறுண்டோ வணிகீர்? என்றவருக்கு அஃதூ இல்லையென்பார் 'உழுந்துண்டு, உழுந்தும் துவரையுமுண்டு' எனச்சொல்லுவர்; உண்டென்பார், 'இருகலமுண்டு,' 'இருதூணியுண்டு' என்பர்.

சூ-ம். தம்பா லில்ல தில்லெனி னினனுய்
உள்ளது கூறி மாற்றியு முள்ளது
சுட்டியு முரைப்பர் சொற்சுருங் குதற்கே. ()

[ ஈ, தா, கொடு என்பன. ]

M. 32. ஈ என்பது இழிந்தோன் உயர்ந்தோனிடம் இரக்குஞ் சொல்லாம்; தா என்பது ஒப்போனிடம் இரக்குஞ் சொல்லாம்; கொடு என்பது உயர்ந்தோன் இழிந்தோனிடம் இரக்குஞ் சொல்லாம்.

உ-ம். அரசனே ஈ; தோழா தா; மைந்தா கொடு: முறையே காண்க.

சூ-ம். ஈதா கொடுவெனு மூன்று முறையே
இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை.

[அஃறிணையை உயர்திணையைப்போல வைத்துக்கூறல்.]

M. 33. கேளாதனவற்றைக் கேட்கின்றன போலவும், சொல்லாதனவற்றைச் சொல்கின்றன போலவும், நடவாதனவற்றை நடக்கின்றன போலவும், இத்தொழில்கள் அல்லன பிற செய்யாதனவற்றைச் செய்கின்றன போலவும் அஃறிணையிடத்துஞ் சொல்லப்படும்.

உ-ம். 1. "நன்னீரை வாழி அனிச்சமே"—கேட்கின்றது போலச் சொல்லப்பட்டது.

2. "பகைமையைக் கண்ணுரைக்தும்"—பேசுகின்றது போலச் சொல்லப்பட்டது.

3. "இவ்வழி அவ்வூருக்குப் போகும்"—நடக்கின்றது போலச் சொல்லப்பட்டது.

4. "தன்னெஞ்சே தன்னைச் சுடும்" —செய்கின்றது போலச் சொல்லப்பட்டது.

சூ-ம். கேட்குந போலவுங் கிளக்குந போலவும்
இயங்குந போலவு மியற்றுந போலவும்
அஃறிணை மருங்கினு மறையப் படுமே. 246.

[உருவகத்திலும் உவமையிலும் திணைமாறி வருதல்.]

M. 34. உருவக அணியிலும் உவமை அணியிலும், உயர்திணை அஃறிணைகளும், சினையும் முதலும், ஒழிந்தவையும் மாறிவரும்.

உதாரணம்.

உருவகம். 1. அரசனாகிய சிங்கத்திற்கு பகைவராகிய யானைகள், அஞ்சி ஓடின-உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று.

கல்வி மங்கையை நல்லோர் விரும்புவர்—அஃறிணை, உயர்திணையோடு மயங்கிற்று.

2. அவனுக்குத் தம்பியர் இருவரும் இரண்டு தோள்கள்—உயர்திணைமுதல், உயர்திணைச் சினையோடு மயங்கிற்று.

முகமாகிய மதி—உயர்திணைச்சினை, அஃறிணை முதலோடு மயங்கிற்று.

உவமை. 1. மயில்போலும் மங்கை—உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று.

நெற்பயிர்கள், கற்றோர்போல வணங்கிக் கதிரையீன்றன-அஃறிணை, உயர்திணையோடு மயங்கிற்று.

2. கயல்போலுங் கண்—உயர்திணைச்சினை, அஃறிணை முதலோடு மயங்கிற்று.

தளிர்போலும் மேனி—உயர்திணைமுதல், அஃறிணைச் சினையோடு மயங்கிற்று.

பிறமயங்கி வருதல். இவன் சரசுவதி—பால் மயங்கல்.

இவன் வேந்து—திணைமயங்கல்.

உருவகம்—ரூபகம்—**Metaphor.**
உவமை —உபமா—**Simile.**

சூ-ம். உருவக உவமையிற் றிணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே. ()

[ பொருள்கோளின் பெயரும் தொகையும். ]

M. 35. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
டாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றனெப் பொருள்கோ ளெட்டே.

[ யாற்றுநீர்ப் பொருள்கோள். ]

M. 36. மொழிமாற்று முதலியபோல் பிறழ்ந்து செலவேண்டாது, திரும்பாமலே ஒரேமுகமாக ஓடுகின்ற யாற்றுநீரின் ஓட்டம் போலச் சொற்கள் மாறுமல், அடிதோறும் வான்பொருள் அமைந்து ஒழுகுவது யாற்றுநீர்ப் பொருள்கோளாம்.

உ-ம். " சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே."

இப்பாட்டினுள், சொல் என்னும் எழுவாயினை முதலெ டுத்து அதன் தொழிலாகிய இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்கள் ஒன்றை யொன்று கொள்ளும்படி இடையிலே முறையாகவைத்துக், காய்த்த என்னும் பயனிலை யை இறுதியிலே நிறுத்தி முடித்திருத்தலைக்காண்க.

சொல்=நெற்பயிர்.

சூ-ம். மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே. 249.

[ மொழிமாற்று. ]

ம. 37. ஏற்ற இரண்டு பயனிலைகளுக்குப் பொருந் தும்படியான சொற்களைத் தனித்தனிகூட்டி ஓரடிக் குள்ளேசொல்வது மொழிமாற்றுப்பொருள்கோளாம்.

உ-ம். " சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

இப்பாட்டினுள் முதலடியில் ஆழ என்னும் பயனிலைக்கு இயைந்த அம்மி என்னும் மொழியை மிதப்ப என்னும் பயனி லைக்கும், மிதப்ப என்னும் பயனிலைக்கு இயைந்த சுரையென் னும் மொழியை ஆழ என்னும் பயனிலைக்கும் மாற்றிவைத்த

வாறும், இரண்டாம் அடியில் நீந்து என்னும் பயனிலைக்கு இயைந்த மயல் என்னும் மொழியை நிலையென்னும் பயனிலைக்கும், நிலையென்னும் பயனிலைக்கு இயைந்த யானையென்னும் மொழியை நீந்து என்னும் பயனிலைக்குமாக மாற்றியிருத்தலைக் காண்க.

சூ-ம். ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கன்மொழி மாற்றே.

[ நிரல் நிறைப் பொருள் கோள். ]

M. 38. பெயரும் வினையுமாகிய சொற்களையும், அவைகொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறுவேறாக வரிசைப்பட நிறுத்தி, முறையாயேனும் எதிராயேனும் இதற்கு இது பயனிலையென்பதுபடக் கூறும் பொருள்கோள் நெறிப்பட்ட நிரல் நிறைப்பொருள் கோளாம்.

உ-ம். 1. "கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்."

இது-கொடி=நுசுப்பு,குவளை=உண்கண், கொட்டை=மேனி எனவும்; மதி=முகம், பவளம்=வாய், முத்தம்=முறுவல் எனவும்; பிடி=நடை, பிணை=நோக்கு, மஞ்ஞை=சாயல் எனவும் பெயர்களும் பெயர்ப்பயனிலைகளுமாய் நின்ற நிரல் நிறை.

முறுவல்=பல்; சாயல்=மென்மை.

2. "காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியால்
மண்ணமிர்த மங்கையர்தோண் மாற்றாரை யேற்றார்க்கு
நண்ணிய வாய பொருள்."

இதில், கா, து, சேர், தாழ், குழை, ஆய் என்னும் ஆறும் விகுதி குறைந்த ஏவல் வினைச்சொற்களாதலால், கா மண், து அமிர்தம், சேர் மங்கையர்தோள், தாழ் மாற்றாரை, குழை ஏற்றார்க்கு, ஆய் நண்ணிய வாயபொருள் என வினைப்பயனிலைகளும் பெயர்களுமாய் நின்ற முறை நிரல் நிறை.

3. "களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றும்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே.

இது—களிறுபோலக் கலனும், கந்துபோலக் கூம்பும் என மாறவேண்டுதலால், பெயர்களும் பெயர்ப்பயனிலைகளுமாய் நின்ற எதிர் நிரனிறை.

கந்து=யானைகட்டுந்தறி; கூம்பு=பாய்மரம்; கலன்=மரக்கலம்.

4. "ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு."

இது—வெஃகா கிடந்தான், பாடகம் இருந்தான், ஊரகம் நின்றான் எனப்பெயர்களும் வினைப்பயனிலைகளுமாய் நின்ற எதிர் நிரல் நிறை.

சூத்திரம்.

பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறீஇ முறையினு மெதிரினும்
நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே. 251.

பூட்டு விற் பொருள் கோள் ]

M. 39. இருகோடிகளிலும் நாணிபூட்டப்படுதலை யுடையவிற்போலச் செய்யுளின் முதன்மொழியும் இறுதிமொழியும் பொருளிற பொருந்துவது பூட்டு விற்பொருள்கோளாம்.

உ-ம். "திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பன் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு." இதில், திறந்திடுமின்
கதவு என நோக்கி நின்றது.

சூ-ம். எழுவா யிறுதி நிலைமொழி தம்முட்
பொருணோக் குடையது பூட்டுவில் லாகும்.()

[ தாப்பிசைப் பொருள் கோள். ]

M. 40. ஒரு சொல் செய்யுளில் ஊஞ்சல்போல நடுவில் நின்று, ஒழிந்த முதலிலும் இறுதியிலுஞ் சென்று பொருளைக்கூட்டுவது தாப்பிசைப் பொருள் கோளாம்.

உ-ம். "உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு"

இதில்—ஊன் என்ற நடுநின்ற சொல்—ஊனுண்ணாமை என

முன்னும், ஊனுண்ணா என்பின்னுஞ் சென்று கூடுதல் காண்க. தாம்பு=ஊசல்.

சூ-ம். இடைநிலை மொழியே யேனையி ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுத ருப்பிசை. 253.

[ அளைமறிபாப்புப் பொருள்கோள். ]

M. 41. செய்யுளில் ஈற்றில் நின்ற சொல், புற்றிலே தலைவைத்து மடங்கும் பாம்புபோல முன்பினாகி முதலிலும் இடையிலும் அநுவயிக்கப்படுதலால் அளைமறிபாப்புப் பொருள்கோளாம்.

உதாரணம்.

"தாழ்ந்த வுணர்வின ராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்துநாற்கதியிற்சுழல்வார்தாமும்
மூழ்ந்தபிணிநலியமுன்செய்தவினையென்றே முனிவார்தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னிமுயலாதாரே."

இதில், வாழ்ந்த பொழுதினே வானெய்தும் நெறிமுன்னி முயலாதார்,
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார்,
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார்,
தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார்
எனத் தலைகீழாய் இடையிலும் முதலிலுஞ் சென்று கூடுதல் காண்க. அளை=புற்று. மறிதல்=மடங்குதல்.

சூ-ம். செய்யு ளிறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோ ளளைமறி பாப்பே. 254.

[ கொண்டு கூட்டுப் பொருள்கோள். ]

M. 42. செய்யுளின் அடிகள் பலவற்றிலும் சிதர்ந்து கிடந்த சொற்களை வரிசைப்பட அநுவயித்துப் பொருள்கொள்ளுவது கொண்டுகூட்டுப் பொருள்கோளாம்.

உ-ம். "தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்."

இதில், வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சனத் தன்ன பைங்கூந்தலை யுடையாளது மாமேனிமேல் தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட கோழி வெண்முட்டை யுடைத்தன்ன பசலை தணிவாம் எனக்கூட்டுக.

மொழிமாற்று—ஓரடிக்குள் மாற்றுவது;
கொண்டுகூட்டு—பல அடிகளிலிருந்தும் மாற்றுவது.

சூ-ம். யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி யிசைப்பது கொண்டு கூட்டே. 255.

[ அடிமறி மாற்றுப் பொருள்கோள். ]

M. 43. பொருளுக்கு ஏற்குமிடத்து நீங்காது கூட்டும் அடியினை யுடையவும், யாதானும் ஓரடியை யெடுத்து அச்செய்யுட்கண் முதல், இடை, ஈறுகளில் யாதானும் ஓரிடத்துக் கூட்டினும், பொருளோடு ஓசை மாட்சியும், ஓசையொழியப் பொருண்மாட்சியும் வேறுபடாத அடியினையுடையவுமாகிய பொருள்கோள் அடிமறி மாற்றுப் பொருள்கோளாம்.

உ-ம். 1. "நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் துய்ப்பினு மீண்டுங்கா லீண்டும்
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்."

இதில், கொடுத்துத் தான்துய்ப்பினும் ஈண்டுங்கா லீண்டும், விடுக்கும்வினை யுலந்தக்கால் மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம், நடுக்குற்றுத் தறசேர்ந்தார் துன்பந் துடையார் என அடிகளைப் பொருளுக்கேற்ற விடத்து எடுத்துக் கூட்டல் காண்க.

2. "மாறாக் காதலவர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்தோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யான்வாழு மாறே."

இதில், எந்த அடியை எங்கே கூட்டினாலும் பொருளும் ஓசையும் வேறுபடாமை காண்க.

3. "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்."

இதில், ஈற்றடி ஒழிந்த மூன்றடிகளுள் எந்த அடியை எங்கே கூட்டினாலும் பொருளும் ஓசையும் வேறுபடாமையும், ஈற்றடியை எடுத்து யாதாயினும் ஓரிடத்துக் கூட்டினால் ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடாமையுங் காண்க.

சூ-ம். எற்புழி எடுத்துடன் கூட்டுறு மடியவும்
யாப்பி டிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியு மாறு வடியவு மடிமறி. 256.

பொதுவியன் முற்றிற்று.

---

## 4. இடையியல்.

---

[ இடைச்சொல்லின் இலக்கணம். ]

1. தனித்து வழங்குதலின்றிப் பெயர் வினைகளை அடுத்துப், பின்னும் முன்னும் ஒன்றும் பலவுமாய் வரும் வேற்றுமையுருபு, வினையுருபு, சாரியை, ஒப்புருபு முதலியன இடைச்சொற்களாம்.

உ-ம். குழையன், அது மற்றம்ம—பெயரின்பின் ஒன்றும் பலவும் வந்தன.

ஓ சாத்தன் இனி மற்றேன்று—முன் ஒன்றும் பலவும் வந்தன.

உண்ணும், நடந்தனனே—வினையின் பின் ஒன்றும் பலவும் வந்தன.

அம்மாபெரிது, சீசீபோ-முன் ஒன்றும்பலவும்வந்தன.

N. B. இச்சொல் முன்னும், பின்னும் வருமாயினும், பெரும்பான்மையாய் இடையேவருதலால், இடைச்சொல்லெனப்பட்டது.

சூ-ம். வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்தியலின்றிப்
பெயரினு வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும்பலவும்வந்தொன் றுவதிடைச்சொல்.

[ இடைச்சொல்லின் பொருள்கள். ]

2. தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், வினா, விழைவு, ஒழியிசை, பிரிப்பு, கழிவு, ஆக்கமாகிய இப்பதினொன்றும் இவை போல்வனபிறவும் இடைச்சொற்களுடைய பொருள்களாம்.

சூ-ம். தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்
பெதிர்மறை யெச்சம்வினாவிழைவொழியிசை
பிரிப்புக் கழிவாக்கமின்னனவிடைப்பொருள்.

[ ஏகார இடைச்சொல். ]

3. ஏகார இடைச்சொல்லானது பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்ற ஆறு பொருளையுந்தரும்.

உ-ம். 1. அவருள் இவனே கள்வன்—இங்கே ஒரு கூட்டத்தினின்றும் ஒருவனைப்பிரித்து நிற்றலால்-பிரிநிலை.

2. நீயே கொண்டாய்—இங்கே நீயா கொண்டாய் என்னும் பொருளைத் தருமிடத்து வினா.

3. நிலமே, நீரே, தீயே, காற்றே—இங்கே நிலமும், நீரும், தீயும், காற்றும் எனப்பொருள்பட எண்ணி நிற்றலால்—எண்.

4. "என்றுமேத்தித் தொழுவோ மியாமே"—இதில் வேறு பொருள் இல்லாமல்இறுதியில் அசைத்து நிற்றலால்—ஈற்றசை.

5. உண்டே மறுமை-இங்கே, உண்டு என்பதற்கு ஐயம் இல்லை என்னுந் தெளிவுப்பொருளைத் தருதலால்—தேற்றம்.

6. "ஏயே இவளொருத்தி பேடி."—இங்கே, வேறு பொருளின்றிச் செய்யுளில் இசை நிறைத்து நிற்றலால்—இசைநிறை.

சிலவிடத்து ஏகாரம் எதிர்மறைப் பொருளையும், இகழ்ச்சிப் பொருளையுந் தரும்.

நானே கொண்டேன்—நான் கொண்டிலேன், எதிர்மறை. ஏயே பேறை—இகழ்ச்சி.

சூ-ம். பிரிநிலை வினாவெண் ணீற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே. 259.

[ ஓகார இடைச்சொல். ]

4. ஓகார இடைச்சொல்லானது ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு என்ற எட்டுவகைப் பொருளையுந்தரும்.

உ-ம். 1. படிக்கவோ வந்தாய்—இங்கே படித்தற்கு அன்று விளையாட வந்தாய் என ஒழிந்த சொற்களைத் தருதலால்—ஒழியிசை.

2. சூற்றியோ மகனோ—இங்கே, சூற்றியா ? மகனா ? என வினாப்பொருளைத் தருதலால்—வினா.

3. ஓ ஓ பெரியன்—இங்கே, ஒருவனது பெருமையாகிய உயர்வின் மிகுதியை விளக்குதலால் உயர்வு சிறப்பு.
ஓ ஓ கொடியன்—இங்கே, ஒருவனது கொடுமையாகிய இழிவின் மிகுதியை விளக்குதலால் இழிவு சிறப்பு.

4. அவனே கொண்டான்—இங்கே, கொண்டிலன் என்னும் பொருளைத் தருமிடத்து—எதிர்மறை.

5. ஆணோ அதுவுமன்று, பெண்ணோ அதுவுமன்று—இங்கே, அத்தன்மையில்லாமையைத் தெரிவித்து நிற்றலாற், றெரிநிலை.

6. உறுதி யுணராது கெட்டாரை ஓ ஓ தமக்கோருறுதி யுணரார்—என்னுமிடத்துக், கழிவிரக்கப் பொருளைத் கருதலால்—கழிவு.

கழிவிரக்கம்=கெட்டதற்கு இரங்கல்.

7. காணியவம்மினோ—இங்கே, வேறு பொருளின்றி நிற்றலால், அசைநிலை.

8. இவனோ கொண்டான்—இங்கே பலருள் நின்றும் ஒருவனைப்பிரித்து நிற்குமிடத்துப்—பிரிநிலை.

சிலவிடத்து ஐயப்பொருளிலும் வரும்.

உ-ம். ஐந்தோ எட்டோ—ஐயம்.

சூ-ம். ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே. (௬)

[ என என்று என்னும் இடைச்சொல். ]

5. என, என்று-என்ற இரண்டு இடைச்சொற்களும் வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு என்ற ஆறு பொருளிலும் வரும்.

உ-ம். 1. மைந்தன் பிறந்தானெனத் தந்தை யுவந்தான்—இங்கே வினையோடியைந்தது.

2. "அழுக்காறெண ஒருபாவி"—இங்கே பெயரோடியைந்தது.

3. "பொள்ளென வாங்கே புறம் வேரார்"-இங்கே, குறிப்போடியைந்தது—விரைவுக்குறிப்பு.

4. ஒல்லென ஒலித்தது—இங்கே, இசையோடியைந்தது. இசை=ஒலி.

5. நிலமென, நீரென, நெருப்பென,—இங்கே, எண்ணோடியைந்தது.

6. வெள்ளென விளர்த்தது — இங்கே, பண்போடியைந்தது.

உவமையிலும் வரும்.

உ-ம். புலிபாய்ந்தெனப் பாய்ந்தான்—உவமை.

சூ-ம். வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினும் எனவெனு மொழிவரு மென்று மற்றே. 261.

[ உம் என்னும் இடைச்சொல். ]

6. உம் என்ற இடைச்சொல்லானது எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம், என்ற எட்டுப்பொருளையுந் தரும்.

உ-ம். 1. "மறப்பினும் ஒத்துக்கொளலாகும்" — இங்கே, மறக்கலாகாது என்னும் பொருளைத் தாலால்—எதிர்மறை.

2. "குறவரும் மருளும் குன்றம்"--இங்கே, குன்றின் உயர்வைச் சிறப்பித்தலால் உயர்வு சிறப்பு.
"புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை"—இங்கே, உடம்பின் இழிவைச் சிறப்பித்தலால்—இழிவு சிறப்பு.

3. அவன் வெல்லினும் வெல்லும்—இங்கே, துணியாமையை உணர்த்தலால்—ஐயம்.

4. சாத்தனும் வந்தான்—இங்கே, கொற்றன் வந்த தன்றி என்னும் பொருளைத் தந்தால் — இறந்தது தழீஇய எச்சம்; இனிக்கொற்றனும் வருவான் என்னும் பொருளைத்தந்தால்—எதிரது தழீஇய எச்சம்.

5. எல்லாரும் வந்தார்—இங்கே, எஞ்சாப்பொருளைத் தருதலால்,—முற்று.

6. இரவும் பகலும்—இங்கே, எண்ணுதற்கண் வருதலால்—எண்.

7. ஆணுமன்று, பெண்ணுமன்று—இங்கே, இன்னதென்று தெரிவித்தலால்—தெரிநிலை.

8. பாலுமாயிற்று—இங்கே, அதுவே மருந்துமாயிற்று என்னும் பொருளைத் தருதலால்—ஆக்கம்.

சூ-ம். எதிர்மறை சிறப்பைய மெச்சமுற் றளவை
தெரிநிலை யாக்கமோ டும்மை யெட்டே. 262.

[ முற்றும்மைக்கு விதி. ]

M. 7. முற்றும்மை, ஒரோ விடங்களில் எச்ச உம்மையுமாம்.

உ-ம். அவர் பத்துங் கொடார் — சில கொடுப்பர் என்பது பொருள்.

சூ-ம். முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும்.

[ எச்ச உம்மைக்குச் சிறப்பு விதி. ]

M. 8. எச்ச உம்மை செவ்வெண்ணின்கண் வருமாயின் ஈற்றில் வரும்.

உ-ம். செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருளுந் தருந் திறத்தது வினையே.

சூ-ம். செவ்வெ ணீற்றதா மெச்ச வும்மை. 264.

[ மன் என்னும் இடைச்சொல். ]

M. 9. மன் என்பது—அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என்ற ஆறுபொருளையுந்தரும்.

உ-ம். 1. "அது மற்கொண்கன் தேரே" — இங்கே, வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால்—அசைநிலை.

2. "கூரியதோர் வாள் மன்"—இங்கே, இரும்பைத் துணித்ததென்னும் ஒழிந்த சொல்லை உணர்த்துதலால்—ஒழியிசை.

3. "பண்டு காடு மன்"-இங்கே, இன்றுவயலாயிற்று என்னும் பொருளைத் தருதலால்—ஆக்கம்.

4. "சிறியகள் பெறினே எமக்கீயு மன்னே"-இங்கே, இப்பொழுது அவன் இறந்தமையினால் எமக்கு ஈதல் கழிந்தது எனப் பொருள் படுதலால்—கழிவு.

5. "எந்தை எமக் கருளு மன்"—இங்கே, மிகுதியும் அருளுவான் என்னும் பொருளைத் தருதலால்—மிகுதி.

6. "மன்று உலகத்து மன்னியது புரிமோ"—இங்கே, இவ்விடைச் சொல்லடியாகப் பிறந்தவினைகள், நிலைபெறாத உலகத்தில் நிலைபெற்றதைச் செய்யவேண்டும் என்னும் பொருளைத் தருதலால்—நிலைபேறு.

சூ-ம். மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங்
கழிவு மிகுதி நிலைபே றாகும். 265.

[ மற்று என்னும் இடைச்சொல். ]

M .10. மற்று என்னும் இடைச்சொல்லானது வினைமாற்று, அசைநிலை, வேறு என்னும் மூன்று பொருளையுந்தரும்.

உ-ம். 1. "மற்றறிவாம் நல்வினை யாமிளைய மென்னாது"—இங்கே நல்வினையை விரைந்து அறிவாம் என்னும் வினையைமாற்றி இனிமேல் விரையாமல் அறிவாம் என்னும் வினையைத் தருதலால்--வினைமாற்று.

2. மற்றென்னை ஆள்க—இங்கே, வேறுபொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

3. "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான்முந் துறும்" — இங்கே, மற்றொன்று என்பது—ஊழ்வினைக்கு மறுதலையாவதோர் உபாயமெனப் பொருளைத் தருதலால் பிறிது என்பதாம்.

சூ-ம். வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே. 266.

[ கொல் என்னும் இடைச்சொல். ]

11. கொல் என்பது—ஐயம், அசைநிலை என்ற இரண்டு பொருளையுந் தரும்.

உ-ம். 1. இவ்வுருகுற்றிகோல் மகன் கோல்—ஐயம்.

2. கற்றதனாலாய பயனென்கோல்—இங்கே, வேறு பொருளின்மையால்—அசைநிலை.

ஓரோவிடத்து வினாப்பொருளையுந் தரும்.

உ-ம். நீகோல் செய்தாய்—நீயோ செய்தாய், வினா.

சூ-ம். கொல்லே யைய மசைநிலைக் கூற்றே. 267.

குறிப்பு. [ தொல்காப்பியம். ]

சூ-ம். 1. விழைவே கால மொழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.

2. அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பா னான்கே கொன்னைச் சொல்லே.

3. எற்றென் கிளவி யிறந்த பொருட்டே.

4. மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்.

5. தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே.

6. அந்தி லாங்க வசைநிலைக் கிளவியென்
றாயிரண் டாகு மியற்கைத் தென்ப.

7. எல்லே யிலக்கம்.

8. ஏயுங் குரையு மிசைநிறை யசைநிலை
யாயிரண் டாகு மியற்கைய வென்ப.

9. மியாயிக மோமதி யிகுஞ்சின் னென்னு
மாவயி னாறு முன்னிலை யசைச்சொல்.

10. அம்மகேட் பிக்கும்.

11. ஆங்க வுரையசை.

12. யாகா, —
பிறபிறக் கரோபோ மாதென வரூஉ
மாயேழ் சொல்லு மசைநிலைக் கிளவி.

13. ஆக வாக லென்ப தென்னு
மாவயின் மூன்றும் பிரிவி லசைநிலை.

14. நன்றீற் றேயு மன்றீற் றேயு
மந்தீற் றோவு மன்னீற் றோவு
மன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்.

இடையியன் முற்றிற்று.

# 5. உரியியல்.

[உரிச்சொல்லிலக்கணம்.]

1. உரிச்சொல்லானது பெயரையும் வினையையுந் தழுவிப் பொருளின் பண்பை உணர்த்துஞ் செய்யுட்குரிய திரிசொல்லாம். அப்பொருள் உயிர்ப்பொருளும் உயிரில்லாப்பொருளுமென இருவகையாம்.

இப்பொருள்களின் பண்பு—தொழிற்பண்பு, குணப்பண்பு என இருவகையாம்.

அவ்வுயிர்ப்பொருள்கள்—மெய், நா, மூக்கு, நாட்டம், செவி என்ற ஐம்பொறிகளால் பரிசம், இரசம், கந்தம், உருவம், சத்தம் என்ற ஐம்புலன்களையும் உணரும் வகையால் ஐவகையாம்.

N. B. இடைச்சொற்போல இல்லாமல், பண்பு முதலியவற்றை உணர்த்தற்குரியதாயும், பெரும்பான்மையாய்ச் செய்யுட்கே உரியதாயும் இருத்தலின், உரிச்சொல்லெனப் பெயர் பெற்றது.

உரிச்சொல்லும் பண்பையுணர்த்துமென்றால் உரியென வேறு பிரிப்பான் என், உரிக்கும் பண்புக்கும் பேதம் என்னையெனின்-செய்யுட்கே உரிய திரிசொல்லாகிப், பண்புக்கு விகுதி கூறியதுபோல் உரிக்கு எனப் பெரியோர் விகுதி கூறாமையால், பெரும்பான்மையாய் விகுதி பெறாதும் வேற்றுமையுருபை யேலாதும் வருவது உரிச்சொல்லாம்.

சூத்திரம்.

(1) பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
யொருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.

(2) உயிருயி ரில்லதாம் பொருட்குணம் பண்பே.

(3) மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளி
னொன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலி
னோரறி வாதியா வுயிரைந் தாகும். 268.

[ ஓரறிவுயிர். ]

ஃ. 2. புல், மரம் முதலியன மெய்யாற் பரிசித்து பரிசத்தை அறியும் ஓரறிவு உயிர்களாம்.

சூ-ம். புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர். 269.

[ ஈரறிவுயிர். ]

ஃ. 3. இப்பி, சங்கு முதலியன-மெய்யறிவேயன்றி நாவால் இரதத்தை யறியும் அறிவோடு ஈரறிவு உயிர்களாம்.

சூ-ம். முரணந் தாகிநா வறிவொடீ ரறிவுயிர். 270.

[ மூவறிவுயிர். ]

ஃ. 4. கறையான் எறும்பு முதலியன-மூக்காற் கந்தத்தை அறியும் அறிவினோடு மூவறிவு உயிர்களாம்.

சூ-ம். சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.()

[ நாலறிவுயிர். ]

M. 5. தும்பி வண்டு முதலியன கண்ணறிவோடு நாலறிவு உயிர்களாம்.

சூ-ம். தும்பிவண் டாதிகண் ணறிவினு லறிவுயிர்.()

[ ஐயறிவுயிர். ]

M. 6. வானவரும், மக்களும், நரகரும், விலங்கும், புள்ளும் மேற்கூறிய நாலறிவேயன்றிச் செவியாற் சத்தத்தை அறியும் அறிவோடு ஐயறிவு உயிர்களாம்.

N. B. மக்கட்கு விலங்கறிவுடன் பகுத்தறிவுங்கூடி ஆறறிவாம்; ஆறறிவு உடையாரை மக்களென்றும், ஐயறிவு உடையாரை விலங்கின் பெயரால் மாக்களென்றும் அழைப்பார்கள்.

சூ-ம். வானவர் மக்க ணரகர் விலங்குபுள்
ளாதி செவியறிவோ டையறி வுயிரே. 273.

[ உயிரில்லாப் பொருள்கள். ]

M. 7. அறிவு மயமாம் உயிரொன்றுமே யன்றி அவ்வுடம்பு முதலிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரில்லாத பொருள்களாம்.

சூ-ம். உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
உடன்முத லனைத்து முயிரல் பொருளே. 274.

[ உயிருடைப்பொருள்களின் குணப்பண்பு. ]

M. 8. சூத்திரம்.

அறிவரு ளாசை யச்ச மான
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய உடல்கொ ளுயிர்க்குணம். 275.

[ உயிருடைப்பொருள்களின் தொழிற்பண்பு. ]

M. 9. சூத்திரம்.

துய்த்த றுஞ்ச றொழுத லணிதல்
உய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம். 276.

[ உயிரில்லாப்பொருள்களின் குணப்பண்பு. ]

M. 10. சூத்திரம்.

பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்
அறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம். 277.

[இவ்விருபொருள்களுக்கும் பொதுவாகியதொழிற்பண்பு]

M. 11. சூத்திரம்.

தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்க லடைத லடுங்க லிசைத்தல்
ஈத லின்னன விருபொருட் டொழிற்குணம். 278.

[ ஒருகுணங்குறித்த பல உரிச்சொல். ]

M. 12. சால், உறு, தவ, நனி, கூர், கழி என்ற ஆறு உரிச்சொல்லும் மிகுதியாகிய ஒருகுணத்தை உணர்த்துஞ் சொற்களாம்.

உ-ம். 1. சாலப்பகை... ... ... ... ... சால.
2. உறு புகழ்... ... ... ... ... ...உறு.
3. தவச்சேய் நாட்டார் ... ... ... தவ.
4. நனி வருந்தினை ... ... ... ... நனி.
5. துனி கூர் எவ்வம் ...... ...... கூர்.
6. கழி கண்ணோட்டம் ... ... ... கழி.

சூ-ம். சால வுறுதவ நனிகூர் கழிமிகல். 279.

[ பலகுணங் குறித்த ஓர் உரிச்சொல். ]

M. 13. கடி என்னும் உரிச்சொல் காப்பு, கூர்மை, நாற்றம், விளக்கம் அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு, என்கிற பதின்மூன்று குணத்தையும் உணர்த்தும்.

உதாரணம்.

1. கடிநகர் ... ... காப்பு.
2. கடிநுனை ... கூர்மை.
3. கடிமாலை ... நாற்றம்.
4. கடிமார்பன். விளக்கம்.
5. கடிப்பேய் ... அச்சம்.
6. கடியரண் ... சிறப்பு.
7. கடிவிடுதும்.விரைவு.
8. கடிகாற்று ... ... மிகுதி.
9. கடிமணம் ... ... புதுமை.
10. கடி முரசு ... ... ஆர்த்தல்.
11. கடி மது ... ... ...வரைவு.
12. கடி வினை ... ... மன்றல்.
13. கடி மிளகு ... ... கரிப்பு.

முறையே வந்தன.

சூ-ம் கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும். 280.

குறிப்பு. [ தொல்காப்பியம். ]

சூ-ம். 1. உருவட் காகும் புரையுயர் பாகும்.
2. குருவுங் கெழுவு நிறனா கும்மே.
3. மல்லல் வளனே.
4. ஏபெற் றாகும். (பெற்று = பெருக்கம்.)
5. பயப்பே பயனாம்,
6. பசப்புநிற னாகும்.
7. இயைபே புணர்ச்சி.
8. இசைப்பிசை யாகும்.
9. அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி.
10. மழவுங் குழவு மிளமைப் பொருள.
11. சீர்த்தி மிகுபுகழ்.
12. மாலை யியல்பே.
13. கதழ்வுந் துனைவும் விரைவின் பொருள.
14. அதிர்வும் விதிர்ப்பு நடுக்கஞ் செய்யும்.
15. வார்தல் போக லொழுகன் மூன்று
நேர்வு நெடுமையுஞ் செய்யும் பொருள.
16. தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.
17. கெடவரல் பண்ணையா யிரண்டும்விளை யாட்டு.
18. தடவுங் கயவு நளியும் பெருமை.
19. அவற்றுள்,—
தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்.
20. கயவென் கிளவி மென்மையு மாகும்.

21. நளியென் கிளவி செறிவு மாகும்.
22. பழுதுபய மின்றே.
23. சாயன் மென்மை.
24. முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே.
25. வம்புநிலை யின்மை.
26. மாதர் காதல்.
27. நம்பு மேவு நசையா கும்மே.
28. ஒய்த லாய்த னிழத்தல் சாஅ
யாவயி னான்கு முள்ளத னுணுக்கம்.
29. புலம்பே தனிமை.
30. துவன்றுநிறை வாகும்.
31. முரஞ்சன் முதிர்வே.
32. வெம்மை வேண்டல்.
33. பொற்பே பொலிவு.
34. வறிது சிறிதாகும்.
35. ஏற்ற நினைவுந் துணிவு மாகும்.
36. பிணையும் பேணும் பெட்பின் பொருள.
37. பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்.
38. படரே யுள்ளல் செலவு மாகும்.
39. பையுளுஞ் சிறுமையு நோயின் பொருள.
40. எய்யா மையே யறியா மையே.
41. நன்றுபெரி தாகும்.
42. தாவே வலியும் வருத்தமு மாகும்.
43. தெவுக்கொளற் பொருட்டே.
44. தெவ்வுப்பகை யாகும்.
45. விறப்பு முறப்பும் வெறுப்புஞ் செறிவே.
46. அவற்றுள்,—
விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்.

47. கம்பலை சும்மை கலியே யழுங்க
லென்றிவை நான்கு மரவப் பொருள.

48. அவற்றுள்,—
அழுங்க லிரக்கமுங் கேடு மாகும்.

49. கழுமென் கிளவி மயக்கஞ் செய்யும்.

50. செழுமை வளனுங் கொழுப்பு மாகும்.

51. விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்.

52. கருவி தொகுதி.

53. கமநிறைந் தியலும்.

54. அரியே யைம்மை.

55. கவவகத் திடுமே.

56. துவைத்தலுஞ் சிலைத்தலு மியம்பலு மிரங்கலு
மிசைப்பொருட் கிளவி யென்மனார் புலவர்.

57. அவற்றுள்,—
இரங்கல் கழிந்த பொருட்டு மாகும்.

58. இலம்பா டொற்கமா யிரண்டும் வறுமை.

59. கவர்வுவிருப் பாகும்.

60. சேரே திரட்சி.

61. வியலென் கிளவி யகலப் பொருட்டே.

62. பேநா முருமென வரூஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சப் பொருள.

63. வயவலி யாகும்.

64. வாளொளி யாகும்.

65. துயவென் கிளவி யறிவின் றிரிபே.

66. உயாவே யுயங்கல்.

67. உசாவே சூழ்ச்சி.

68. வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்.

69. கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள.

70. திறத்தரு வுணர்த்தற்கு முரிய வென்ப.
71. நொசிவு நுழைவு நுணங்கு நுண்மை.
72. புனிறென் கிளவியீன் றணிமைப் பொருட்டே.
73. நனவே களனு மகலமுஞ் செய்யும்.
74. மதவே மடனும் வலியு மாகும்.
75. மிகுதியும் வனப்பு மாகலு முரித்தே.
76. புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி.
77. அமர்தன் மேவல்.
78. யாணுக் கவினும்.
79. பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள.
80. ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே.
81. ஐவியப் பாகும்.
82. முனைவுமுனி வாகும்.
83. வையே கூர்மை.
84. எறுழ்வலி யாகும்.

உரியியன் முற்றிற்று.

T. H. SCHOOL.
V. Soundararajan.
KUMBHAKONAM.

# பலபொருள் குறித்துவரும் விகுதிகள்.

| விகுதி. | | உதாரணம். |
|---|---|---|
| அம. | 1. வினையெச்ச விகுதி. | செய்ய; மெல்ல. |
| | 2. பெயரெச்சம். | செய்த; பெரிய. |
| | 3. பலவின்படர்க்கைமுற்று; பெயர். | வந்தன; கொடியன. |
| | 4. வியங்கோள். | எழுந்தருள. |
| அம். | 1. பன்மைத்தன்மை. | நடந்தனம்; பெரியம். |
| | 2. தொழிற்பெயர். | ஆட்டம். |
| | 3. பண்புப்பெயர். | நலம். |
| | 4. வினைமுதற்பொருள். | எச்சம். |
| | 5. செயப்படுபொருள். | தொல்காப்பியம். |
| | 6. கருவிப்பொருள். | நோக்கம். |
| அல். | 1. தொழிற்பெயர். | செயல். |
| | 2. ஒருமைத்தன்மை வினைமுற்று. | நடப்பல்=நடப்பேன். |
| | 3. வியங்கோள். | எனல்=என்க. |
| | 4. எதிர்மறை வியங்கோள். | எனல்=எனற்க. |
| | 5. எதிர்மறை யேவல். | படியல்=படியாதே. |

| | | | |
|---|---|---|---|
| அன். | 1. | ஆண்பால் படர்க்கைப் பெயர்; குறிப்புவினைமுற்று. | அறிஞன். |
| | 2. | வினைமுற்று. | வந்தனன். |
| | 3. | ஒருமைத்தன்மை வினைமுற்று. | செய்வன்=செய்வேன். |
| ஆ. | 1. | பலவின்படர்க்கை வினைமுற்று; பெயர். | நடவா. |
| | 2. | இறந்தகால வினையெச்சம். | செய்யா=செய்து. |
| ஆல். | 1. | தொழிற்பெயர். | ஓரால்=ஒருவுதல். |
| | 2. | எதிர்கால வினையெச்சம். | உண்டால். |
| | 3. | குறிப்பு வினையெச்சம். | அல்லால். |
| | 4. | எதிர்மறை ஒருமையேவல். | மறால்=மறுக்காதே. |
| ஆன். | 1. | ஆண்பால் படர்க்கைப்பெயர்; குறிப்புவினைமுற்று. | பெரியான். |
| | 2. | தெரிநிலைவினைமுற்று. | வந்தான். |
| இ. | 1. | ஆண்பால் படர்க்கைப்பெயர்; குறிப்புவினைமுற்று. | வில்லி. |
| | 2. | பெண்பால். | பொன்னி. |
| | 3. | ஒருமை முன்னிலை வினைமுற்று. | வருதி=வருவாய்-வருகிறாய். |
| | 4. | வினையெச்சம். | ஓடி. |
| | 5. | வினைமுதற் பொருள். | அலரி. |
| | 6. | செயப்படுபொருள். | ஊருணி. |
| | 7. | கருவிப்பொருள். | மண்வெட்டி. |
| | 8. | ஒருமையேவல். | காட்டுதி=காட்டு. |
| உ. | 1. | வினையெச்சம். | நடந்து. |

| | | |
|---|---|---|
| | 2. தொழிற்பெயர். | வரவு. |
| | 3. பண்புப்பெயர். | மழவு. |
| உம். | 1. ஏவற்பன்மை. | வாரும். |
| | 2. படர்க்கை வினைமுற்று. | செய்யும். |
| | 3. எதிர்கால பெயரெச்சம். | நடக்கும் மனிதன். |
| | 4. வினையெச்சம். | செய்தலும் போனான். |
| | 5. வியங்கோட்பொருள். | காத்தல் வேண்டும்=காக்க. |
| ஏல். | 1. எதிர்மறை யேவல். | படியேல். |
| | 2. எதிர்கால வினையெச்சம். | உண்டானேல். |
| ஐ. | 1. ஒருமை முன்னிலை வினைமுற்று. | செய்தனை. |
| | 2. தொழிற்பெயர். | கொலை. |
| | 3. பண்புப்பெயர். | தொல்லை. |
| | 4. வினைமுதற்பொருள். | பறவை. |
| | 5. செயப்படு பொருள். | தொடை. |
| | 6. கருவிப்பொருள். | பார்வை. |
| கு. | 1. பண்புப்பெயர். | நன்கு. |
| | 2. பிறவினை விகுதி. | போக்கு. |
| | 3. தொழிற் பெயர். | போக்கு=போதல். |
| | 4. ஒருமைத்தன்மை வினைமுற்று. | உண்கு=உண்பேன். |
| டு. | 1. ஒன்றன்படர்க்கைக் குறிப்புவினைமுற்று. | உண்டு=உளது. |

| | | | |
|---|---|---|---|
| | 2. | ஒருமைத்தன்மை வினைமுற்று. | உண்டு=உண்டேன். |
| | 3. | பிறவினை விகுதி. | உருட்டு. |
| கை. | 1. | தொழிற் பெயர். | வருகை. |
| | 2. | முறைப்பெயர். | தங்கை. |
| சி. | 1. | பண்புப்பெயர். | மாட்சி. |
| | 2. | தொழிற்பெயர். | காட்சி. |
| தல். | 1. | தொழிற்பெயர். | படித்தல். |
| | 2. | வியங்கோள். | மாசிலனுதல்=மாசிலனுகுக. |
| து. | 1. | ஒன்றன் படர்க்கைவினைமுற்று. | நடந்தது; உளது. |
| | 2. | பிறவினை விகுதி. | நடத்து. |
| | 3. | தொழிற்பெயர். | பாய்த்து=பாய்தல். |
| | 4. | ஒருமைத்தன்மை வினைமுற்று. | வந்து=வந்தேன். |
| | 5. | வினையெச்சம். | அல்லாது=அல்லாமல். |
| நர். | 1. | பண்புப்பெயர் விகுதி. | நன்னர்=நன்மை. |
| | 2. | பெயர் விகுதி. | பொருநர்=உயுத்த வீரர். |
| பு. | 1. | பண்புப்பெயர் | நண்பு. |
| | 2. | தொழிற்பெயர். | படிப்பு. |
| | 3. | வினையெச்சம். | செய்பு=செய்து. |
| | 4. | பிறவினை விகுதி. | எழுப்பு. |
| மார். | 1. | பலர்பால் படர்க்கைப்பெயர். | குருமார். |

| | | | |
|---|---|---|---|
| | 2. | வினைமுற்று. | கொண்மார். |
| மை. | 1. | பண்புப்பெயர். | நன்மை. |
| | 2. | தொழிற்பெயர். | செய்தமை. |
| | 3. | வினையெச்சம். | செய்யாமை=செய்யாமல். |
| | 4. | தன்மைப்பொருள். | ஆண்மை, பெண்மை. |
| வி. | 1. | தொழிற்பெயர். | கேள்வி. |
| | 2. | பிறவினை விகுதி. | செய்வி. |
| றி. | 1. | பண்புப்பெயர். | நன்றி. |
| | 2. | எதிர்மறை குறிப்புவினையெச்சம். | அன்றி. |
| று. | 1. | ஒன்றன்பாற்கை வினைமுற்று. | போயிற்று. |
| | 2. | பண்புப்பெயர். | நன்று. |
| | 3. | ஒருமைத்தன்மை. | சென்று=சென்றேன். |
| | 4. | பிறவினை விகுதி. | பயிற்று. |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 19 | கூறன் மாறுகொளக். . | கூறன் மிகைபடக்கூறல், கூறியது கூறன் மாறுகொளக். |
| 9 | 15 | ஸைமஸ்கிருதம | ஸம்ஸ்கிருதம். |
| 10 | 11 | உடமை | உடைமை. |
| 11 | 7 | மெய்மையயுஞ்சார்ந்து . | மெய்மையயும் மொழியையுஞ் சார்ந்து. |
| 14 | 5 | மேய்மேலும். | மெய்மேலும். |
| 15 | 6 | ஒரு | கால். |
| 17 | 3 | குறிலுக்கும் இடை... | குறிலுக்கும் பின் இடை. |
| 18 | 9 | ஒற்றும் நெடிலும் | நெடிலும் ஒற்றும். |
| 36 | 5 | பவர்பால் | பெண்பால். |
| 40 | 7 | உயிர்திணை | உயர்திணை. |
| 41 | 21 | வருவது | வருது. |
| 46 | 22 | வேண்டுக | காக்க. |
| 48 | 17 | மார் | ஓம்-மார். |
| 53 | 18 | புணைப்பந்து | புணைபந்து. |
| 96 | 22 | [illegible] | [illegible] |